Regd. No. 2975

ஸ்ரீ:

ஸ்ரீ ராமாநுஜன் 324

ஆசிரியர்: P. B. அண்ணங்கராசாரியர்.

SRI RAMANUJAN

Editor:
Mahamahimopadhyaya
P. B. ANNANGARACHARYA, KANCHIPURAM-631503.

வருஷச் சந்தா ரூ. 10. ஜீவியச் சந்தா ரூ. 100

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.



ஸ்ரீ ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி*
தாழ்வாது மில்குரவர் தாம்வாழி—ஏழ்பாரு
முய்ய வவர்க ளுரைத்தவைகள் தாம்வாழி*
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

1975ஸு ஆனிமீ

ஸ்ரீராமாநுஜஜநாங்குர் சந்தா வரவுகள்

(முன் தொடர்ச்சி)

P. N. ரங்கஸ்வாமி, சித்தையன்கோட்டை ஜீவியச் சந்தா ரூ 100
K. S. ராமநாதன் செட்டியார் களம்பூர்
A. A. லக்ஷ்மீநரஸிம்ஹன், சென்னை-49
ஹரிகோவிந்த ராமாநுஜதாஸர், பாண்டிச்சேரி
B. N. ரங்கசாமி, பெங்களூர்-42
V. P. சடகோபன், பம்பாய்
P. விஜயராகவன், சேலம்
K. சந்தானம், சென்னை-28
K. வெங்கடேசன், காஞ்சீபுரம்
ஆற்காடு தாமோதர நாயகர், காஞ்சீபுரம்
V. அனந்தாசாரி, சென்னை-33
K. S. க்ருஷ்ணன், திருநெல்வேலி

பெரியாரின் பரமபத ப்ராப்தி


ஹைதராபாத் நகரத்தில் ப்ரஸித்தராக எழுந்தருளியிருந்த ஸ்ரீமான் உ. வே. M. ஸௌந்தரராஜ ஐயங்கார் ஸ்வாமி ஸமீபத்தில் திருநாடலங்கரித்ததை மிகுந்த நிர்வேதத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த ஸ்வாமி ஸ்ரீபெரும்பூதூர் ப்ராந்தத்தைச் சேர்ந்தவரே. பல வருடங்களாக ஹைதராபாத் மஹாநகரத்தில் சென்று சேர்ந்து அவ்விடத்தில் உயர் பதவிகளில் வாழ்ந்தவர். மிகப் பெரிய அதிகாரிகளெல்லாம் இந்த ஸ்வாமிக்கு விதேயர்களாக விருந்தனர். விசேஷித்து அடியேனிடம் மிக்க அன்பு கொண்டவர். இந்த ஸ்வாமியினுடைய வியோகத்தைப் பற்றிய என்னுடைய சோகத்தை அவருடைய குடும்பத்தினர்க்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அவருடைய புத்ர பௌத்ராதிகள் மேன்மேலும் க்ஷேமவங்களைப் பெற்றுச் சிறந்தோங்கத் தேவப்பெருமாளைப் பிரார்த்திக்கிறேன். *(P. B. A.)*

நன்கொடை வரவேற்பு

வேலூரில் ப்ரபல ஆடிடராக விளங்கும் ஸ்ரீமான் உ. வே *K. V.* ராகவாசாரியர் ஸ்ரீ வைஷ்ணவ வுலகினில் ப்ரஸித்தமானவரே. ஸங்கீத ஸாஹித்ய கலாநிதியான இவர் நமது ஸுஹ்ருந்மணிகளிலொருவர். இவருடைய ஸஹோதரர்களான ஸ்ரீமான் K. V. நரஸிம்ஹாசார்யர் முதலானவர்களும் நம் திறத்து அபிமானம் மிக்கவர்களாயிருந்து வருகிறார்கள். ஸ்ரீமான் K. V. ராகவாசாரியர் ஸ்வாமி நடைபெற்றுவரும் பகவத் விஷயப் பதிப்புக்காக ரூ 1000 நன்கொடையளித்தார். பதிப்பு விரைவில் நிறைவேற மங்களாசாஸனமும் செய்தார். அவர் திறத்து நன்றி யறிதல் உடையோம்.

(P. B. A.)

ஸ்ரீ ராமாநுஜன்—524



ஆசிரியர்:
மஹாமஹிமோபாத்யாய ஸ்ரீகாஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர்.

ஸம்புடம் 27 | ராக்ஷஸ ஆனிமீ 10–6–75 | ஸஞ்சிகை 12

இருபத்தேழாவது ஸம்புடத்தின் ஸமாப்தி

பன்னிரண்டு ஸஞ்சிகைகள் கொண்டது ஒரு ஸம்புடமாகையாலே பன்னிரண்டாவது ஸஞ்சிகையான இவ்விதழோடு இருபத்தேழாவது ஸம்புடம் முற்றுப்பெற்றதாயிற்று. நமது ஸ்ரீ ராமாநுஜனுக்கு இருபத்தேழாவது பிராயம் பூர்த்தியடைகின்றதென்றவாறு. இதுவரையில் நமது பத்திரிகை இடையூறொன்றுமின்றி நடைபெற்று வருவதற்குறுப்பாக அமைந்த பகவத் பாகவத கடாக்ஷ விசேஷம் இனிமேலும் தொடர்ந்து வரவேண்டுமென்று நாம் பிரார்த்திக்கவேண்டிய அவசியமில்லையாகிலும் புருஷார்த்தமாகையாலே பிரார்த்திக்கிறோம். சென்ற மாசி பங்குனி மாதங்களில் பத்ராதிபஸ்வாமியின் திருமேனி நிலை அநுகூலமாக இல்லாததனால் சிறிது கவலைக்கிடமிருந்தது. இப்போது பரிபூர்ண ஆநுகூல்யம் ஏற்படாவிடினும் முன்னிருந்த கவலை சிறிது குறைந்திருக்கிறதென்னலாம். பரிபூர்ண ஆநுகூல்யம் ஏற்படும்படி பெருந்தேவி மணவாளனை பேரருளாளனும் ஆப்தர்களான பாகவதோத்தமர்களும் அருள்புரியவேணும்.



இங்ஙனம்,

தி. அ. அனந்தாழ்வான்.

பேரருளாளன் பெருந்தேவித் தாயார் திருவடிகளே சரணம்
ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

ஸ்ரீ காஞ்சி. பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர்

தமது எண்பத்து நான்காவது பிராயப்பூர்த்தியின்

நினைவு மலராக

ஆனந்தஹு பங்குனிவிசாகத்தன்று எழுதத் தொடங்கியது.

1. ஆசாரியர்களின் திருநாவீறு

ஸ்ரீவைஷ்ணவ ஸப்ரதாயத்தில் தமிழ் பாஷையில் முதன்முதலாக அவதரித்த வியாக்கியான நூல் ஆறாயிரப்படி யென்பது. இது, திருவாய்மொழிக்குத் திருக்குருகைப்பிரான் பிள்ளான் இட்டருளின வியாக்கியானம். இதன் பெருமையை உபதேசரத்தினமாலையில் மணவாளமாமுனிகள் *தெள்ளாருஞானத் திருக்குருகைப் பிரான் பிள்ளான் எதிராசர் பேரருளால்—உள்ளாருமன்புடனே மாறன் மறைப் பொருளை அன்றுரைத்தது, இன்பமிகுமாறுயிரம்* என்ற பாசுரத்தினால் வெளியிட்டருளினர் "இன்பமிகுமாறுயிரம்" என்றது விலையுயர்ந்த ஸ்ரீஸூக்தி. அந்த வியாக்கியானத்திலுள்ள இன்பமிகுதியை அநுபவரஸிகர்களே அறியக்கூடும்.

இவ்வாறுயிரப்படிக்கு முன்பும் (ஸ்ரீவைஷ்ணவ ஸப்ரதாயத்தில்) தமிழ் வியாக்கியான நூல்கள் (அல்லது) தமிழ் வசன நூல்கள் சில ஆசிரியர்களால் அருளிச் செய்யப்பட்டிருக்கவுங் கூடும். ஆனால் அப்படி ஒரு நூலும் நமக்குத் தெரியவரவில்லை. ஆறாயிரப்படி யென்னும் வியாக்கியான நூலையே நமது ஸம்ப்ரதாயத்திற்கு முதற்றமிழுரை நூலாகக் காண்கிறோம். இந்நூல் அவதரித்து இற்றைக்கு ஏறக் குறைய ஆயிரமாண்டுகளாகின்றன. இது வெறுந்தமிழ் நூலையன்று. மணிப்ரவாள வியாக்கியானமென்று பெயர் பெற்றது. அதாவது, தமிழ்ச்சொற்களும் ஸம்ஸ்க்ருத வாக்யங்களும் விரவியெழுதப்பட்ட வியாக்கியானமென்றவாறு. இந்தச் சேர்த்தியழகு வெகு அற்புதமானது. 'உபய வேதாந்த ப்ரவர்த்தகாசார்யர்கள்' என்று நம் ஆசாரியர்கள் கொண்ட சிறப்புப்பெயரானது இத்தகைய மணிப்ரவாள நூல்களினாலேயே திண்மைபெறுகின்றது. மிகப் பழைய காலத்தில் ஜைந பௌத்தர்களின் மரபிலும் மணிப்ரவாள நூல்கள் தோன்றி யிருப்பதாகச் சில விமர்சகர்கள் சொல்லக்கேட்டிருக்கிறோம். அவற்றில் ஸாதாரண ஸம்ஸ்க்ருத பதங்களும் தமிழ்ச் சொற்களும் கலந்திருக்கக் கூடுமேயல்லது, ச்ருதிஸ்ம்ருதீதிஹாஸ புராண வசனங்களும் காவ்யநாடகாலங்கார ச்லோகங்களும் பலவகைத் தமிழ் நூல் மேற்கோள்களும் கலந்து கமழ ப்ரஸக்தி யிராது.

ஆறாயிரப்படிக்குப்பின் பெரியவாச்சான்பிள்ளை வடக்குத் திருவீதிப்பிள்ளை போல்வார் இட்டருளின வியாக்கியானங்களின் மாதுர்யமும் காம்பீர்யமும் அளவு கடந்தது. ஆறாயிரப்படியானது வெகு ஸங்க்ரஹமான தோரணையில் அமைந்ததாகையாலே அதில் பூர்வாசாரியர்களின் ஸம்வாதங்களோ இதிஹாஸ புராணாதிச்லோ

கங்களின் இன்சுவைப் பொருள்களோ காணப்பெறுதற்கு இடமில்லையாயிற்று. பெரியவாச்சான்பிள்ளையும் வடக்குத் திருவீதிப்பிள்ளையும் இட்டருளின வியாக்கியானங்களின் சுவைமிகுதியைப் பற்றிப் பேசுவதற்கு நாமோ அதிகாரி?

இவர்களின் சொல்தொடையழகு 'என்னே! என்னே!' என்று கல்நெஞ்சையு முருக்கவல்லது. இவர்களின் வியாக்கியானங்கள் திருவவதரிக்கவில்லையாகில் ஆழ்வார்களின் திவ்யப்பிரபந்தங்களுக்கு ஒருவிதமான மதிப்பும் இல்லையாகும்.

கம்பருடைய காலத்தில் திவ்யப்ரபந்தங்களுக்கு விசேஷமாக வியாக்கியானங்கள் அவதரித்திராமையாலே அவர் மூலத்தின் சுவையில் மாத்திரமே யீடுபட்டு (சடகோபரந்தாதியில்) "அந்தமிலா மறையாயிரத் தாழ்ந்த அரும்பொருளைச், செந்தமிழாகத் திருத்திலனேல் நிலத் தேவர்களும், தந்தம் விழாவுமழகு மென்னாம்—குருகூர் வந்த பண்ணவனே" என்று குழைந்து பேசிப்போனார். வியாக்கியானங்கள் அவதரித்த பின்பு இவ்வுலகுக்கே விளைந்த பெரும் பாக்கியத்தை மணவாளமாமுனிகள் உபதேச ரத்தினமாலையில் "பெரியவாச்சான்பிள்ளை பின்புள்ளவைக்குந் தெரிய, வியாக்கியைகள் செய்வால்—அரிய, அருளிச்செயல் பொருளை ஆரியர்கட்கிப்போது அருளிச் செயலாய்த் தறிந்து" என்ற பாசுரத்தினால் பரமார்த்தமாக வருளிச் செய்தார்.

பலகாலம் ஆசார்ய ஸந்நிதியில் சுச்ருஷைகளைப் பண்ணிப் பலகால் கேட்டுக் கேட்டுணர வேண்டிய மேம்பொருள்கள் நிரம்பிய அந்த அரிய பெரிய வியாக்கியானங்களைக் குருமுகமாகக் கேளாமல் ஏடு பார்த்து அந்வயிக்கப் புகுமவர்கள் ஒன்றும் அறியகில்லார்கள். அன்னவர்கள் அந்த வியாக்கியானங்களினால் இறையும் பயன் பெறார்களாதலால் 'அவற்றில் என்ன இருக்கிறது?' என்றும் 'நமக்குப் புரியாத நடையில் ஏதோ எழுதி வைத்திருக்கிறார்கள்' என்றும் சொல்லிப் போது போக்கக் கடமைப்பட்டவராயினர். உண்மையில் முற்காலத்தில் திவ்யதேசந்தோறும் பலவிடங்களில் காலக்ஷேபங்கள் நடந்து கொண்டிருக்கும்; வியாக்கியான ஸ்ரீகோசங்களை வைத்துக்கொண்டு பங்க்தியடைவே ஸேவித்துப் பொருள் சொல்வதும் கேட்பதுமாகிற பத்ததி இடையறாது நடந்து கொண்டிருந்தது. இக்காலத்தில் அந்த பத்ததி மிக மிக விரளமாயிற்று. உபந்யாஸங்கள் சொல்லுவதும் கேட்பதுமே பெரும்பான்மையான பழக்கமாய் விட்டபடியால் பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளின் ஆழ்பொருள்களை யறிவார் மிகச்சிலரே யாயினர்.

பூருவர்கள் தங்கள் திவ்ய க்ரந்தங்களில் அரிய பெரிய சாஸ்த்ரார்த்தங்களை யிடுவது போலவே விநோதமான சில லௌகிக வார்த்தைகளையும் இடுவதுண்டு. அவற்றின் பொருளும் உபதேசகம்யங்களேயொழிய ஏடு பார்த்துத் தெரிந்து கொள்ளக்கூடியவையல்ல. இந்த வியாக்கியானங்களுக்கு முன்னமே சிலர் அரும்பதவுரைகள் பணித்து அவையும் அச்சேறியிருக்கின்றன. அவற்றைப் பார்க்கும்போது அவ்வுரைகாரர்களுங்கூட சிலவிடங்களில் ஸதாசார்ய பரம்பரையில் கேட்டிலர் போலும் என்று நினைக்கநேர்கின்றதென்று ஒரு ஸமயம் கோயில் பத்தராவி ஸ்வாமி பணிக்கக் கேட்டதுண்டு. அந்த ஸ்வாமி எடுத்துக் காட்டியருளின ஒரு விஷயத்தையும் இங்குக் குறிப்பிடுகின்றேன்;

பெரிய திருமொழியில் (5—6—2) "திருத்தண்கா லூரானைக் கரம்பனூருத்தமனை" என்ற விடத்துப் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தில்—(கரம்பனூருத்தமனை) வழிக்கரையிலே திருவாசலுக்கொரு கதவிடாதே நெந்துகிடக்கிறவனை" என்று அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. கோயில் ஸமீபத்தில் 'உத்தமர் கோயில்' என்றொரு திவ்யதேசமுண்டே; அதற்குத்தான் திருக்கரம்பனூரென்று திருநாமம். அத்தலத்து எம்பெருமான் உத்தமனென்று திருநாமம் வஹித்திருப்பதை ரஸோக்தியாக நிர்வஹிக்கிறார் பெரியவாச்சான்பிள்ளை. ஒருவர்க்கும் ஒருபோதும் ஸேவை ஸாதியாத பெருமான் அதமன்; வெகு சிரமத்தினால் ஸேவை ஸாதிக்கும் பெருமான் மத்யமன்; அநாயாஸமாக ஸேவை ஸாதிக்கும் பெருமான் உத்தமன்—என்று இவ்வகையான திருவுள்ளங்கொண்டு பெரியவாச்சான்பிள்ளை மேலே குறித்த ஸ்ரீஸூக்தியை யருளிச்செய்திருக்கிறார். திருக்கரம்பனூர்த் திருமால் தேடிச் செல்லவேண்டாதே வழிக்கரையிலே யிருப்பது ஒரு ஸௌலப்யம். அதற்குமேல், திருவாசலுக்குக் கதவிடாதே யிருப்பது மற்றொரு ஸௌலப்யாதிசயம். பெரியவாச்சான்பிள்ளை காலத்தில் இந்த ஸன்னிதி செல்வக் குறைவினால் திருவாசலுக்குக் கதவிடப் பெருமையிருந்தது. [இருந்த கதவு ஜீர்ணமாயிற்று; புநருத்தாரம் செய்யப்படவில்லை]. அதனை ஐச்வர்யக் குறைவினாலானதென்று கொள்ளாமல் ஸௌலப்ய பரமகாஷ்டைக்கு அநுகுணமாக யோஜித்தது பெரியவாச்சான்பிள்ளையின் விலக்ஷணசாதுர்யமாகும். உலகில் ப்ரபுக்கள் தங்கள் மாளிகைகளுக்குப் பல கதவுகளிட்டுத் தாளிட்டு ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமல் கிடப்பதும், அர்த்திகள் வந்தால்—"நித்ராதி ஸ்நாதி புங்க்தே சலதி கசபரம் சோஷயத்யந்தராஸ்தே, தீவ்யத்யக்ஷைர் ந சாயம் கதிதுமவஸரோ பூய ஆயாஹி யாஹி" என்று வெறுத்துத் தள்ளுவதற்கு வாசலிலே பல சேவகர்களை நிறுத்தவைத்தும் இப்படியாகத் தங்களுடைய துர்க்குணங்களைப்பரப்பிக் கொள்ளுகிறார்கள். கரம்பனூர்த் திருமால் அங்ஙனன்றிக்கே திருவாசலுக்குக் கதவுமிடாதே வழிக்கரையிலே கிடந்து அநாயாஸமாக ஸேவை ஸாதிக்கிற ஸௌலப்யம் என்னே! என்று ஈடுபட்டுப், இந்த குணாதிசயத்திற்காகவே உத்தமனென்று திருநாமமாயிற்றென்று காட்டியும் இன்சுவை மிக்க பங்க்திகளைப் பணித்திருக்கிறார் பெரியவாச்சான்பிள்ளை.

இங்கு அரும்பதவுரைகாரர் எழுதியிருப்பதென்னவென்றால், "எல்லாரும் நடக்கும் வழியாகையாலே ஸேவிப்பார் மிகுகையால் கதவிட அவஸரமில்லையென்று கருத்து" என்றெழுதியுள்ளார். இதில் ஒரு சுவையுமில்லை; பெரியவாச்சான்பிள்ளை திருவுள்ளம் பற்றின கருத்துமன்றிது. ஸேவிப்பார் மிகுகையால் கதவிட அவஸரமில்லை யென்னும்படியான நிலைமை திருக்கரம்பனூர்க்கு ஸம்பாவிதமுமன்று. இங்ஙனே பல பல விஷயங்கள் எடுத்துக் காட்டவேண்டியவை யுண்டு. அரும்பதவுரைகாரர்களிடத்துப் பக்ஷபாதத்தினால் சிலர் 'அவர் காட்டிய கருத்துத்தான் நன்று' என்று ஸாதிக்க முன் வருவரேல் அதற்கு நாம் ப்ரதிவாதம் செய்வோமல்லோம். "கீர்த்தி மூர்த்தியான கோயில் பத்தராவி ஸ்வாமி பெரியார்களிடம் கேட்டதை ஸாதித்தார்; அதையிங்குத் தெரிவித்தபடி.

கண்ணபிரான் தூதுசென்றான் என்ற குணவிசேஷத்தில் ஈடுபட்டு ஆசார்யர்கள் பங்க்தி யெழுதுகையில் "கழுத்திலே ஓலைகட்டித் தூதுபோனவன்" என்று

எழுதுகிறார்கள். இப்பங்க்தியைப் பெரிய திருமொழி 2—2—2 வியாக்கியானத்திலும், "மஹாபாரதத்தால் தூதுபோனவனேற்றஞ் சொல்லுகிறது" என்ற ஸ்ரீ வசநபூஷணஸூக்தி வியாக்கியானத்திலும் மற்றுஞ் சிலவிடங்களிலும் காணலாம். கழுத்திலே ஓலைகட்டித் தூது போகையாவது என்ன? என்று பலரும் கேட்பதுண்டு; ஒரு பண்டிதர் இதற்குப் பொருள் உபந்யஸித்தார்—ஏகாந்தமாகத் தூதுசெல்லாமல் 'நான் தூது செல்பவன் காண்மின்' என்று ஒரு ஓலையிலேயெழுதிக் கழுத்திலே தொங்கவிட்டுக்கொண்டு சென்றான் என்பதாக. இதுவன்று பொருள்.

முற்காலத்தில் [தபால் போக்குவரத்து இல்லாத நாளில்] அவச்யமாகச் சில க்ராமங்களுக்குத் தபால் அனுப்பவும் உடனே பதில் தெரிந்து கொள்ளவும் நேர்ந்தால் ஒரு நாயை வளர்ப்பர்களாம். அதற்குச் சில நபர்களை க்ராமாந்தரங்களில் பழக்கி வைப்பர்களாம். அவச்யமுள்ள ஸமயங்களில் ஒரு நீட்டோலையில் ஸமாசாரத்தையெழுதி அவ்வோலையை நாயின் கழுத்திலே கட்டி விடுவார்களாம். உடனே நாய் ஓடிச்சென்று குறிப்பிட்டவூர்க்குப் போய் அந்த நபர் முன்னே நிற்குமாம். அவர் அதைத்தெரிந்து கொண்டு நாயின் கழுத்தில் கட்டியிருந்த ஓலையை யெடுத்துப் பார்த்துச் செய்தியறிந்து கொண்டு பதில் எழுதி அந்தநாயின் கழுத்திலேயே கட்டிப்போகவிடுவராம். இவ்விதமாகத் தபால் போக்குவரத்து முன்று நடந்து கொண்டிருந்தது. இந்தச்வவ்ருத்தியைக் கண்ணபிரான் ஸ்வவ்ருத்தியாகக் கொண்டு தூது நடந்தானே! என்று ஆசாரியர்கள் உள்குழைந்து எழுதுகிறபடி. தூது செல்லும் போது கண்ணபிரான் தன்கழுத்திலே ஓலைகட்டிக்கொண்டு எழுந்தருளினதாகப் பொருளன்று. உபமானரீதியில் எழுதப்பட்ட பங்க்தி இது. ச்வாவானது கழுத்திலே ஓலைகட்டிச் செல்லுவதுண்டே, அப்படிப்பட்ட இழிவான ஜந்துவின் செயலை அந்தோ! பராத்பரன் செய்தான் காணும்! என்று இவ்வளவு பொருளை உள்ளடக்கி "கழுத்திலே ஓலைகட்டித் தூது போன வேற்றம்" என்று சுருக்கமாக எழுதினார்கள் ஆசாரியர்கள். இப்படிப்பட்ட பங்க்திகள் நமது ஸம்ப்ரதாய நூல்களிலே பல நூற்றுக்கணக்கிலுள்ளன. பண்டைக்காலத்துத் தமிழர்கள் எவ்வளவோ ஆச்சரியமாக எழுதியிருக்கிறார்களென்று சொல்லுவதுண்டு; அவர்களது நூல்களிலும் இப்படிப்பட்ட சொற்றொடர்களின் அதிசயம் காணக் கிடைக்காது. நம் ஆசாரியர்களின் நாவீறு மிக விலக்ஷணமானது.

2. ஆழ்வான் தனியன் பெருமை

நம் ஆசாரியர்களனைவர்க்கும் தனியன்கள் ஒவ்வொருரீதியில் அவதரித்திருக்கின்றது. கூரத்தாழ்வானுடைய தனியன் அவதரித்திருக்கும் விதம் உண்மையில் அதிவிலக்ஷணமானது. இத்தனியன் பட்டரருளிச்செய்ததாதலால் அவருடைய தனிப்பட்ட திருநாவீறு இதில் பொலிகின்றது. "யதுக்தயஸ்த்ரயீகண்டே யாந்தி மங்கல ஸூத்ரதாம்" என்பது இத்தனியனில் உத்தரார்த்தம் ஆழ்வானுடைய ஸ்ரீஸூக்திகளானவை வேதமாகிற மாதின்கழுத்திலே திருமங்கலியமாக விளங்குகின்றனவென்று வெகு சமத்காரமாக அருளிச்செய்யப்படுகிறது. இதன் கருத்தைச்சிறிது விவரிப்போம். பெண்களுக்குத் திருமங்கலிய மில்லாத நிலைமைகள் இரண்டு.

கன்னிகையாயிருக்கும் நிலைமை ஒன்று. நாலிழந்து விதவையாயிருக்கும் நிலைமை மற்றொன்று. இவற்றுள், கன்னிகைப் பருவத்தில் பெண்களுக்குப் பல நாயகர்கள் தேறக்கூடும். ஏனெனில், பெண் கழுத்தில் ஒரு கைப்பாடாகத் தாலி ஏறுமளவும் பெரும்பாலும் பிரமசாரிகளும் விதுரர்களும் அவளைத் தன் மனைவியாகப் பாவித்திருக்கக்கூடும். 'இப் பெண்ணுக்கு நானே கணவன்' என்று ஸ்வரூப யோக்யதையுடையாரெல்லாரும் நினைத்திருக்கக் கூடுமன்றோ. மற்றுள்ள விரக்தர்களும் க்ருஹஸ்தர்களும் அக் கன்னிகையைக் கண்டால் 'இவளுக்கு இன்னும் கணவன் நிச்சயிக்கப்படவில்லை' என்று ஸாதாரணமாக நினைத்துக்கொள்வர்கள். அப் பெண்ணின் கழுத்தில் தாலி ஏறிவிட்டபின்பு, முன்பு தங்களுக்கென்று அபிமாநித்திருந்த பிரமசாரிகளும் விதுரர்களும் 'இனி இவள் அநந்யார்ஹை' என்று நிச்சயித்துத் தாங்கள் ஆசையற்றொழிவர்கள். ஸாதாரணமாக நினைத்துக்கொண்டிருந்த மற்ற க்ருஹஸ்தர்களும் விரக்தர்களும் 'இவளுக்கு ஒரு கணவன் அமைந்து விட்டான்' என்று நினைத்துப் போருவர்கள். இனி இரண்டாவதான வைதவ்ய நிலைமையில் ஸ்தரீயைப் பார்க்குமவர்கள் 'இவளுக்கு ஏற்பட்டிருந்த கணவன் இறந்தொழிந்தான், இனி இவளுக்கு எப்போதும் கணவன் ஏற்படப்போகிறதில்லை' என்றெண்ணி நிற்பர்கள். ஆகவே மாதர்கள் மங்கலநூல் இல்லாத நிலைமைகளில் பல பர்த்தாக்களை யுடையவர்களாயும் ஒரு பர்த்தாவையு முடையராகாதவர்களாயும் இருப்பர்களென்றதாயிற்று.

அதுபோல, ஆழ்வான் ஸ்ரீஸூக்திகள் அவதரிப்பதற்கு முன்பு வேதங்கள் மங்கலநூல் இல்லாத மாதரின் இரண்டு வகையான நிலைமைகளையும் உடையனவாயிருந்தன. வேதத்துக்கு ருத்ரனைப் பதியாகச் சிலர் மயங்கி அபிமாணிப்பர்கள்; பிரமனைப் பதியாகப் பேதையர் சிலர் பேணுவர்கள். இங்ஙனம் பாசுபதர் முதலிய மதாந்தரஸ்தர்களால் பலபல தெய்வங்கள் பதியாக அபிமானிக்கப்பட்டும், நிரீச்வர மீமாம்ஸகாதிகளால் நாயகனே கிடையாதென்று மறுக்கப்பட்டுப் கிடந்தது. ஆழ்வானுடைய பஞ்சஸ்தவம் முதலான திவ்ய ஸூக்திகள் திருவவதரித்தவுடனே 'தலையறுத்தவனும் தலை யறுப்புண்டவனும் மற்றுமெவனும் வேதத்துக்கு நாயகனல்லன்; அடியோடு நாயகனே கிடையாதென்றதும் தவறு; நாயகனுண்டு, அவன் ஒருவனே; அவனுகிருன் ஸ்ரீமந் நாராயணனே' என்று கல்வெட்டாக நிஷ்கர்ஷம் ஏற்பட்டபடியால் இவருடைய ஸ்ரீஸூக்திகள் வேதமாதுக்குமங்கலநூல்போன்றன.

இதனுல் ஸகல துர்மதங்களையும் நிரஸித்துப் பரதத்வ நிர்ணயம் பண்ண வல்ல வாக் வைபவமுடையவர் கூரத்தாழ்வான் என்றதாகிறது. வஸ்துஸ்திதியில் ஸ்ரீபாஷ்யாதிகள் திருவவதரித்திருந்தாலுங்கூட ஆழ்வானுடைய பஞ்சஸ்தவங்கள் அவதரிக்கவில்லையானுல் நம் எம்பெருமானுர் தரிசனத்திற்கு அபரிஹார்யமான குறையே யாகுமன்றோ.

3. ஆழ்வானுடைய உக்திசாதுர்யம்

எம்பெருமானைத் துதிக்கின்ற பக்தமணிகள் தங்களுடைய பலவகையான அநுபவங்களில் விலக்ஷணமான ஓர் அநுபவத்தைக் காட்டுவதுண்டு; அதாவதென்ன

வென்னில். எம்பெருமானை நோக்கிச் சில கேள்விகள் கேட்கிறமுகத்தால் ஒருவகையான குணநுபவம் பண்ணுவது. பொய்கையாழ்வார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் முதலானோர் இவ்வநுபவத்திற்கு வழிகாட்டிகளாக அமைந்தனர். பொய்கையார் முதல் திருவந்தாதியில் (69) *பாலன் தனதுருவாயேழுலகுண்டு, ஆலிலையின் மேலன்று நீவளர்ந்த மெய்யென்பர்—ஆலன்று வேலை நீருள்ளதோ விண்ணதோ மண்ணதோ? சோலை சூழ் குன்றெடுத்தாய் சொல்லு* என்று கேட்கிறார். நம்மாழ்வாருடைய வினுக்கள் பல பல. ஒன்றேகேண்மின்; பெரியதிருவந்தாதியில் *சீரால் பிறந்து சிறப்பால் வளராது; பேர் வாமனாகாக்கால் பேராளா!—மார்பாரப், புல்கி நீயுண்டுமிழ்ந்த பூமி நீரேற்பரிதே? சொல்லு நீ யாமறியச் சூழ்ந்து* என்பது. திருமங்கையாழ்வாருடைய வினுக்களிலும் ஒன்று கேண்மின்; (பெரிய திருமொழி 7–9–7) *சேயோங்கு தண் திருமாலிருஞ்சோலை மலையுறையும் மாயா! எனக்குரையாயிது, மறை நான்கினுளாயோ? தீயோம்புகைம்மறையோர் சிறுபுலியூர்ச் சலசயனத்தாயோ? உனதடியார் மனத்தாயோ? என்பது.

இந்த வினுக்களை விவரித்து அநுபவித்தால் இதன்சுவை பெருகும். ஆழ்வானுடைய ஸ்தவங்களில் அதிமாநுஷ, ஸுந்தரபாஹு, வரதராஜஸ்தவங்களிலே வெகு ரஸகனமான கேள்விகள் அமைந்துள்ளன. திருமாலிருஞ்சோலை யழகரை நோக்கிக் கேட்கிற மூன்று கேள்விகள் அமைந்த ஒரு ச்லோகத்தை மாத்திரம் இங்கு சுருக்கமாக அநுபவிப்போம்.

"கூஹிதஸ்வமஹிமாபி ஸுந்தர! த்வம் வ்ரஜே கிமிதி சக்ரமாக்ரமீ:,
ஸப்தராத்ரமததாச்ச கிம் கிரிம் ப்ருச்சதச்ச ஸுஹ்ருத: கிமக்ருத:"

என்பது ஸுந்தரபாஹுஸ்தவத்தில் 112-ஆம் ச்லோகம்.

இதிலுள்ள மூன்று கேள்விகளாவன:—ஸௌலப்ய ஸௌசீல்யங்களையேகாட்டிப் பரத்வத்தை யொளித்து மாநுஷ்யகம் கொண்டாட வந்த விடத்திலே பரத்வம் விளங்கும்படியான செய்கைகளையும் இடையிடையே வெளியிட்டது எதற்காக? என்பது முக்கியமான கேள்வி. அழகரே! தேவரீர் *ஒருத்தி மகனாய்ப்பிறந்து ஓரிரவிலொருத்திமகனாயொளித்து வளர்ந்ததுஸ்வைசிசக்திவிசேஷங்களையெல்லாம் மறைத்துக்கொண்டல்லவோ? அப்படியிருந்தும், நெடுநாளாகத் திருவாய்ப்பாடியில் நடந்துவந்த தேவேந்திர ஸமாராதனையைத் தடுத்தது ஏன்? என்பது முதற்கேள்வி. இதற்கு எம்பெருமான் (அல்லது அவனுடைய பிரதிநிதிகள்) சொல்லக்கூடிய ஸமாதானம் என்னவெனில்; பராத்பரனான தான்வளருகிற வூரிலே தேவதாந்தரத்திற்கு ஆராதனையாவதென்? என்றிருந்தபடியாலே தடுத்ததாக.

அவ்விந்திரன் ஏழுநாள் கல்மழை பெய்வித்து ஆயர்களுக்கும் ஆநிரைகளுக்கும் பொறுக்கொணாத் தீங்கை விளைத்தபோது அவனைத்தலையறுத்துத் தொலைக்கவேண்டியிருக்க, அது செய்யாதே கோவர்த்தனமலையைக் கொற்றக் குடையாகத்தாங்கி நின்றதென்? என்பது இரண்டாவது கேள்வி. 'இந்திரனது உணவைக் கொண்ட நாம் உயிரையும் கொள்ளவேணுமோ? இந்த மலையே நமக்கு ரக்ஷகமென்று நாம் அடியிலே சொன்ன சொல்லை மெய்பாக்கி இம்மலையைக் கொண்டே மழைக் கஷ்டத்தைத் தடுத்துவிடுவோமாகில் அவன் கைசலித்தவாறே தானே ஓய்ந்து நிற்கிறானென்கிற விசாலமான திருவுள்ளத்தினால்—என்பது இதற்கு ஸமாதானம்.

ஏழு பிராயத்துச் சிறுவன் மலையெடுத்து நின்ற அதிமாநுஷ சேஷ்டிதங் கண்டு ஆச்சரியப்பட்ட ஆயர்கள் அவனுடைய பிறப்பிலே சங்கை கொண்டு, நீ தேவனோ? தானவனோ? யக்ஷனோ? கந்தர்வனோ? என்று கேட்டவளவிலே அப்படி அவர்கள் கேட்டதற்குச் சீற்றங் கொண்டதாக வுள்ளது. சீற்றங் கொள்ளும் படியாக அவர்கள் ஒன்றும் கேட்கவில்லையே! அப்படியிருக்க சீற்றங்கொண்டது ஏன்? என்பது மூன்றாவது கேள்வி. இடையர்களிலே கடைகெட்ட இடையனாகத்தான் வந்து பிறந்திருக்கச் செய்தே ஸஜாதீயனை விஜாதீயனாக்கிக் கேள்வி கேட்பது தவறுதலால் சீற்றமுண்டாயிற்றென்று ஸமாதானம். இத்தால் கண்ணபிரானுக்கு தேவத்வத்திலுங் காட்டில் கோபாலத்வமே உகப்புக்கிடமான தென்று விளங்கும். இப்படிப்பட்ட அர்த்தங்களை விளங்கச் செய்யும் கேள்விகளன்றோ இவை. ...

4. "துஷ்யந்தி ச ரமந்தி ச.

பகவத்கீதை பத்தாவது அத்யாயத்தில் ஒன்பதாவது ச்லோகம், (10-9.) *மச்சித்தா மத்கதப்ராணா: போதயந்த: பரஸ்பரம், கதயந்தச்ச மாம் நித்யம துஷ்யந்திச ரமந்திச" என்பது. இந்த ச்லோகம் பாகவத சிகாமணிகளின அழகிய போது போக்கைப்பற்றி பகவான் [கீதாசார்யன்] பரமஸந்தோஷம் பொலியச் சொன்னது. பாகவதர்கள் இப்படி வர்த்திக்க வேணுமென்று சிக்ஷிக்கின்றதாகவும் அமைந்துள்ளது இந்தச்லோகம். இதை நெஞ்சில் ஆவ்ருத்தி பண்ணப் பண்ண விலக்ஷணமான வோர் ஆனந்தம் பக்தர்களுக்கு உண்டாகியேதீரும். திருமழிசைப் பிரான் நான்முகன் திருவந்தாதியில் "தெரித்தெழுதி வாசித்துங்கேட்டும் வணங்கிவழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது" என்றருளிச் செய்த பாசுரம் இந்த கீதா ச்லோகத்தை யடியொற்றியே யென்று சொல்லலாம்.

கீதைக்குப் பல பாஷ்யங்கள் அவதரித்திருந்தாலும் நம் ஸ்வாமி எம்பெருமானாருளிச் செய்திருக்கும் பாஷ்யத்தின் மாதுர்யமும் காம்பீர்யமும் ஒப்புயர்வற்றது. அதிகமான விரிவு இன்றிக்கே ஸங்க்ஷிப்தமாகவே யிருந்தாலும் அர்த்தபுஷ்டி அங்யாத்ருசமென்பதை அநுபவரஸிகர்களே அறியமுடியும். சைலியை ஆழ்ந்து நோக்குமிடத்து எம்பெருமானாரும் மணவாள மாமுனிகளும் அபிந்நவ்யக்திகளே யென்று அறுதியிடத் தட்டில்லை. ப்ரக்ருத ச்லோகத்தின் முடிவில் "துஷ்யந்திச ரமந்திச" என்றுள்ளது. க்ரியாபதங்களிரண்டுக்கும் 'ஸந்தோஷிக்கிறார்கள்' என்பதொன்றே பொருளாகத் தோன்றுகிறது. இந்த புநருக்தி எதற்காகவென்று ஆராயும்போது பாஷ்யங்களை யெடுத்துப் பார்க்க ஆவல் கிளர்கின்றது. சங்கர பாஷ்யத்தைப் பார்த்தாலோ அதில், துஷ்யந்தி - பரிதோஷமுபயாந்தி; ரமந்திச - ரதிம் ப்ராப்நுவந்தி, ப்ரிய ஸங்கத்யா இவ என்றுள்ளது. பரிதோஷமாவது என்ன? ரதியாவது என்ன? என்பதை நுண்ணுணர்வினர் நுட்பமாக அறிவர் போலும். இனி மத்வ பாஷ்யத்தைப் பார்த்தாலோ, இங்கு 8, 9, 10, 11. ஆகிய நான்குச்லோகங்களுக்கு பாஷ்யமே கிடையாது. "ஸந்தி ச பஜந்த: கேசித்த்யாஹ அஹமித்யாதிநா" என்று எட்டாவது ச்லோகத்திற்கு அவதாரிகையிட்டு, மேல் பதினோராவது ச்லோகம் வரையில் ஸ்பஷ்டார்த்தகமென்று முடித்திட்டார். அந்த பாஷ்யத்தின் ப்ரக்ரியை பெரும்பாலும் இத்தகையதே.

இனி நம் ஸ்வாமியின் பாஷ்ய ஸூக்திகள் காண்மின்; 'துஷ்யந்திச ரமந்த் வக்தார: தத்வசநேந அநந்ய ப்ரயோஜநேந துஷ்யந்தி. ச்ரோதாரச்ச தச்ச்ரவணேந அநவதிகாதிசய ப்ரியேண ரமந்தே' என்றுள்ளது பகவத் கதைகளைச் சொல்லி மகிழ்வார் சிலர்; அவற்றைக் காதாரக்கேட்டு மகிழ்வார் சிலர். இவ்வகையான பேதத்தையிட்டு க்ரியாபத பேதம் செய்ததாக ஸ்வாமி திருவுள்ளம்பற்றுகிறார். மூலத்தில் "போதயந்த: பரஸ்பரம்" என்றிருப்பதனாலே வக்தாக்களும்ச்ரோதாக்களுமாக இரண்டு வகுப்பினர் அவசியம் தேறுகிறார்கள் அவ்விரு வகுப்பினரிடத்தும் அந்வயிக்குமாறு இரண்டு க்ரியாபதங்களை கீதாசார்யன் ப்ரயோகித்திருப்பதாக மருமம் கண்டறிந்து உரைசெய்திருப்பது ஸ்வாமி ராமாநுஜர்க்குத் தன்னேற்றம்.

இந்த நுண்பொருளை ஸ்வாமி கண்டறிந்தது, முன்னே நாம் காட்டிய திருமழிசைப்பிரான் பாசுரங்கொண்டேயென்னலாம் அதில் வக்த்ருத்வம் ச்ரோத்ருத்வமாகியஇரண்டும் ஆழ்வார்க்கே காலபேதேந இருப்பதாகக் காட்டப்பட்டிருக்கிறது. எங்ஙனேயென்னில்; "தெரித்தெழுதி வாசித்தும் கேட்டும்" என்றவதில் தெரிக்கையாவது தெரிவிக்கை; ப்ரவசநம் பண்ணுகை. அது ஒருகாலத்தில்; மற்றொரு காலத்தில் பிறர் சொல்ல ச்ரவணம் செய்கையை 'கேட்டும்' என்பதனால் குறித்தனர். ஆக ஒரு வ்யக்திக்கே காலபேதத்தாலே சொல்லுவதும் கேட்பதும் ஸம்பாவிதமேயாதலால், சொல்லுங்காலுண்டாகுமானந்தத்தை 'துஷ்யந்தி' என்பதனுலும், கேட்குங்காலுண்டாகுமானந்தத்தை 'ரமந்தி' என்பதனுலும் கீதாசார்யன் குறிப்பிட்டதாகக் கொள்வது சிறக்கும்.

5. ஆழ்வானுடைய நல்வார்த்தையொன்று

நம்முடைய பூருவாசாரியர்களின் திருவாக்குக்களினின்று ஒவ்வொருஸமயத்தில் ஒவ்வொரு நல்வார்த்தையாகப் பல பல ஸமயவிசேஷங்களில் பல பல நல்வார்த்தைகள் தோன்றியிருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் நமக்கு நல்லறிவையும் நல்லனுட்டானத்தையும் ஊட்டுவதற்கே தோன்றியதாதலால் அவற்றை நாம் அடிக்கடி மனனம் செய்யவேண்டும். மிகச் சிறந்ததொரு நல் வார்த்தையை இப்போது கேண்மின்.

மொழியைக் கடக்கும் பெரும்புகழான் வஞ்சமுக்குறும்பாங் குழியைக் கடக்கும் நங்கூரத்தாழ்வான் என்று திருவரங்கத்தமுதனாராலும், வாசாமகோசரமஹாகுண தேசிகாக்ர்யகூராதிநாத"என்று மணவாளமாமுனிகளாலும் குலாவப்படுகின்ற கூரத்தாழ்வானுடைய சிஷ்யவர்க்கங்களிலே பிள்ளைப் பிள்ளையாழ்வானென்பவரும் ஒருவர். அவர் உயர்குலப் பிறப்பு முதலியவற்றால் மேனாணிப்புக் கொண்டிருந்து நல் விநயமின்றிக்கே பரமபாகவதர்கள் திறத்திலும் கடுவான வார்த்தைகளைப் பேசி அபசாரப்படுகைதயே இயல்பாகக் கொண்டிருந்தார். அதை அவருடைய ஆசாரியரான ஆழ்வான் கண்டு திருவுள்ளம் மிகவும் நொந்து "அந்தோ! இவர்க்கு இப்படிப்பட்ட பாகவதாபசாரம் சிறிதும் தகுந்திருக்கவில்லையே;இதுஇவருடையஜ்ஞாநானுஷ்டானங்களெல்லாவற்றையுங் கீழ்ப்படுத்தித் தானே மேலாய்நின்று விநாசத்தை விளைத்திடுமே; இதற்கு வேலியிட்டு வைக்கவேணுமே" என்று திருவுள்ளம் பற்றி ஓர் உபாயம் சிந்தித்துக்கொண்டிருந்தார்.

இருக்கையில், ஒரு புண்யதினம் ப்ராப்தமாயிற்று. அன்று அந்தப் பிள்ளைப் பிள்ளையாழ்வா னென்கிற சிஷ்யர் நீராட்டம் செய்து கரையேறின வளவிலே ஆழ்வான் அவருடைய அருகே சென்று "ஓய்! இப்போது அவரவர்கள் தம் தம் சக்திக்குத் தக்கப்படி தானம் செய்கிற காலமாயிருக்கின்றது; இக்காலத்திலே நீரும் நமக்கு ஒரு தானம் பண்ணினால் நலம்; பண்ணியே யாகவேணும்" என்றாராம். அது கேட்ட அவர், 'ஸ்வாமிந்! எல்லாம் தேவரீருடையதாகவே யிருக்க, அடியேன் எத்தை தானம் பண்ணுவது?" என்றாராம். அதுகேட்ட ஆழ்வான் "இந்த உபசாரவார்த்தை இருக்கட்டும்; மனோ வாக்காயங்களாலே இனி பாகவதாபசாரம் பண்ணாமல் வர்த்திக்கக் கடவேன்" என்று நம் கையிலே உதகம் பண்ணித் தரவேணும்" என்ன, அவரும் அப்படியே உதகதானம் பண்ணிக் கொடுத்து விட்டார்.

ஆனாலும் அவர் நெடுநாளாக பாகவதாபசாரமே பட்டுப் போந்தவராதலால் அந்த அநாதிவாஸனை சடக்கென அறமாட்டாமல் தொடர்ந்து வந்தபடியாலே பழைய வாஸனையினால் மறுபடியும் பாகவதாபசாரப்பட நேர்ந்துவிட்டது. அப்படி நேர்ந்துவிடவே நடுநடுங்கிப் போனாரவர்; 'இனி நாம் முடிந்தோமத்தனை' என்று மிக மிக அஞ்சினார். இவ்வபசாரம் ஆழ்வான் திருச்செவியிலே எட்டியிருக்கு மென்று நிச்சயித்தார். அதனால் ஆழ்வானருகு வாராமல் தம்முடைய க்ருஹத்திலேயே யிருந்துகொண்டு துடித்தார்.

நாடோறும் தவறாமல் தம்மிடம் வருகின்ற அவர் சிலநாள் வரக்காணாமையாலே ஆழ்வான் அவருடைய க்ருஹத்திற் கெழுந்தருளி 'ஓய்! தென்படவில்லையே என்ன விசேஷம்?' என்று வினவியருளினார். அப்போது அவர் தமக்கு அவசாத்தாக பாகவதாபசாரம நேர்ந்தபடியை விண்ணப்பஞ் செய்து, மனோவாக்காயங்களாகிற முக்கரணங்களாலும் அபசாரம புகாதபடி இத்தேஹத்தோடு வர்த்திக்கை அரிதாயிராநின்றது; என்செய்வேன்!' என்று திருவடிகளைக் கட்டிக் கொண்டு கிடந்து கிலேசிக்க, இத்தனை யநுதாபம் இவர்க்கு உண்டாகப் பெற்றதே யென்று உகந்த ஆழ்வான் அப்போது அருளிச் செய்தவார்த்தை—"மாநஸிகமாக நேரும் அபராதத்திற்கு அநுதாப முண்டாகவே எம்பெருமான் க்ஷமித்தருள்வன்; ராஜதண்டபீதியாலே காயிகமான அபசாரம் நேராது; இனி வாக்கை மாத்திரம் ஜாக்கிரதையாகப் பாதுகாத்துப் போரும்" என்று...... 'பிள்ளைப் பிள்ளையாழ்வானுக்கு ஆழ்வானருளிச் செய்த வார்த்தையை ஸ்மரிப்பது" என்கிற ஸ்ரீவசநபூஷண சூர்ணிகையின் வியாக்கியானத்திலே இவ்விஷயம் விளக்கமாகக் காணத்தக்கது.

6. நீ பிறந்த திருவோணமின்று

எம்பெருமான் 'பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம், தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகேயுகே' என்று கீதையில் அருளிச்செய்தபடியும், "எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாயிமையோர் தலைவா" மனிசரும் மற்றும் முற்றுமாய் மாயப் பிறவி பிறந்த" என்று ஆழ்வாரருளிச் செய்தபடியும் பல அவதாரங்களைச் செய்தருளுகிறான். அவ்வவதாரங்களுக்கு விபவாவதார மென்று பெயர். ஸ்ரீ ராம க்ருஷ்ணாத்யவதாரங்களுக்கே விபவாவதாரமென்று வ்யபதேசம். இப்படி யவதரிக்குமிடத்து ஸ்ரீராமபிரான் புநர்வஸு நக்ஷத்ரத்திலவதரித்ததா

வும், கண்ணபிரான் ரோஹிணீ நக்ஷத்ரத்திலவதரித்ததாகவும், அழகிய சிங்கர் ஸ்வாதி நக்ஷத்ரத்தில் அவதரித்ததாகவும் இதிஹாஸ புராணங்களாலறிகின்றோம். ஸ்ரீ ராமக்ருஷ்ண நரஸிம்ஹாதி திவ்ய மூர்த்திகளுக்கு ஆங்காங்கு திவ்ய தேசங்களில் திருநக்ஷத்ரோத்ஸவம் கொண்டாடுவதும் மேலே குறித்த நக்ஷத்ரக்ரமம் பிறழாமலே நடந்துவருவதைக் காணுகின்றோம். இதில் மதபேதமிருப்பதாகத் தெரியவில்லை.

இப்படியிருக்க. பெரியாழ்வார் அழகிய சிங்கரும் கண்ணனும் திருவோணத்திலவதரித்ததாக அருளிச் செய்திருப்பது பொருந்துமோ வென்று சிலர் சங்கிக்க இடமுள்ளது திருப்பல்லாண்டில் "திருவோணத் திருவிழவிலந்தியம் போதிலரியுருவாகி" என்ற பாசுரத்தினால் அழகியசிங்கர் திருவோணத்திலவதரித்ததாகக் காட்டப்பட்டுள்ளது. பெரியாழ்வார் திருமொழியில் கண்ணன் திருவோணத்தி லவதரித்ததாக அஸக்ருத் அருளிச் செய்யப் படுகிறது "நீ பிறந்த திருவோணம் இன்று நீ நீராடவேண்டும்" "திண்ணார் வெண்சங்குடையாய் திருநாள் திருவோண மின்றேழு நாள்" இத்தியாதி பாசுரங்கள் காண்க இதிஹாஸபுராண ப்ரக்ரியைக்கும் ஸர்வஸம்ப்ரதிபந்நமான லோக வ்யவஹாரங்களுக்கும் முரணாக ஆழ்வார் ஏன் இப்படியருளிச்செய்தார்? என்று விமர்சிக்க ப்ராப்தம்.

வடமொழி வேதத்தில் "ச்ரோணா நக்ஷத்ரம் விஷ்ணுர்தேவதா" என்று ஓதப்பட்டிருக்கிறது. இதனால் திருவோண நக்ஷத்ரமானது விஷ்ணுவுக்கு அஸாதாரண நக்ஷத்ரமென்று சொல்லிற்றாகிறது எம்பெருமான் எந்த நக்ஷத்திரத்தில் திருவவதரித்தாலும் அது திருவோண நக்ஷத்திரத்தின் அம்சம் பொருந்தியதாகவேயிருக்குமென்று வைதிகர்கள் திருவுள்ளம் பற்றியிருக்கிறார்கள். எம்பெருமான் எந்தப் புஷ்பத்தைச் சாத்திக் கொண்டாலும் அதில் திருத்துழாயின் அம்சம் அவிநாபூதமென்று சொல்லுவதுண்டு; அந்த நியாயமே இங்கும்.

பெரியாழ்வார் *அத்தத்தின் பத்தாநாள் தோன்றிய அச்சுதன்* என்று மருளிச்செய்திருக்கின்றார் ஹஸ்தநக்ஷத்திரத்தின் பத்தாவது நாள் திருவோணமாகிறாப்போலே ரோஹிணியுமாகிறது. எப்படியென்னில், மேல் முறையில் கணக்கிட்டால் திருவோணம். கீழ் முறையில் கணக்கிட்டால் ரோஹிணி. ஆகவே கண்ணபிரான் ரோஹிணியில் திருவவதரித்ததையும் பெரியாழ்வார் குறிப்பிட்டே யிருக்கிறாரென்று சில பெரியார்கள் நிர்வஹிப்பதுண்டு. மேல்முறையாகக் கணக்கிடுவதைவிட்டுக் கீழ்முறையாகக் கணக்கிடுவதைத் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்தாரென்கை உசிதமன்று எனினும் அதுவும் திருவுள்ளத்திலிருக்கலாம். "அத்தத்தின் பத்தாநாள்" என்று இவ்வகையாக அருளிச் செய்ததன் கருத்தை நம் ஆசாரியர்கள் இன்சுவை மிக அருளிச்செய்திருப்பதை வியாக்கியானங்களைக் கொண்டு அறிக.

ஆக, விபவாவதார மூர்த்திகள் வெவ்வேறு திருநக்ஷத்திரங்களில் அவதரித்திருந்தாலும் திருவோணத்திலவதரித்ததாக அருளிச்செய்வதில் அநௌசித்யமொன்றுமில்லை யென்றும் வைதிக ப்ரக்ரியைக்கு இது பொருந்தியதே யென்றும் சொல்லிற்றாயிற்று.

6. ஸ்ரீராமாயணத்தில் ஒரு விசாரம்

ஸ்ரீராமபிரான் ஸமுத்ரராஜனை நோக்கி சரணாகதியாகக் கடற்கரையில் பள்ளிகொண்டவாற்றைச்சொல்லாநின்ற வான்மீகி முனிவர் *ததஸ் ஸாகரவேலாயாம் தர்ப்பாநாஸ்தீர்ய ராகவ:, அஞ்ஜலிம் ப்ராங்முக: க்ருத்வா ப்ரதிசிச்யே மஹோததே:, பாஹும் புஜகபோகாபமுபதாயாரிஸூதந:* என்று சொல்லியிருக்கிறார். ஒரு திருக்கையைத் தலையணையாக வைத்துக் கொண்டு சயனித்தருளினதாகச் சொல்லப்படுகிறது. பட்டரும் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் 'ப்ரதிஜலதிதோ வேலா சய்யாம் விபீஷணகௌதுகாத்' என்ற ச்லோகத்தில், *ஸமுபத்த. கஞ்சித், கஞ்சித் ப்ரஸாரயத* என்று இங்ஙனமேயருளிச் செய்திருக்கிறார் இவ்விதமாக சயனித்துக் கொண்டபோது "அஞ்ஜலிம் ப்ராங்முக: க்ருத்வா" என்று சொல்லியிருப்பது எப்படி ஸம்பாவிதமாகும்? இரண்டு கைகளும் ஒன்று சேர்ந்தாலன்றோ அஞ்ஜலியாகும். ஒரு திருக்கை தலையணையானதாகவும் மற்றொரு திருக்கை திருவடியளவாக நீட்டப்பட்டதாகவும் சொல்லியிருக்கும்போது அஞ்ஜலிபந்தம் எப்படி ப்ராப்தமாகும்?

ஸக்ருத் அஞ்ஜலிபந்தம் செய்துவிட்டு உடனே அவ்வஞ்ஜலியை விட்டுத் திருக்கையைத் தலையணையாகக் கொண்டார் பெருமாள் என்று சொல்லி விடுவதானால் சங்கைக்கு இடமில்லை.

அப்போது ஸ்ரீராமன் சதுர்ப்புஜனாக ஸேவை யளித்தானென்றும், அதனால் "திசாஸ் திஸ்ரோ திசக்ரமு:" என்றபடி மூன்று நாளளவும் அஞ்ஜலிபந்தம் மாறாதேயிருந்ததென்றும் சில பெரியார்கள் கூறுகின்றார்கள்.

* இந்த ஸமுத்ரசரணாகதிப்ரகரணத்திலேயே *புஜை: பரம நாரீணாமபிம்ருஷ்டம் அநேகதா* என்று ஸ்ரீராம பாஹுவுக்கு வான்மீகிமுனிவர் விசேஷணமிட்டிருக்கிறார். ஏகதாரவ்ரதனான இராமபிரானுடைய பாஹுவை *பரமநாரீணாம் புஜை: அநேகதா அபிம்ருஷ்டமாகச் சொல்லுவது பொருந்துமாவென்று ஸ்ரீகோவிந்தராஜர் தமதுவியாகியானத்தில் சங்கித்துக்கொண்டு சிலவகையான ஸமாதானங்களெழுதியுள்ளார். அவற்றுள் முக்கியமான ஸமாதானம் ஒன்றே; பரம நாரீணாம் என்று ஸ்ரீபூமி நீளாதேவிகளைச் சொன்னபடியாய் ஸாக்ஷாத் பரமாத்மாவே ஸ்ரீராமமூர்த்தியாகையாலே அந்த திவ்ய மஹிஷிகளின் புஜங்களினாலான அபிமர்தநத்தையே சொல்லுகிறதிங்கு—என்று காட்டியுள்ள ஸமாதானமே ரஸ்யமும் ரஹஸ்யமுமாகுமென்று பெரியார் பணிப்பது. *ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தசரதாத்மஜம்* என்று பெருமாள் தாம் சொல்லிக்கொண்டாலும் பரமபுருஷத் தன்மையானது திருமேனியை விட்டு நீங்காததொன்றாகையாலே மருமமறிந்த மஹர்ஷியானவர் ஆங்காங்கு ஸ்ரீராமபிரானுடைய பரமாத்மபாவத்தை ஸூசிப்பித்துக்கொண்டே வருகிறாரென்று தேறுகிறது. மஹர்ஷி காட்டுவது போலவே பெருமாளும் சில சில ஸமயவிசேஷங்களில் தம்முடைய உண்மை நிலையைக் காட்டுகிறாரென்று கொள்வதில் பொருந்தாமையொன்றுமில்லை ஆகவே, உபதாநீக்ருதமான புஜமொன்றும், ப்ரஸாரிதமான புஜமொன்றும் இருக்கச் செய்தேயும் அஞ்ஜலியும் செய்து சதுர்ப்புஜத்வத்தைக் காட்டியருளினதாக நிர்வஹிப்பதில் ஔசித்யம் நன்றேயுள்ளது. ஸ்ரீராமாயண மஹார்ணவத்தில் ஆழமுழ்கின மஹான்களின் திருவுள்ளம் வெளிவரவேணும்.

8. பந்த தசையும் முக்தி தசையும்

பரம வைதிகர்கள் சித்து அசித்து ஈச்வரன் என மூன்று தத்துவங்களை அங்கீகரித்திருக்கிறார்கள். சேதநர்களே சித்து எனப்படுகிறார்கள். சேதநர்கள் பத்தர் முக்தர் நித்தியர் என மூன்று வகுப்பாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்விருள் தருமாஞாலத்தில் கட்டுண்டு கிடக்கிற சேதநர்கள் பத்தர் எனப்படுகிறார்கள். பந்தம் விடுபட்டு முக்தியடைந்தவர்கள் முக்தரெனப்படுகிறார்கள். ஒருநாளும் ஸம்ஸார நிலத்தில் வந்து துவளாமல் திருநாட்டிலேயே நித்யாநுபவம் செய்து கொண்டு வாழ்கிற அனந்த கருட விஷ்வக்ஸேநாதிகள் நித்ய ரெனப்படுகிறார்கள். ஆக, சேதநர்கள் விண்ணுலகில் இரண்டு வகுப்பாகவும் மண்ணுலகில் ஒரே வகுப்பாகவும் பிரிக்கப்பட்டார்கள். ஆராயுமளவில் விண்ணுலகிற்போல மண்ணுலகிலும் இரண்டு வகுப்பாகப்பிரிக்கப்பட வேண்டுமென்று தோன்றுகிறது. மண்ணுலகிலுள்ள சேதநர்களையெல்லாம் பத்தர் [கட்டுண்டு கிடப்பவர்கள்] என்ற ஒரே வகுப்பில் அடக்கிவிடுவது நலமாகுமோ? எல்லாரும் வாசியற இங்குக் கட்டுண்டு கிடக்கிறார்களெனினும் இவர்களுக்குள் வாசி தெரியாமலில்லையே. 'இஹலோக பரலோகங்களில்லை, புண்ய பாபங்களில்லை, தெய்வமில்லை, என்று நாஸ்திக வாதங்கள் செய்து கொண்டு நிஹீநாசாரங்களோடு திரிகின்றவர்களுக்கும், ஆஸ்திகர்களாய் ஸதாசாரபரர்களாய் விளங்குமவர்களுக்கும் நெடுவாசியில்லையா? இவர்களெல்லாரையும் ஒரே வகுப்பில் அடக்கி விடலாமோ? இது யுக்தமாகுமோ? என்று சங்கிக்க நேரும். இந்த சங்கைக்கு இடமறும் படியாகவே நம் பூருவர்கள் முமுக்ஷுக்கள் என்றவொரு வகுப்பையும் வகுத்துள்ளார்கள். மோக்ஷத்தில் ருசியுள்ளவர்கள் முமுக்ஷுக்களெனப் படுவார்கள். ப்ரக்ருதி பந்தத்தில் கட்டுண்டு கிடக்கிற இந்நிலையினின்று விடுபட்டு நற்கதி நணுக வேணுமென்னும் விருப்பமுடையவர்களே முமுக்ஷுக்களாவர்கள். ஆகவே, விண்ணுலகில் முக்தர் நித்யர் என்று இரண்டு வகுப்புகள் இருப்பது போலவே இம்மண்ணுலகிலும் பத்தர், முமுக்ஷுக்களென இரண்டு வகுப்புகள் உள்ளன வென்று தேறிற்று.

இன்னமும் சிறிது ஆராய்ந்தால் மூன்றாவது வகுப்பும் ஒன்று தேறும். அதாவது "மீட்சியின்றி வைகுந்தமாநகர் மற்றது கையதுவே" என்றும் "போயினற்பின்னை யித்திசைக் கென்றும் பிணைக்கொடுக்கிலும் போகவொட்டாரே" என்றும் சொல்லுகிறபடியே விண்ணுலகத்தவர்கள் இம்மண்ணுலகத்திற்கு மீளமாட்டார்களென்றாலும், ஸம்ஸாரி சேதந ஸமுஜ்ஜீவநார்த்தமாக ஸ்ரீவைகுண்டநாதனுடைய நியமனத்தினால் திருவடி திருவனந்தாழ்வான் திருவாழியாழ்வான் போல்வார் இந்நிலத்திலே மஹாசார்யர்களாக வந்து பிறந்து நம்மிடையே உலாவுவதாகப் பல பிரமாணங்களினால் அறிகின்றோம். "விஷ்வக்ஸேநோ யதிபதிரபூத்" என்றும், 'வவ்ருதே பஞ்சபிராயுதைர் முராரே:' என்றும் சொல்லா நின்றார்களே. அப்படிப்பட்ட மஹான்கள் இப்போதும் ஆங்காங்கு அவதரிக்கின்றார்களென்றே தெரிவதால் அன்னவர்களுக்கு வ்யாவ்ருத்தமாக ஒருவகுப்பு இருக்கவேணுமன்றோ. அவர்களை முக்த ப்ராயர் என்ற வகுப்பில் எண்ணலாமென்பர் பெரியோர்.

ஆக, இந்நிலத்திலுள்ள சேதநர்கள் பத்தர், முமுக்ஷுக்கள், முக்தப்ராயர், என மூன்று வகுப்பினரென்றதாயிற்று. இவர்களுள் பத்தரையும் முக்தப்ராயரையும் விட்டிட்டு முமுக்ஷுக்களை யெடுத்துக் கொள்வோம். முமுக்ஷுக்கள் நித்ய முக்தர் களிற் காட்டிலும் மிகச்சிறந்தவர்களென்று குலாவப்படுகிறுர்கள். நம்மாழ்வார் திருவிருத்தத்தில் (79) "வேதனை வெண்புரிநூலனை சீதனையே தொழுவார் விண்ணு ளாரிலுஞ் சீரியரே" என்றருளிச் செய்கிறுர். இந்நிலத்திலிருந்து கொண்டு எம்பெருமானை யநுபவிக்கப் பெறுமவர்கள் பரம பதத்திலுள்ளவர்களிற் காட்டிலும் சிறப்புடையர் என்கிறுர். இடைவிடாது பகவதநுபவம் செய்வதற்கென்றே வாய்த்த இடமான பரமபதத்தில் பகவதநுபவத்திற்கு எவ்வகையான இடையூறுமில்லையாதலால் அங் கிருந்து கொண்டு பகவானை யநுபவித்தல் வியப்பன்று; உண்டியே உடையே உகந் தோடு மிம்மண்டலம் பகவதநுபவத்திற்கு நேர்விரோதியாதலால் அப்படிப்பட்ட இந்த இருள்தருமா ஞாலத்திலிருந்து கொண்டே அங்ஙனம் நித்யாநுபவஞ் செய் தலில் மிக அருமையுண்டாதலால் அவ்வருமையைப் போக்கி எம்பெருமானை யநுபவிக்குமவர்களை நித்ய முக்தர்களினும் மேம்பட்டவர்களாகக் கூறத் தடை யுண்டோ? ஒருசிறந்தகாரியத்தைப் பிரதிபந்தகமில்லாதவிடத்தில் தலைக்கட்டுதலிற் காட்டிலும் பிரதிபந்தகம் மலிந்த விடத்தே தலைக்கட்டுதல் வியக்கத் தக்கதன்றோ. "பாவியேனைப் பல நீகாட்டிப்படுப்பாயோ" என்றும் 'கிறிசெய்தென்னைப் புறத் திட்டு இன்னங் கெடுப்பாயோ" என்றும் "உண்ணிலாவிய ஐவரால் குமை தீற்றி என்னையுன் பாதபங்கயம் நண்ணிலாவகையே நலிவான்" என்றும் மாஞானிகளுங் கூடக் கதறுமிடத்திலே யிருந்துகொண்டு முமுக்ஷுக்களாயிருக்குமவர்கள் உண் மையில் மிக மேம்பட்டவர்களேயாவர்.

இந்த மேம்பாட்டுக்கு மற்றொரு காரணமுமுண்டு; இடையூறு ஒன்றுமில்லாத தான உயர்நிலத்தில் பண்ணக்கடவதான அநுபவத்தை இடையூறுகள் மலிந்த இந் நிலத்திலே பண்ணுவது சிறந்தது என்பது கிடக்கட்டும். மற்றொன்று ஆழ்ந்து பார்க்கவேண்டியதுண்டு இங்கு. பரமபதத்தில் அநுபவமுள்ளதென்றும் இந்நிலத் தில் அநுபவ மநோரதமுள்ளதென்றும் அறிந்திருக்கிறீர்கள். அநுபவம் சிறந்ததா, மநோரதம் சிறந்ததா? என்று விமர்சிக்குமளவில், இஷ்டமான விஷயத்தை அநுபவிப்பதிற்காட்டிலும் அநுபவிப்போமென்னும் மநோரதமே சிறந்ததா மென்பதை அநுபவ ரஸிகர்கள் எளிதிலுணர்வர். தேனூறி யெப்பொழுதும் தித்திக்குமியல்பினது மநோரதமேயாம். திருவரங்கஞ்சென்று திருவத்யயநோத் ஸவம் ஸேவிக்க வேணுமென்று ஒருவற்கு ஆவல் இருப்பதாக வைத்துக்கொள்க. ஒரு விசை சென்று ஸேவித்து வந்துவிட்டால் அவ்வளவிலே ஆசை தீர்ந்து விட்ட தாகும். மநோரதமாய்ச் செல்லுமாகில் அது அநுபவபர்யந்தம் ரஸத்தரமா யிருக்கும். சந்தனம் பூசிக்கொள்ளுதல், புஷ்பம் சூட்டிக்கொள்ளுதல் முதலிய அலங் கார காரியங்களில் ப்ரமசாரிகளுக்குள்ள ஆவல் க்ருஹஸ்தர்களுக்கு இல்லாமையும் இங்கு ஒரு உதாஹரணமாகக் காட்டத்தகும்.

திருச்சந்த விருத்தத்தில் திருமழிசைப் பிரான் "அயனரன் றாடிஞேடு நாட்டமாயிரத்தனேடு நண்ணினும், விடதான போகமெய்தி வீற்றிருந்தபோதிலும், கூடுமாசை யல்லதொன்று கொள்வனே குறிப்பிலே" என்றருளிச் செய்கிறுர். வீடதான

போகமெய்து வதிற்காட்டிலும், கூடவேணுமென்கிற ஆசையே பரமோத்தேச்ய மாகச் சொல்லப்பட்டதாயிற்று.

எம்பெருமானாரும் ஸ்ரீவைகுண்ட கத்யத்தில் "கதாஹம் பகவந்தம்" என்று தொடங்கி, கதா, கதா, கதா என்றருளிச் செய்கிறார். கதா கதா கதா என்று பாரிக்கும் பாரிப்பிலுள்ள அதிசயம் அநுபவத்திலிருக்குமாவென்று ஐயுறவேண்டியிருக்கிறது.

ஆக, முக்திதசையிற்காட்டிலும் பந்ததசையில் முமுக்ஷுவாய் ராஜ்யம் பெற்று "எந்நாள் யானுன்னை இனிவந்து கூடுவனே" உனபாதம் சேர்வதடியேனெந்நாளே" என்று கதறிக் கொண்டு பாரிக்கிற பாரிப்பின் சுவையே சிறந்ததென்று நிருபித்தோமானோம்.

9. பக்தியின் தத்துவம்

உலகில் காணும் மஹான்களை நாம் இரண்டு வகுப்பில் சேர்த்துப் பேசுகின்றோம். சிலரை மஹாஜ்ஞானிகள் [மஹபண்டிதர்கள்] என்று வழங்குகிறோம். சிலரை மஹாபக்தர்களென்று புகழ்கிறோம். பாண்டித்யமும் பரமபக்தியும் ஒரே நபரிடத்தில் ஒன்று சேர்ந்திருக்கமுடியாத தன்மைகளல்ல. இருளும் ஒளியும் ஒன்று சேர்ந்திருக்க மாட்டாதவை யென்பதுபோல இந்த ஜ்ஞானபக்திகளும் ஒன்று சேர்ந்திருக்கமாட்டாதவை யென்பதில்லை. நம்முடைய பூர்வாசாரியர்களும் மற்றும் பல பெரியார்களும் ஜ்ஞான பக்தி விரக்தி நிதிகளாயிருந்தவர்களே. ஆனல் இக்காலத்தில் இவற்றை நாம் ஏகாச்ரயத்தில் காண்பது அரிதேயாகின்றது. ஞானமுள்ளவிடத்தில் பக்தியையும் அநுஷ்டானத்தையும் காணமுடிகிறதில்லை. இவை காணுமிடங்களில் ஞானத்தைக் காண்பது அரிதாகின்றது.

உலகில் ஜ்ஞாதாக்களுக்கு கௌரவம் அதிகமா? பக்திமான்களுக்கு கௌரவம் அதிகமா? என்று நாம் பார்த்தால், உண்மையில் பக்திமான்களுக்குத் தான் கௌரவம் அதிகமாக இருக்கவேண்டும்; ஆனல் ஜ்ஞாதாக்களுக்கே அதிகமான கௌரவம் ஆங்காங்கு செய்யக்காண்கிறோம். இதற்குக் காரணமென்னவென்றல், இவர்கள் போலிபக்தர்களா? உண்மை பக்தர்களா? என்று யதார்த்தமாகக் கண்டுபிடிக்கமுடிகிறதில்லை. வித்வான்களென்கிற வகுப்பிலும் உண்மை வித்வான்கள் போலி வித்வான்களென்கிற வேற்றுமை யிருந்தாலும் வாயிலிருந்து வெளிவரும் பேச்சுக்களைக் கொண்டு இன்னர் உண்மைப்பண்டிதர், இன்னர் போலிப்பண்டிதர் என்று தெரிந்துகொள்ள முடிகிறது, பக்திமான்களை இங்ஙனே தெரிந்து கொள்வது முடியாத காரியமாக இருக்கின்றது.

பக்தனென்று வெளிக்குக் காட்டிக்கொள்ளக் கூடிய வேஷபூஷணங்களைத் தரித்துக் கொள்வது அனைவர்க்கு மெளிதாகின்றது. உள்கனிந்த உண்மையான பக்திபிறப்பது மிகவும் அரிதாயிருக்கின்றது. பன்னிரண்டு திருமண்காப்புகளை அழகாயும்ப்ரகாசமாயும் தரித்துத் திருமணித் தாவடம் திருப்பவித்திரம் முதலியன பூண்டு கொண்டு பாகவதோத்தமனென்று உலகமடங்கலும் உகந்து கொள்ளும் படியான வேஷத்தோடு வெளிவருவதில் விசேஷ ச்ரமமில்லை. இதுபோலவே முடிமுதல் அடிவரையில் திருநீறுபூசி ருத்ராக்ஷமாலையணிந்து சிவபக்தசிகாமணியாக விளங்குவதிலும் தாமத மேற்படாது. ஆனல் மனத்தில் அழுந்திக்

கிடக்கும் பாபவாஸனைகளை அகற்றிப் பரமேச்வரனிடத்தில் உண்மையான அன்பு கொண்டு தன்மயடாவத்தையடைவ தொன்றே கஷ்ட ஸாத்யமும் காலவிளம்பத்தில் அருமையாய்ப் பெறக்கூடியதுமாம்.

பக்தியின் வெளிவேஷங்களை வஹித்துக் கொள்வதனால் மாத்திரம் ஒருவன் உண்மையான பக்தனாக ஆய்விடமாட்டான். அநாதிகால ஸஞ்சிதமான பாபங்கள் கழிந்து துர்வாஸனைகள் தொலைந்து பரமபுருஷ விஷயத்தில் பரவசமான பக்தி ஏற்பட்டுத் தன்மயமாய்ப் போனால்தான் பக்தனாக முடியுமென்பதை ஒவ்வொருவரும் மனத்தில் அழுத்தவேண்டும். பக்தியின் வெளிச்சின்னங்கள் அவசியமில்லையென்று நாம் சொல்லுகின்றிலோம். அவை மிகவும் அவசியமே யென்பதைப்பற்றி முன்னொரு வியாஸம் விரிவாக எழுதி யிருக்கின்றோம். அந்த வெளிச்சின்னங்களைத் தரித்துக்கொள்வதனால் மாத்திரம் திருப்தி யடைந்து விடாமல் உண்மையான பக்திக்கு முயற்சி செய்யவேண்டும்.

பெரும் பெருந் தருமகாரியங்களைச் செய்கிறவனே பக்தன் என்று சிலர் நினைக்கக்கூடும். குளம் வெட்டுவிப்பது, சத்திரம் சாவடிகள் கட்டுவிப்பது, தண்ணீர்ப் பந்தல் வைப்பது இவைபோன்ற பல வெளிப்பகட்டான காரியங்கள் செய்கிறவன் பக்தன் எனச் சிலர் நினைக்கிறார்கள். உண்மையுரைக்குங்கால் இக்காரியங்கள் ஒரு விதத்திற் சிறந்தவைகளேயாகிலும் இவ்வகைக் காரியங்கள் செய்வதனாலேயே ஒருவன் பக்தனென்னும் வ்யபதேசத்திற்குப் பூர்ணபாத்திரமாய் விடமாட்டான். இவ்விதமான பெருங்காரியங்கள் செய்ய அனைவர்க்கும் இயலாது, யாரோ சிலர்தான் இவற்றைச் செய்யக்கூடும். அங்ஙனம் செய்பவர்களை விசேஷ தனிகர்களென்றும் விசாலமனம் படைத்தவர்களென்றும் சொல்லலாமே யல்லது பக்தர்களென்று சொல்லுவதற்கில்லை.

ஆனால் உண்மையான பக்தனுடைய அடையாளமென்னவென்று கேள்வி பிறக்கலாம். உண்மையான பக்தனைக் காண்பது அரிதேயாகிலும் கண்டு பிடிப்பது கஷ்டமல்ல. எம்பெருமானிடத்தில் சுயநன்மை கருதாத அன்புடைய பக்தனிடத்தில் ஒவ்வொரு ஸமயத்திலும் நாம் விசேஷத்தைக் காணலாம். எந்த காலத்திலும் எந்த தேசத்திலும் எந்த நிலைமையிலும் பக்தன் பக்தனாகவே யிருப்பான். நீராடுவது உண்பது முதலிய காரியங்களைச் செய்யும்போதும், பந்து மித்திரர்களோடு பழகும் போதும், பிணிபால் வருந்தும் போதும், பலவகைக் கஷ்டநஷ்டங்கள் ஏற்படும் போதும், விசேஷமான லாபங்கள் கிடைக்கும்போதும் பக்தன் பக்தனாகவே யிருப்பான். எல்லாக் காலதேச நிலைமைகளிலும் ஸாதாரணமான நிலைமை மாறாமலே அவனிருப்பான். எவ்விதமான கொந்தளிப்பும் அவனிடத்திற் காணமுடியாது. எப்பொழுதும் இயற்கையான ஸந்தோஷத்தோடு சாந்தமூர்த்தியாக இருப்பான். எவ்விதமான மாறுபாடும் அவனிடத்திற் காண முடியாது. மஹத்தான ஆபத்துக்களிலும் தன்னிலைமையிலிருந்து பிறழமாட்டான். பொறுமையும் தயையும் சாந்தியும் பரிசுத்தியும் இன்னும் இதுபோன்ற பல நற்குணங்களும் அவனிடத்திற் பதிந்து கிடக்கும். பக்தியின் நிலைமை முதிர முதிர இக்குணங்கள் வளர்ந்து கொண்டே வரும்.

ஏவன் தனது கடமைகளைக் குறைபறச் செய்கிறானோ, மஹத்தான ஆபத்துக்கள் மிடைந்தபோதும் அக்கடமைகளைச் செய்வதில் மயிரிழையும் பிசகுகிறானில்லையோ. தான் பிறர் சுற்றத்தார் மற்றையோர் மித்திரன் சத்துரு என்கிற பேதபாவனையின்றி அனைவரிடத்தும் ஒருபடியாக நடந்து கொள்ளுகிறானோ, உள்ளும் புறமுமொத்த சுத்தனாய் நேரான நெறியில் நிலைநிற்கிறானோ, எம்பெருமானிடத்தில் அகங்குழைந்த அன்புடையவனோ அவனே உண்மையான பக்தனாவான். பாலையும் நீரையும் பகுத்திடும் அன்னம்போல் அத்தகைய பக்தர்களை அநாயாஸமாகக் கண்டறிவர் பெரியோர்.

ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் மூன்றாவது அம்சத்தில் 'ஏழாமத்யாயத்தில் யம கிங்கர ஸம்வாதம் மஹாபக்தர்களின் லக்ஷணத்தை யமன் தனது கிங்கரர்களுக்கு மிக விரிவாகக் கூறுவதாய் நிபந்திக்கப்பட்டிருக்கின்றது. அங்குள்ள பல ச்லோகங்களுள் ஒரு ச்லோகம் மாத்திரமே ஈண்டெடுத்துக் காட்டப்படுகின்றது.

[ந சலதி நிஜவர்ணதர்மதோ யஸ் ஸமமதிராத்ம ஸுஹ்ருத் விபக்ஷபக்ஷே. ந ஹரதி ந ச ஹந்தி கிஞ்சிதுச்சை: ஸிதமநஸம் தமவேஹி விஷ்ணுபக்தம்] என்பது கண்டபாடம் செய்யத்தக்க ச்லோகரத்னம். இதன் பொருள்தான் கீழேவிவரிக்கப்பட்டது.

10. ஆதி சங்கராசார்யோக்தி பரிசீலனம்

ஸ்ரீக்ருஷ்ணபரமாத்மா வாஸ்தவமாகத் திருவவதாரம் செய்து வாஸ்தவமான அர்த்தங்களை நிரப்பி வாஸ்தவமாக கீதாசாஸ்த்ரத்தை யவதரிப்பித்தருளினதாக ஸ்ரீபகவத் ராமாநுஜனடியார்களான நாம் நம்பியிருக்கிறோம். ஸ்வாமியிட்டருளின கீதாபாஷ்யத்தின் அவதாரிகையிலும் மேலே பலச்லோகங்களின் பாஷ்யத்திலும் இந்த நம்பிக்கையே நமக்கு ஊர்ஜிதமாக்கப்படுகின்றது. ஸ்ரீமத் சங்கராசார்யஸ்வாமிகளியற்றிய பாஷ்யத்தின் ப்ரக்ரியை இதற்கு மாறாகவுள்ளது. அவர் தம்முடைய பாஷ்ய அவதாரிகையில் [பகவாந்......ஸ்வமாயயா தேஹவாநிவ ஜாத இவ சலோகாநுக்ரஹம் குர்வந் லக்ஷ்யதே] என்றெழுதிவைத்திருக்கக் காண்கிறோம். இதனால், பகவான் உண்மையில் தேஹபரிக்ரஹம் செய்தருளவில்லையென்றும், உண்மையான அவதாரம் செய்தருளவில்லை யென்றும், மாயையினால் ஏதோ ஜனங்களை மயக்கிக் காட்டினதாகவும் சங்கராசாரியர் அபிப்ராயப் படுவதாக விளங்குகின்றது. இப்படி இவர் அபிப்ராயப்படுவதற்கு ஒரு காரணபாஸமுண்டு; அதாவதென்னவெனில்; மேலே நான்காமத்யாயத்திலே பகவான் தானே தன்னுடைய அவதாரத்தைப்பற்றிப் பேசிவருகையில் (4-6) "அஜோபி ஸந்நவ்யயாத்மா பூதாநாமீச்வரோபி ஸந், ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்ட்டாய ஸம்பவாம்யாத்மமாயயா" என்றதில் ஆத்ம மாயயா ஸம்பவாமி' என்றுள்ளது. இதற்கு உண்மையான பொருள் எதுவோ அது பகவத்ராமாநுஜ பாஷ்யத்தில் ப்ரமாண ப்ரதர்சந புரஸ்ஸரமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. வைதிக நிகண்டுவையும் அதையநுஸரித்த அபியுக்த ப்ரயோகத்தையும் காட்டி ஸங்கல்பரூபஜ்ஞானமே இங்கு மாயா சப்தார்த்தமென்று ஸ்வாமி நிர்ணயித்திருக்கிறார். இதுதான் மஹர்ஷிகளின் அபிப்ராயத்திற்கு மிகவுமிணங்கிய ப்ராமாணிகமான பொருள். ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் (6–5-84) *இச்சா

க்ருஹீதாபிமதோருதேஹ:' என்று மாயாசப்தஸ்தானத்தில் இச்சாசப்தத்தை நிஸ்ஸந்தேஹமாக இட்டு, பகவான் தன்னுடைய இச்சையினாலே தனக்கு அபிமதமான பல திவ்யமங்கல விக்ரஹங்களைப் பரிக்ரஹித்துக்கொண்டு அவதரிப்பதாகச் சொல்லப்பட்டுள்ளது.

இங்கு சங்கராசார்யர் கானலானது தன்னிடத்தில் தண்ணீர் இல்லாமலிருக்கச்செய்தேயும் அது இருப்பதுபோல் காட்டுகிறதல்லவா? அப்படியே பகவானும் தான் உண்மையில் தேஹபரிக்ரஹம் பண்ணாதவனாகையாலே தன்னிடத்தில் தேஹமில்லாதிருக்கச் செய்தேயும் இருப்பதுபோல் மாயையினால் காட்டிக் கொண்டு நிற்கிறான் என்று எழுதியிருக்கிறார். மாயா என்னுஞ்சொல்லுக்கு பொய்யென்பதே இவர் கொண்ட பொருளாகும். அந்த நாலாவது அத்யாயத்திலேயே மேல் ஒன்பதாவது ச்லோகத்தில் [ஜந்ம கர்ம ச மே திவ்யம் ஏவம் யோ வேத்தி தத்வத:, த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந.] என்பதில் பகவான் தானே தன்னுடைய அவதாரத்தையும் அவதார சேஷ்டிதத்தையும் ஸத்யமாக எவன் அறிகிறானோ அவன் வர்த்தமாந தேஹத்தை விட்டொழித்து மறுபிறவியடையாமல் தன்னையே யடைவதாகச் சொல்லியிருக்கின்றான். 'மே ஜந்ம கர்ம ச ய: தத்வத: வேத்தி. என்றிருப்பதை ஸ்வபக்ஷப்ரதிகூலமாக நினைத்த சங்கராசார்யர் வெகு சாதுர்யமாய் வேறுவிதமாக அந்வயம் காட்டியுள்ளார். தத்த்வத: என்பதை 'யோ வேத்தி' என்பதில் கூட்டாமல் 'தத்த்வத: தேஹம் த்யக்த்வா' என்று உத்தரார்த்தத்திலே அந்வயித்துப் பொருளுரைத்தார். அவர் இவ்வளவு ச்ரமம் எதற்காகப்படுகிறாரென்றால், 'ஸம்பவாமி ஆத்மமாயயா, என்றுள்ள விடத்தில் மாயா சப்தத்திற்குத் தாம் கொண்ட பொருளே பொருளென்கிற வொரு அபிநிவேசத்தினால்தான். உண்மையில் தத்வத: என்பதை எவ்விடத்தில் அந்வயித்தாலும் ஸர்வமித்யா வாதிகளான விவர்களுக்கு பங்கமே ஏற்படும். ப்ரஹ்மத்திற்போல ஜீவனுக்கும் தேஹஸம்பந்தமும், அதன் விநாசமும் தத்வத: உண்டென்று இவர்கள் இசையாமையாலே.

ப்ராமாணிகர்கள் இங்கு மத்யஸ்த நிலையில் நின்று ஒன்று குறிக்கொள்ள வேண்டும். தைத்திரீயயஜுர்ப்ராஹ்மணத்தில் காடக ச்ருதியில் மூன்றும் ப்ரச்நத்தில் "யாவந்த: பாம்ஸவோ பூமே: ஸங்க்யாதா தேவமாயயா" என்று ஓதப்பட்டிருக்கின்றது. பூமியிலுள்ள மண்துகள்களெல்லாம் தேவர்களின் மாயையினால் கணக்கிடப்பெற்றவையாக இதில் சொல்லப்படுகிறது. இங்கு மாயையென்பதற்கு பிறர் கூறும் பொருள் பொருந்த மாட்டாதென்பது வெளிப்படை. பூமியிலுள்ள மண்துகள்கள் மனிதர்களின் ஞானத்தினால் கணக்கிட முடியாதவையாயினும் தேவர்களின் ஞானத்தினால் கணக்கிடக்கூடியவையே யாதலால் இங்கு 'தேவமாயயா' என்றதற்கு 'தேவர்களின் ஞானத்தாலே' என்பதுதான் பொருளென்று யாவரும் நிராக்ஷேபமாக இசையத்தக்கதாகும். வித்யாரண்யர் முதலான வேதபாஷ்யகாரர்களும் இப்படித்தான் இங்குப் பொருள் வரைந்துள்ளார்கள். ஆகவே (மாயா) என்பதற்கு 'மித்யா' என்று பொருள் கொள்வது பொருத்தமற்றதென்று தெளியக்கடவது.

அஸுரராக்ஷஸாதிகள் செய்கிற செயல்களை மாயை என்று சொல்லுவதுண்டு. அங்கும் மித்யா என்கிற அர்த்தம் கிடையாது. ஆச்சர்யகரம் என்பது பற்றியே அங்கு மாயாசப்த ப்ரயோகம் பண்ணுவது. பிள்ளை லோகாசார்யர் தத்வத்ரயத்தில் அசித் ப்ரகரணத்தில் (10) "மாயையென்கிறது விசித்ரஸ்ருஷ்டியைப் பண்ணுகையாலே" என்றருளிச்செய்த விடத்து வியாக்யானத்தில் மணவாள மாமுனிகள் "அஸுரராக்ஷஸாதி க்ரியைகளை ஆச்சர்யகரத்வத்தைப் பற்ற மாயாசப்தத்தாலே சொல்லுகிறுப்போலே இத்தையும் [ப்ரக்ருதியையும்] மாயை யென்கிறது விசித்ர ஸ்ருஷ்டியைப் பண்ணுகையாலே. அதாவது, ஒன்று போலொன்றன்றிக்கே விஸ்மயநீயங்களான கார்யங்களை ஜனிப்பிக்கை" என்றருளிச் செய்ததும் இங்கே அநுஸந்தேயம். "தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா" (7-14) என்ற கீதாச்லோகத்தின் பாஷ்யத்தில் ஸ்வாமி இதை வெகு விசதமாக நிரூபித்தருளுகிறார். மாயாசப்தத்தின உண்மைப் பொருளையுணராதே தவறான பொருளைக் கொண்டதன் பயனாகவே மாயாவாதிகளின் வாதங்கள் மிகமிக வளர்ந்துவிட்டன.

கண்ணபிரான் அவதரித்ததும் பொய், தேஹபரிக்ரஹம் பண்ணினதும் பொய் என்று சொல்லும் பக்ஷத்தில் கீதாசாஸ்த்ரம் அவதரித்ததும் பொய்யென்றே சொன்னதாகத் தேறிவிடும். பொய்யான சாஸ்த்ரம் நம்முடைய உஜ்ஜீவனத்திற்கு எப்படி ஸாதனமாகும்? வேங்கடாத்வரி இயற்றிய விச்வகுணதர்சத்தில் வேதாந்தி வர்ணனத்தில் "த்ருச்யம் மித்யா த்ருஷ்டிகர்த்தா சமித்யா தோஷோ மித்யேத்யேவ யா திரமீஷாம், ஸாதிஷ்டாநாம்சேபி கிம் நேதி சிந்தா ஸாதிஷ்ட்டாநாம் பண்டிதாநாமுதேதி" என்றொரு ச்லோகம் வெகு அற்புதமாகக் காண்கிறது. 'பார்க்கப்படுகிற பொருள்களெல்லாம் பொய். பார்க்கிறவனும் பொய், அவித்யையாகிற தோஷமும் பொய் என்று கொள்ளுகிற இந்த மாயாவாதிகள், இவற்றுக்கு ஆச்ரய பூதமான ப்ரஹ்மமும் பொய்யென்று முடித்திருக்கலாமே; ஏன் அதை மாத்திரம் ஸத்யமென்று கொண்டார்களோ தெரியவில்லை என்பதே இந்த ச்லோகத்தின் கருத்து. பொய்யன் சொல்லுகிற வார்த்தைகளும் பொய்யாகுமாகையாலே தம்மைப் பொய்யரென்று நிலைநாட்டிக் கொள்ளுகின்ற இந்த மாயாவாதிகள் சொல்லுவதெல்லாம் பொய்யே என்பது இவர்கள் தம்மாலேயே ஸ்தாபிக்கப்பட்டுத் தீருவதனால் இவர்களைக் கண்டிக்க நாம் சிறிதும் ப்ரயாஸம் கொள்ளவேண்டியதில்லை யென்றும் ஒரு ரஸிக பண்டிதர் எழுதிவைத்திருக்கக் காண்கிறோம்.

11. விதியைக்காட்டிலும் மதி மேம்பட்டது

விதியானது எவராலும் கடக்க முடியாததெனப்படும். "தைவம் திஷ்டம் பாகதேயம் பாக்யம் ஸ்த்ரீ நியதிர் விதி:" என்று அமரகோசமானதால் தைவத்திற்கே விதியென்று பெயர். ஒவ்வொரு பிராணிக்கும் ஜனிக்கும்போதே ஆயுள் முதலானவற்றில் ஒருவிதமான தைவஸங்கல்பம் ஏற்பட்டுவிடுகிறது. அதுதானே விதியென்பது. அந்த விதிப்படியே தான் எதுவும் நடைபெற்றுவரும். அது பழுதுபடமாட்டாது. விதிக்கு மாறாக எதுவும் நடைபெறாது. "லலாடலிகிதா ரேகா பரிமார்ஷ்டும் ந சக்யதே" என்கிற வசனம் யாவருமறிந்தது. தலையெழுத்து ஒருவராலும் தவிர்க்க முடியாதது, என்பது இதன் கருத்து.

உண்மையில் தைவபலமென்பது எல்லாவற்றினும் மேம்பட்டதாதலால் அது அநிவார்யமென்பது மறுக்க முடியாததே. ஆனால் "மதியினால் விதியை வெல்ல முடியும்" என்பது நுண்ணறிவாளர்களின் முதுமொழியாகக் காண்கிறது. இதற்குச் சேர இதிஹாஸ புராணங்களிற் கதைகளும் பல காணப்படுகின்றன. சிலகேண்மின்.

ஸாவித்ரியினால் தனக்கு ஸத்தியவானோடு விவாஹம் நிச்சயிக்கப்பட்டது. இதையறிந்த நாரதமுனிவர் 'ஸத்யவானுடைய ஆயுள் மிகவும் குறுகியுள்ளது; அவனை மணந்துகொண்டால் ஸாவித்திரி நீண்டகாலம் வாழமுடியாது; எப்படியாவது இந்த விவாஹத்தை நிறுத்தி வேறு தீர்க்காயுஸ்ஸானவொரு வரனுக்கு இவளை விவாஹம் செய்துகொடுப்பதே நலம்' என்று தெரிவித்தார். ஸாவித்ரி இதற்குச் சிறிதும் உடன்படவில்லை. விவாஹம் மாநஸிகமென்றும் வாசிகமென்றும் காயிகமென்றும் மூவகைப்படும் இன்னவரனை விவாஹம் செய்துகொள்ள வேணுமென்று நெஞ்சால் நினைப்பது மாநஸிக விவாஹம். அதனை வெளிப்படையாக பேசி முடித்துக்கொள்வது வாசிகவிவாஹம். அநுஷ்டான பர்யந்தமாக முடித்துக்கொள்வது காயிக விவாஹம். பிராமாணிகர்களுக்கு இம்மூன்றும துல்யமேயன்றி இவற்றுள் வாசி கிடையாது. இன்னானை மணந்துகொள்வதென்று நெஞ்சால் நினைத்தவாறே அது நடந்தேறியதுதான். அதை மாற்றி வேறு விவாஹம் செய்துகொள்வதென்பது விதவா விவாஹ பர்யாயமேயாகும். உத்தமியான ஸாவித்திரி இதனை எங்ஙனம் இசையவல்லள்? ஏற்கெனவே பதியாக வரிக்கப்பட்ட ஸத்யவானைத் தவிர்த்து வேறொருவனை நெஞ்சாலும் நினையேனென்று உறுதிகொண்டாள். என் தலையெழுத்துப்படி ஆகட்டுமென்றுகூறி அவனையே மணம்புணர்ந்து வாழ்ந்து வந்தாள். ஒரு ஸம்வத்ஸரத்திற்குள் ஸத்யவானுக்கு மரணம் அணித்தாயிற்று. ஸாவித்ரி யமனை நேரில் கண்டு பேசித் தனது வாக்சாதுர்யத்தினால் அவனை யீடுபடுத்தித் தான் தீர்க்க ஸுமங்கலியாக வாழப்பெற்றாள். இக்கதை மஹாபாரதத்தில் வநபர்வாவின் முடிவில் வெகு அழகாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இக்கதையைச் சிறிது விரிவாகக் கேண்மின்;—

மத்ர தேசத்தரசன் அச்வபதியென்பவன் ஸாவித்ரீ தேவதையின் உபாஸனையினால் ஒரு மகளைப் பெற்று அவளுக்கு ஸாவித்ரீ யென்றே பெயரிட்டு வளர்த்துவர, அவளுக்கு விவாஹயோக்யமான வயஸ்ஸுவந்து அவளதுதேஜஸ்ஸு அப்ரதிமமாய் ஒருவர்க்கும் அணுகவொண்ணாதபடி யிருந்ததனால் அவளை ஒருவரும் மனைவியாக வரியாதிருக்க, பிதாவானவர் 'பெண்ணே! நீயே சென்று உனக்குத் தகுந்த வரனை ஸ்வயம்வரமாக லபிக்கக்கடவை' என்று கட்டளையிட்டு மந்திரிகளுடன் அவளைத் தேரின்மேலேற்றி யனுப்ப, அவளும் தந்தையிட்ட கட்டளையின்படி பலதேசங்களிலும் சென்றுபார்த்துத் தனக்கேற்ற வொருவரனை நிர்ணயித்துக்கொண்டு தந்தையிடம் திரும்பி வந்தாள். அப்போது நாரத மஹர்ஷியும் தந்தையும் உடன் வீற்றிருந்தனர். 'இவள் எங்குப்போய் வருகிறாள்? என்ன செய்தி?' என்று முனிவர் கேட்க; ஸாவித்ரியே சொல்லத் தொடங்கினாள்:—ஸால்வதேசத்தரசனான த்யுமத்ஸேனன் கண்ணில்லாதவனும் ராஜ்ய மிழந்தவனுமாயிருக்கின்றானே; அவனுடைய அருமைப் புதல்வன் ஸத்யவானென்பவன், அவனை நான் கணவனாக வரித்துவந்திருக்கிறேனென்றாள். இது கேட்டவுடனே நாரதமுனிவர் 'அந்த ஸத்யவான்

மஹாகுணசாலி யென்பதில் ஐயமில்லை; ஆனால் அவனது ஆயுள்முடிவு இன்னும் ஒரு ஸம்வத்ஸரத்தினுள்ளே யாம்' என்று தெரிவிக்க, அரசன் மகளைநோக்கி 'அம்மா ஸாவித்ரி! முனிவர் சொல்வதைக் கேட்டாயன்றோ; அல்பாயுள்ளான அவனை விட்டு வேறு கணவனைத் தேடிக்கொள்' என்று சொல்ல, அதற்கு ஸாவித்ரி சிறிதும் உடன்படாமல் 'என்விதிப்படியாகட்டும்; மாநஸிகமான விவாஹம் முடிந்துவிட்ட பிறகு இனி அதனை மாற்றிக்கொள்வதென்பது நடவாத காரியம்' என்று சொல்ல, அரசனும் நாரத முனிவருடைய அநுமதியைப் பெற்றுக்கொண்டு ஸாவித்ரியின் விவாஹத்தை நிறைவேற்றுவதாகப் பரிஜந பரிவார புரோஹிதாதிகளுடன் புறப்பட்டு அரண்யத்தில் தாய் தந்தையோடு வாஸஞ்செய்துகொண்டிருக்கின்ற ஸத்யவானுக்கு முறைப்படி விவாஹம் செய்து கொடுத்து மீண்டுவந்தனன்.

ஸத்தியவான் ஸாவித்திரியோடு இல்லற வாழ்க்கையை நடத்திவருகிறான். ஸாவித்திரி ஸர்வாபரணங்களையும் கழற்றிவிட்டு மரவுரியையும் காஷாயத்தையுமணிந்து கொண்டு பதிசுச்ரூஷையில் ஊன்றி யிருந்தாள். இப்படி காலம் சென்று கொண்டிருக்கையில் நாரதமுனிவர் சொல்லியிருந்த நாள் குறுகினதை நெஞ்சிற் கொண்டாள். கணவனுடைய மரணம் நான்கு நாளில் நேரப்போகிறதென்றறிந்து முன்னமே யொரு த்ரிராத்ர வ்ரதத்தை யனுட்டித்து முடித்தாள். அந்த நாளும் அணுகிவிட்டது. ஸத்யவான் கோடாலிப்படையை யெடுத்துக் கொண்டு வழக்கம் போல் வனஞ்சென்றான். அன்று ஸத்யவான் வனமேகி உணவுப்பொருள்களை சேகரித்துக்கொண்டு விறகுவெட்டப் புகுகையில் மரணக்குறிகள் தோன்றத் தொடங்கின. உடனே அவன் தனக்குண்டான கிலேசங்களைச் சொல்லிக்கொண்டு ஸாவித்ரியின் மடியில் தலைவைத்துத் தரையில் படுத்துக் கொண்டான். நாரத முனிவர் சொன்னபடி கணவனது மரணகாலம் ப்ராப்தமாய்விட்டதென்றறிந்த ஸாவித்ரி மிகவும் சோகித்திருக்கையில், பாசமும் கையுமாக அங்கு வந்து நின்ற யமனையும் கண்டு மெல்லவெழுந்து கைகூப்பி நின்று உம்மைப்பார்த்தால் அமாநுஷ தேவதையாகக் காண்கிறது; நீர் யார்? இவ்விடம் எதற்காக வந்தீர்?' என்று விநயமாய்க் கேட்க; அதற்கு அவர் 'அம்மா ஸாவித்ரி! நீ சிறந்த பதிவிரதையாதலால் உன்னோடு பேசுகிறேன். நான் யமன்; உனது கணவனுடைய வாழ்நாள் முடிந்துவிட்டபடியால் அவனுயிரைக் கொண்டுபோக வந்திருக்கிறேன், பெரும்பாலும் எனது கிங்கரர்களேவந்து இக்காரியம் செய்து போவது வழக்கம். ஆயினும் உன் கணவன் பரமதார்மிகனாகையாலே அவர்கள் இவனை யணுக சக்தரல்லரென்று நானே வர நேர்ந்தது, என்று சொல்லிக்கொண்டே ஸத்யவானுயிரைக் கவர்ந்து கொண்டு தென்திசை நோக்கிச் செல்லலுற்றான். ஸாவித்ரியானவள் மிக்க வருத்தத்துடன் யமனைப் பின்சென்றாள். அதுகண்ட யமன் 'அம்மா ஸாவித்ரி! நீ என்னோடு கூட வருவதில் பயனில்லை; திரும்பிச்செல். கணவனுக்குச் செய்யவேண்டிய ஈமக்கடன்களை முறைப்படி நிறைவேற்றப்பார்' என்றான். அப்போதும் ஸாவித்ரி மீளாமல், கணவனுயிர் செல்லுமிடத்தே என்னுயிரும் செல்லத்தக்கதன்றோ வென்று சில தரும நுட்பங்களைச் சொன்னாள், அவைகேட்டயமன் மிகமகிழ்ந்து 'அம்மா! உனது கணவனுயிரைத் தவிர்த்து வேறுவேண்டிய வரம் என்பால் பெற்றுப் போ' என்றான். 'கண்கெட்டு வனத்தில் கிலேசப்படுகின்ற எனது மாமனார் கண்பெற்று வாழ அருள்

புரிக' என்று கோரினாள். யமனும் அங்ஙனமே யாகுக வென்றருள் செய்தவிடத்தும் ஸாவித்ரி மீளாமலே பின்னையும் தொடர்ந்தாள். 'அம்மா! வீணாக சிரமப்பட்டு என்னைப் பின் தொடராதே; திரும்பிச்செல்' என்று யமன் சொல்லவும் திரும்பாமலே மற்றும் பல தருமநுட்பங்களைப் பேசிக்கொண்டே பின்தொடர்ந்தாள். அப்பேச்சுக் களுக்கு மிகமகிழ்ந்த யமன் 'கணவனுயிரைத்தவிர்த்து வேறொரு வரம் பெற்றுப்போ' என்றான். ராஜ்யப்ரஷ்டரான என் மாமனார் ராஜ்யம் பெற்று இனிதுவாழ வேணு மென்று கோரி, அங்ஙனமே வரம் பெற்றும் மீளாமலே மேலும் பலதரும ஸூக்ஷ மங்களைப் பேசிக் கொண்டே பின தொடர்ந்தாள்; தன் தந்தைக்கு நூறு புத்திரர்கள் பிறக்கவேணுமென்று வரம்பெற்றாள். பின்னையும பின்தொடர்ந்து இனிதாகப் பேசிக்கொண்டுபோய், தனக்கு ஸத்யவானிடத்தில் நூறு புத்திரர்கள் பிறக்கவேணு மென்று வரம் கேட்டாள். யமன் மெய்மறந்து அந்த வரத்தையும் கொடுத்து ஸத்யவானுடைய உயிரையும் தந்து போயினன். மதியினால் விதியை வென்று விட்டாளன்றோ விவள்.

மார்க்கண்டேயன் பதினாறுபிராயமே வாழும் விதியுடையனாயிருந்து வைத்தும் தேவதாஸமாராதன பலத்தினால் விதியைக்கடந்து நீண்ட ஆயுள்பெற்றமை கேள்விப் படுகின்றோம். இங்ஙனே பலபல கதைகளினால் விதியை மதியால் வெல்ல லாமென்பது திண்ணமம பெற்றுள்ளது. மதியிலாதவர்களே விதிக்கு வசப்பட்டிருப் பர்கள். அன்னவர்களில் கம்ஸனை நினைப்பது

12. ப்ரஹ்லாதாழ்வான் கண்ட பரமார்த்தம்

சிறுவர்கள் பள்ளிக்கூடம்செல்ல ஆரம்பிக்கும்போது ஒருவர்க்கொருவர் ஸம்பா ஷணை செய்கையில் பல விநோதப் பேச்சுக்களைப் பேசிக்கொள்வதுண்டு. அவற் றுள் ஒரு விநோதப் பேச்சு—'இராமா! கடவுள் இருக்குமிடத்தை நீ சொல்லுவா யானால் உனக்கு ஓரணா தருவேன்' என்று கண்ணன் சொல்ல, அதற்கு இராமன் 'கண்ணா! கடவுள் இல்லாதவிடத்தை நீ சொல்லுவாயானால் உனக்கு இரண்டணா தருவேன்' என்றான் என்பது. இதனால், எம்பெருமான் எங்கும் நிறைந்த பரம் பொருள் என்கிற வுணர்ச்சி இளம்பிராயம் தொடங்கியே நம்மவர்களது நெஞ்சிற் பதிந்திருப்பதாகத் தெரியவருகின்றது. *அந்தர் பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ் ஸ்தித:* என்று வேதாந்தபரிசயம் செய்த பிறகு பெரியார்களுக்கு உண்டாகக் கடவதான உணர்ச்சி சிறுவர்களுக்கு உண்டாகிறதென்றால் இதற்குக் காரணம் உயர்குடிப்பிறப்பே யென்னவேணும். ஸத்குல ப்ரஸூதி யென்பது மஹாஸுக்ருத பலங்களில் தலையானது. உயர்குடியிற் பிறந்தவர்களுக்கு ஆஸ் திக்யம் முதலான சிறந்த குணங்கள் இயற்கையிலேயே தோன்றுகின்றன. எங்கு முளன் கண்ணனென்ற வுணர்ச்சி முற்காலத்தில் ப்ரஹ்லாதாழ்வானுக்குத்தோன்றி யிருந்ததாக இதிஹாஸ புராணங்களினலறிகிறோம். அவ்வுணர்ச்சி ஆஸ்திக குடும் பங்களில் ஒவ்வொரு சிறுவர்க்கும் உண்டாகி வருவதாகக் காண்கிறோம். இளம் பிராயத்திலுள்ள வுணர்ச்சி மேன்மேலும் வளர வேண்டுவது ப்ராப்தமாயிருக்க. இக்காலத்தவர்களுக்கு வயது முற்றமுற்ற இளம்பிராயவுணர்ச்சிக்கு எதிரிடையான வுணர்ச்சியே உந்மேஷமடைவதாகக் காண்கிறது. 'எம்பெருமான் எங்குமுளன்,

என்பதற்கு எதிராக எம்பெருமானெங்குமிலன், எம்பெருமானே யிலன்' என்கிற பிரசாரமே முற்றுகின்றது.

'எம்பெருமான் எங்கும் நிறைந்தபொருளாகில் கோவில்களிற் சென்று தொழ வேண்டுவதேன்? ப்ரஹ்லாதன் எந்தக் கோயிலுக்குப் போனான்?' என்றிப்படிப் பட்டகேள்விகளைக் கேட்க முன்வருகிறார்கள் நவநாகரிகர்கள். காற்று எங்கும் நிறைந்த பூதமாயிருக்க அதற்காக விசிறியைத் தேடுவதேன்? நூறுமாயிரமும் செலவுசெய்து எலெக்ட்ரிக் பங்காக்கள் போட முயல்வதேன? என்று அவர்கள் ஆராய்ச்சி செய்யவேண்டும்.

"அக்நௌ திஷ்டதி விப்ராணாம் ஹ்ருதி திஷ்டதி யோகிநாம்,
ப்ரதிமாஸ்வப்ரபுத்தாநாம் ஸர்வத்ர ஸமதர்சிநாம்."

என்கிறார்கள் மஹர்ஷிகள். இந்தச்லோகத்தின் பொருள்யாதெனில்; பகவான் அந்தணர்களுக்கு அக்நியிலுள்ளான்; யோகிகளுக்கு உள்ளத்தே யுள்ளான்; அறிவிலிகளுக்குப் பிரதிமைகளிலுள்ளான், ஸமதர்சிகளுக்கு ஸர்வத்ர வுள்ளான்-என்பதாம்.

அந்தணர்களுக்கு பகவான் அக்நியிலிருக்கிறானென்றால் என்ன கருத்தெனில்; "குளித்து மூன்றனலை யோம்புங் குறிகொளந்தணமை" என்று திருமாலையில் தொண்டரடிப்பொடியாழ்வாரருளிச் செய்கிறபடி அந்தணர்கள் தங்களுக்குரிய தாம் நித்யகர்மாநுஷ்டானத்தில் நிரதர்களாயிருந்தால்—*வர்ணாச்ரமாசாரவதா புருஷேண பர: புமாந், விஷ்ணு ராராத்யதே பந்தா நாந்யஸ் தத்தோஷகாரக:* என்னப்பட்ட பகவதாராதந நிரதர்களா யிருந்தால் அதன் மூலமாக பகவத் தர்சனம் கிடைக்குமென்றவாறு.

யோகிகளுக்கு ஹ்ருதயத்திலிருக்கிறானென்றது— *மார்வ மென்பதோர் கோயிலமைத்து மாதவனென்னுந் தெய்வத்தை நாட்டி, ஆர்வமென்பதோர் பூவிட வல்லார்க்கு என்று பெரியாழ்வாரருளிச் செய்தபடி ஜிதேந்திரியர்களாய் தியானம் செய்யவல்லவர்களுக்கு அந்த தியானத்தின் மூலமாகவே பகவத் தரிசனம் கிடைக்குமென்றபடி.

அப்ரபுத்தர்களுக்கு ப்ரதிமைகளிலிருக்கிறானென்றது—அர்ச்சாமூர்த்திகளில் ஆழங்காற்பட்டு * உலகமேத்துங் கண்டியூரரங்கம் மெய்யம் கச்சி பேர் மல்லையென்று மண்டினாருய்யலல்லால் மற்றையார்க் குய்யலாமே* என்ற திருமங்கையாழ்வாரருளிச்செயலில் திடநம்பிக்கை கொண்டு திவ்யதேச ப்ராவண்யமே போது போக்காயிருப்பார்க்கு அதன் மூலமாகவே பகவத் தரிசனம் எளிதாகுமென்றபடி.

ப்ரபுத்தர்களோடு அப்ரபுத்தர்களோடு வாசியற அனைவர்க்கும் அர்ச்சையே தஞ்சமாயிருக்க அப்ரபுத்தாநாம் ப்ரதிமாஸு என்று சொல்லியிருக்கிறதே, இது வென்? ப்ரதிமைகளி லீடுபட்டிருந்த ஆழ்வார்களும் நாதயாமுநயதிவராதிகளான பூர்வாசார்யர்களும் அப்ரபுத்தர்களோ? என்று கேள்வி பிறக்கும். இதைப்பற்றிப் பூர்வாசார்ய ஸ்ரீஸூக்தியே ஒன்றுள்ளது; அதைப்பற்றிப் பிறகு பேசுவோம்.

இனி, *ஸர்வத்ர ஸமதர்சிநாம்* என்றுள்ளது. அக்நிகார்யமும் வேண்டாமல் ஹ்ருதயத்தில் தியானமும் வேண்டாமல் அர்ச்சையில் ஆழங்காற் படுதலும் வேண்

டாமல் ப்ரஹ்லாதாழ்வானைப் போன்றிருப்பார்க்கு எங்கும் பகவத் தர்சனம் கிடைக்குமென்றபடி.

13. கண்ணபிரானும் குசேல முனிவரும்

ஸத்யஸங்கல்பனை எம்பெருமான் இந்நிலவுலகில் அவதாரங்கள் செய்யாமலே தன்னுடைய ஸங்கல்ப சக்தியினாலேயே எதையும் செய்து தலைக்கட்டிவிட முடியும். *நாட்டில் பிறந்து படாதன பட்டு மனிசர்க்காய்* என்று நம்மாழ்வாரருளிச் செய்கிறபடி கர்மவச்யர்களான நம்போல்வாரும் படாத கஷ்டங்களை அகர்மவச்யனை தான்பட்டு எதற்காக இந்நிலத்தில் வந்து பிறக்கவேணும்? எத்தனை அஸுரராக்ஷஸர்களைக் கொல்ல வேணுமானாலும் *விச்வம் தியைவ விரசய்ய நிசாய்ய பூய: ஸஞ்ஜஹ்நுஷ:* என்று ஆழ்வானருளிச் செய்த கணக்கிலே ஸங்கல்ப மாத்ரத்தாலே அது செய்யமுடியாதா? ஸாதுபரித்ராணம் எவ்வளவு பண்ண வேணுமானாலும் "நந்வஸ்தி விச்வபரிபாலந ஜாகரூக: ஸங்கல்ப ஏவ பவதோ நிபுணஸ் ஸஹாய:" என்று தேசிகனருளிச் செய்கிறபடி ஸங்கல்பத்தாலே பண்ணமுடியாதா? எதற்காக மனிசரும் மற்றும் முற்றுமாய் மாயப்பிறவி பிறந்து வருந்தவேண்டும்? என்று பலர் கேட்பதுண்டு. இதற்கு நம் பூருவாசாரியர்கள் ஆச்சரியமான ஸமாதானத்தை அருளிச் செய்தேயுள்ளார்கள். துஷ்க்ருத் விநாசநம் ஒருவாறு ஸங்கல்ப ஸாத்யமானாலும் ஸாது பரித்ராணம் ஸங்கல்ப ஸாத்யமாகாதென்று ஸ்வாமி யெம்பெருமானார் அந்தரதிகரண ஸ்ரீபாஷ்யத்தில் வ்யக்தமாக அருளிச் செய்துள்ளார். முடிவாகத் தேர்ந்த பொருள் யாதெனில், எம்பெருமான் ஸங்கல்ப சக்தியாலே செய்தருளுமளவில் ஸாது பரித்ராண துஷ்க்ருத் விநாசாதி ரூபங்களான காரியங்கள் ஒருவாறு நிறைவேறி விடுகின்றனவென்று கொண்டாலும் தன்னுடைய அற்புதமான திவ்யகல்யாண குணங்களை வெளியிட ப்ராப்தமேயாகாது. திருக்கல்யாண குண ப்ரகாசனமே எம்பெருமானுக்கு பரதானமான உத்தேச்யம். அதனை ஸங்கல்பத்தால் நிறைவேற்றவே முடியாது. அதற்காகவே அவதாரங்கள் செய்து போருவது—என்பதே. இதையே பட்டர் "குணபரீவாஹாத்மநாம் ஜந்மநாம்" என்ற ஸ்ரீஸூக்தியினால் வெளியிட்டருளினர். நீர் நிரம்பின காலத்தில் ஏரிகளுக்குக் கலுங்கல் எடுத்து விடாவிட்டால் எப்படி தரிப்பு அரிதோ, அப்படியே குணபுஷ்கலனை எம்பெருமானுக்கும் அவதாரங்கள் செய்யாவிடில் குணங்களைக் கொண்டு தரிப்பு அரிது என்பது காட்டப்பட்டது. இது தோன்றவே ஸ்ரீராமாயணத்தின் ஆரம்பமே *கோ ந்வஸ்மிந் ஸாம்ப்ரதம் லோகே குணவாந் கச்ச வீர்யவாந், தர்மஜ்ஞச்ச க்ருதஜ்ஞச்ச ஸத்யவாக்யோ த்ருடவ்ரத:* இத்யாதி குண ப்ரச்நமாகவே நிகழ்ந்திருக்கின்றது. ஸ்ரீராமாயணாதி இதிஹாஸபுராண ப்ரவசனம் செய்தருளும் மஹான்களும் கதா ஸந்தர்ப்பங்களில் முக்கியமான நோக்கு வையாதே ஆங்காங்கு ஆவிஷ்க்ருதமாகின்ற திருக்குணங்களிலேயே தாங்களுமுருகி ச்ரோதாக்களையும் உருக்குகின்றார்கள்.

ராமராவணயோர் யுத்தம் ராமராவணயோரிவ என்னும்படி இராமனுக்கும் இராவணனுக்கும் ப்ரபல யுத்தம் நடந்ததென்று இதைப் பல ஸர்க்கங்களால் வான்மீகி முனிவர் பெருக்கிப் பேசினாலும் *பொல்லா வரக்கனைக் கிள்ளிக் களைந்தானை யென்று பேசலாம் படியான மஹாவீரன் ஒரு புழுவோடே போராடினதில்

வியப்பார் ஆரேனுமுளரோ? அந்த ஸந்தர்ப்பத்தில் 'சசால சாபஞ்ச முமோச வீர:' என்னும்படி நிசாசரர்கோமான் நிலை கலங்கி நின்றபோது 'இன்றுபோய் நாளை வா' என்று பெருமாள் திருவுள்ளமிரங்கி விடைகொடுத்து விட்டாரே! இந்த திருக்குணம் என்னே என்னே! என்று இதற்கு உருகுகிறார்களே தவிர, சரமாரி பொழிந்த சேவகத்திற்கு உருகுவார் ஒருவருமிலரே. கூரத்தாழ்வான் அதிமாநுஷஸ்தவத்தில்

"யத்தாத்ருசாகஸமரிம் ரகுவீர வீக்ஷ்ய விச்ரம்யதாமிதி முமோசித முக்தமாஜௌ, கோயம் குண: கதரகோடிகத: கியாந்வா கஸ்ய ஸ்துதே: பதமஹோ பத
கஸ்ய பூமி:"

என்ற ச்லோகத்தினால் இந்தத் திருக்குணத்திற்கு உருகுந்திறம் மரங்களு மிரங்கும் வகையிலன்றோ அமைந்துளது. திருநாவீறுடைய பிரானை திருமங்கையாழ்வார் *சுரிகுழற் கனிவாய்த் திருவினைப் பிரித்த கொடுமையிற் கடுவிசையரக்கன்* என்னும்படி நின்ற மஹாபாபியான இராவணனை உடனே தொலைத்தொழித்துத் திரும்ப வேண்டியிருக்க, (ரணார்திதஸ்த்வம்) என்று திருவுள்ளத்தில்புண்பாடு காட்டுவதும், (ஆச்வாஸ்ய) என்று உடம்புக்குத் தேற்றரவு செய்துகொள் என்பதும், (கச்சாநுஜாநாமி) என்று வீட்டுக்குச் செல்ல விடை கொடுப்பதும் குணரஸிகர்களின் நெஞ்சை நீராயுருக்கக் கேட்க வேணுமோ?

ஸ்ரீராமாவதாரத்தில் காட்டின திருக்குணங்களிற் காட்டிலும் மிகச் சீரியவை க்ருஷ்ணாவதாரத்தில் காட்டின திருக்குணங்கள். நம்மாழ்வார் *பிறந்தவாறும் வளர்ந்தவாறும்* என்று சொல்லி ஆறு மாஸம் மோஹித்திருந்தது இவ்வவதாரத்திலே யன்றோ. க்ருஷ்ணாவதாரத்தில் எந்த கதாஸந்தர்ப்பத்தை யெடுத்துக் கொண்டாலும் ஆச்சரியமான திருக்குணம் விளங்கியே தீரும். இளம்பிராயக் கதைகள் நிற்க. யௌவன பிராயக்கதைகளில் குசேல முனிவர் வந்து சேருங் காலத்துக் கதை மிக ரமணீயமானது. இது ஸ்ரீபாகவதம் தசமஸ்கந்தத்தில் 80, 81 அத்யாயங்களில் உள்ளது. குசேலோபாக்யானம் அறியாதாரில்லை, அனைவருமறிந்ததே. குசேல முனிவரை நோக்கிக் கண்ணபிரான் கூறும் வார்த்தைகளில் ஒன்றையே இங்கெடுத்துக்கொண்டு ரஸாநுபவம் செய்ய விரும்புகிறோம்.

கண்ணனைக் காணச்சென்ற குசேலர் கையில் அவல் கொண்டு போயிருக்கிறார். அதுவும் அவருடைய கந்தைத்துணியில் தங்காமல் கொட்டிப்போய்ச் சில கணங்களே தங்கியிருக்கலாயிற்று. அதையும் கொடுக்க லஜ்ஜித்திருக்கிறார், கண்ணபிரானோ "கிமுபாயநமாநீதம் ப்ரஹ்மந் மே பவதோ க்ருஹாத்"—ஐயா! உம் அகத்திலிருந்து எனக்கு என்ன உபஹாரம் கொணர்ந்தீர்? என்று மடிபிடித்துக் கேட்கிறான். இன்னது கொணர்ந்தேனென்று கூறுவதற்கு நா எழும்பவில்லை. கொணர்ந்த அற்ப வஸ்துவை என்னவென்று கூறுவது! என்னவென்று கொடுப்பது! என்று தடுமாறி நிற்கிறார் பாவம்! அந்த ஸங்கோசத்தை யறிந்து கொண்ட கண்ணபிரான் அப்போது கூறுகின்றான்—

அண்வப்யுபாஹ்ருதம் பக்தை: ப்ரேம்ணா பூர்யேவ மே பவேத், பூர்யப்யபக்தோபஹ்ருதம் ந மே தோஷாய கல்பதே" என்று. பக்திமான்கள் அணுவளவு இட்டாலும்

அது அன்பின் கனத்தாலே என் புத்திக்கு மிகப்பெரிதாகவே தோற்றும்: அன்பிலாதார் மிகக்கனக்க இட்டாலும் அதனால் நெஞ்சு கனியேன்—என்பது இந்தச்லோகத்தின்பொருள். இதனால், பகவான் பக்தர்களிடத்துக் கடுகையும் மலையாகக் கொள்ளுமியல்வினன் என்பது பெறப்படும்.

கீதையில் ஒன்பதாமத்யாயத்தில் கூறியுள்ள "பத்ரம் புஷ்பம் பலம் தோயம்" என்றச்லோகமும் இந்த ப்ரகரணத்தில் கண்ணனால் பூர்த்தியாகக் கூறப்பட்டிருக்கின்றது. அந்த ச்லோகத்தின் கடைசி பாதம் "அச்நாமி ப்ரயதாத்மந:" என்பது. இவ்விடத்து கீதாபாஷ்யத்தில் எம்பெருமானார் அருளிச் செய்வதாவது "மநோரதபத தூரவர்த்தி ப்ரியப் ப்ராப்யேவ அச்நாமி" என்று. அவாப்த ஸமஸ்தகாமனான எனக்கும் கிடைக்கமாட்டாததான வொரு ப்ரியவஸ்து கிடைத்தாற்போல் அநுபவிக்கிறேனென்று எம்பெருமான் சொல்லுவதாக பாஷ்யமுள்ளது. ஸப்ஸ்க்ருதஜ்ஞர்கள் அவ்விடத்து பாஷ்யபங்க்தியை யெடுத்து ஸேவித்தால் கண்ணநீரைப் பெருக்காமலிருக்க முடியாது. அணுவையும் அமிதமாகக் கொள்ளும் பரிசு தனக்குள்ளதென்பதைக் கண்ணபிரான் இங்கு [குசேலகதையில்] மேலே வெகு ரஸமாகக் காட்டுகிறான். குசேலரை நோக்கிக் கண்ணன் இங்ஙனே சொல்லச் செய்தேயும் அவர் வெட்கத்தினால் அவலைக் கொடுக்கவேயில்லை. கண்ணன் தானாகவே அவருடைய சதச்சித்ரமான உத்தரீய முடிப்பைப் பிடித்திழுக்க, சில அவல் துளிகளே கைப்பட்டனவாம். ஆனாலும் "அண்வபி பூர்யேவ மே பவேத்" என்று கீழே சொன்னது ப்ரத்யக்ஷமாக வேணுமே. அதற்காக, அந்த அவல் கணங்களும் கண்ணன் கைப்பற்றினவாறே முஷ்டியளவாக ஆயிற்றாம். அதை அமுது செய்ய, அவ்வளவிலும் அது ஓய்ந்ததில்லை; மற்றொரு முஷ்டியாகவும் பெருகிற்றாம். இவ்வதிசயம் (ஸ்ரீபாகவதத்தில்) "இதி முஷ்டிம் ஸக்ருஜ் ஜக்த்வா த்விதீயம் முஷ்டிமாததே." என்பதனால் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வளவு இட்டாலும் த்ருப்தி யடையாதே 'என்ன கொடுத்தாய்! உன்னைப் போன்ற க்ருபண சிரோமணியும் உலகிலுண்டோ?' என்று தூற்றும் நம்போல்வாரைப்போலன்றியே அல்பஸந்துஷ்டன் எம்பெருமான் என்னும் இம்மஹாகுணத்தை எம்பெருமான் தன்னுடைய உக்திகளாலும் நடத்தைகளாலும் விளங்கக் காட்டிக் கொண்டிருப்பதை அஸூயை யின்றிக்கே அநுபவிக்குங் குடியிலே ஜன்மாந்தர ஸஹஸ்ர நற்றவப்பயனாக நாம் பிறந்திருக்கிறோம். இத்தகைய மஹாகுணத்தை ஒருவர் எடுத்துரைத்தால் "கேசவனைப்பாடவும் நீ கேட்டேகிடத்தியோ" என்கிற படியே ஆனந்தமாகக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டுவது பக்தியுக்தர்களின் லக்ஷணம். கண்ணபிரான் அர்ஜுநனுக்கு கீதை முழுவதும் உபதேசித்து விட்டு முடிவில் "இதம் தே நாதபஸ்காய நாபக்தாய கதாசந, நசாசுச்ரூஷவே வாச்யம் நச மாம் யோப்யஸூயதி"—நான் உனக்குச் சொன்ன இந்த பரம குஹ்யமான சாஸ்த்ரத்தை அதபஸ்கனுக்குச் சொல்லாதே, அபக்தனுக்குச் சொல்லாதே, அசுச்ரூஷுவுக்குச் சொல்லாதே; என்னிடத்தில் அஸூயையுள்ளவனுக்குச் சொல்லாதேயென்று கட்டளையிடுகிறான்; இங்கு "ந ச மாம் யோப்யஸூயதி" என்ற விடத்திற்கு நம் பாஷ்யகாரர் பாஷ்யமிட்டருளுகிறார்; காணக் கண்ணாயிரம் வேண்டும்; கேட்கக் காதாயிரம் வேண்டும்; நவில நாவாயிரம் வேண்டும்; "மத்ஸ்வரூபே மதைச்வர்யே மத்குணேஷு ச கதி

தேஷு யோ தோஷமாவிஷ்கரோதி ந தஸ்மை வாச்யம்'' என்று பாஷ்யஸூக்தியுள்ளது. என்னுடைய ஸ்வரூபத்தையும் என்னுடைய ஐச்வர்யத்தையும் என்னுடைய குணங்களையும் ஒருவர் எடுத்துரைத்தால் அவற்றில்தோஷாவிஷ்கரணம்செய்பவனே என்னிடத்தில் அஸூயை கொண்டவன்; அவனுக்கு நீ ஒன்றும் சொல்லாதே—என்று கண்ணபிரான் கட்டளையிடுவதாக ஸ்வாமி பாஷ்யம் செய்தருளுகிறார். பகவத்குண கீர்த்தனம் பண்ணினால் அதில் தோஷாவிஷ்கரணம் செய்பவர் யார்? "கேட்பார் செவி சுடு கீழ்மைவசவுகளே வையும் சேட்பால் பழம் பகைவன் சிசுபாலன்'' என்று நம்மாழ்வாரால் விசேஷிக்கப்பெற்ற சிசுபாலன் போல்வார்—என்று இதுவரையில் எண்ணியிருந்தோம். அது தவறு; எம்பெருமானார் தர்சனத்திலேயே ஜனித்து. எம்பெருமானை அநவதிகாதிசயாஸங்க்யேய கல்யாண குணைகதாநனென்றும் இசைந்து வைத்து, "நம் போல்வாரிடந்து நம: என்கிற உக்தி மாத்ர முண்டானாலும் அது எம்பெருமானுக்கு ப்ரியிஷ்டமாகிறது'' என்று இந்த மஹாகுணத்தைச் சொன்னவாறே கண்கள் சிவந்து தாபம் மிகுந்து விவாதயுத்தஸந்நத்தர்களாகின்றார்களே சில மஹாநுபாவர்கள், அவர்களே 'மத்நாேஷு கதிநேஷு தோஷமாவிஷ்கரோதி' யென்ற எம்பெருமானார் திவ்ய ஸூக்திக்கு இலக்கானவர்களென்று திண்ணமாக எண்ணத்தட்டுண்டோ?

"ப்ரியிஷ்டாம் தே நம உக்திம் விதேம'' என்கிறவாக்யம் ஈசாவாஸ்யாதிகளான உபநிஷத்துக்களில்உள்ளதாகையாலும் தேசிகாதிகளால் பகவத்பரமாகவே வ்யாக்யாதமாகையாலும் இது எம்பெருமானைப் பற்றியதன்றென்று வாய்திறக்க வழியில்லை. 'தே ப்ரியிஷ்டாம் நம உக்திம். என்று அந்வயித்து, நம: என்கிற உக்தி மாத்ரமும் அவன் திருவுள்ளத்தாலே கனத்ததாகிறது என்று அர்த்தம் செய்தால் இது எம்பெருமானுக்குப் பொருந்தாத குணமென்று சொல்லமுடியுமா? சப்தசக்தியால் லப்யமாகாது என்னமுடியுமா? எதுவும் முடியாது.

'அண்வபி பூர்யேவ மே பவேத்' என்னுமெம்பெருமானுடைய திருவுள்ளத்திற்கும் இயல்பிற்கும் மிக விணங்கினதாய் பகவத் குணுதிசய குதூஹலிகளுக்குப் பரமானந்த ஸந்தோஹ ஸந்தாயகமாய் சப்தஸ்வரஸத: ப்ராப்தமுமாயிருக்கின்ற இந்த மஹார்த்தம் நம்பிள்ளை ஸ்ரீஸூக்திகளுள் மஹாநிதியானது.

(அடுத்த இதழில் "கண்ணனும் விதுரனும்'' என்னும் கட்டுரை வெளிவரும்.

(தொடரும்)

கட்டடநிதிக்கு வரவுகள்

(சென்றவிதழின் தொடர்ச்சி)

ஸ்ரீமான் ஸ்ரீவைஷ்ணவ ரத்னம் D. K. ராஜு ராஜபாளையம் ரூ. 500

ஸ்ரீமான் P. N. ரங்கஸ்வாமி, சித்தையன்கோட்டை ரூ. 100

,, குண்டா ராமையா & ஸன்ஸ், சிகந்தராபாத் ரூ. 400

,, P. V. ராஜன், பம்பாய் ரூ. 100

,, தேவநாதய்யங்கார், சிகந்தராபாத் ரூ. 101

,, A. சுப்ரமணியன், திருவனந்தபுரம் ரூ. 100

ஸ்ரீமான் பக்தமணி A. V. கன்னைய நாயுடு திருமகளின் திருமணம்



பகவத் பாகவதாசார்ய கைங்கர்யமே வடிவெடுத்தவராய், சென்னை ஸத்காலக்ஷேப ஸபையின் காரியதர்சியாய் பக்தமணியாய் விளங்கும் ஸ்ரீமான் A. V. கன்னைய நாயுடுவின் திருமகள் **மோகனவல்லிக்கும்** (கல்லகுண்ட) ஸ்ரீமான் ராஜகோபால நாயுடுவின் திருமகன **கமலாகரனுக்கும்** 18-4-75ல் சென்னையில திருமணம் இனிது நிறைவேறியது. பைந்தாமரைக்கண்ணன் திருவருளும் பங்கயத்தாள் திருவருளுங்கொண்டு இம் மணமக்கள் நல்ல பதத்தால் மனை வாழ்க என்று மனமார்ந்த மங்களாசாஸனஞ் செய்கிறோம். —(பத்ராதிபர்.)

ஷஷ்ட்யப்தபூர்த்தி மஹோத்ஸவம்

ஸ்ரீமதுபயவே. திருநாங்கூர் வைகுந்த விண்ணகரம் திருமாளிகை வர்த்தமான சின்னஸ்வாமி ஸ்ரீ ராமாநுஜ மிஷனின் (இந்தியா) பொதுச் செயலாளர் ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியின் ஷஷ்ட்யப்தபூர்த்தி மஹோத்ஸவம் திருவரங்கத்தில் (6—7—75) ஆனிமீ 22-ம தேதி நடைபெறுகிறது. மிஷனின் ஆதரவில் 2—7—75 புதன் முதல் 6—7—75 ஞாயிறு வரை தினமும் 3 மணி முதல் 6 மணி வரை வித்வத்ஸபை நடைபெறும். ஸ்ரீ உ. வே வித்யாபூஷணம். ப்ருந்தாவனம் கோவர்த்தனம் ரங்காசார்ய ஸ்வாமி ஆதீனம் ஸ்ரீ கோதா ரங்கமன்னார் தேவஸ்தான வித்வான் திருநாங்கூர் வைகுந்த விண்ணகரம் திருமாளிகை வர்த்தமான பெரிய ஸ்வாமி ப்ர. ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி தலைமையில் பல மஹாநீயர்கள் உபந்யாஸம் செய்தருள்வார்கள். அனைவரும் எழுந்தருளியிருந்து ச்ரவணாநந்தமடையுமாறு ப்ரார்த்திக்கின்றோம்.

இடம்:—நெ. 2, கட்டகோபுரப் கீழவாசல், ஸ்ரீரங்கம்.

இங்ஙனம், ஸ்ரீ ராமாநுஜ மிஷன் (இந்தியா)

பல பெரியார்களின் பெருமை (முன்னிதழ்த் தொடர்ச்சி)

(வைகுண்டவாஸிகளான ஸஹ்ருதய ஸுஹ்ருந்மணிகளைப்பற்றி எழுதிவருகிறேன்.)

ஸ்ரீமதுபயவே. S. கோபாலஸாமி ஐயங்கார் ஸ்வாமி

சென்னை மயிலாப்பூரில் ப்ரஸித்த அட்வகேட்டாக விளங்கினவர் S. கோபாலஸாமி ஐயங்கார். ஜகத்ப்ரஸித்தரான ஸ்ரீமதுபயவே. ஸர். S. வரதாசார்ய ஸ்வாமியின் ஸாக்ஷாத் மாதுலர் இவர். உபயவேதாந்தங்களையும் வரியடைவே கற்றவர். [இவர் ஸ்ரீமத் வரவரமுநி ஸம்ப்ரதாயஸ்தர்.] திருநாராயணபுரத்தில் ப்ரஸித்த வித்வந்மணியாக எழுந்தருளியிருந்த ஸ்ரீமதுபயவே. மண்டயம். ஆழ்வார் ஸ்வாமியைச் சில வருஷகாலம் தமது பங்களாவில் எழுந்தருளப்பண்ணிவைத்து அவர் ஸன்னிதியிலே உபயவேதாந்த ஸம்ப்ரதாய க்ரந்தங்களையெல்லாம் நன்கு அதிகரித்துப்பல வக்கீல்களுக்கு ப்ரவசனமும் செய்தவர். அடியேனுடைய மாதாமஹ ஜீயர்ஸ்வாமி ஸன்னிதிக்கு அடிக்கடி வந்து பஹுச்ருதாக்ரேஸரர் என்று ஸ்வாமியால் விருது சாத்தப்பெற்றவர். சென்னையில் அஹோபிலமடத்துப் பத்ரிகையாக முதன்முதலில் ஆரம்பம் செய்யப்பட்ட வேதாந்ததீபிகா பத்ரிகைக்கும் சில வருஷகாலம் ஸம்பாதகராகஇருந்தவர் இந்தஸ்வாமி. இவர்முன்னம் ப்ரஸ்தாவித்தவிரக்தி பாஷ்யகார ஸ்வாமியின் பெருமைகளைக் கேள்விப்பட்டு அவருடைய ப்ரவசந கோஷ்டியில் இரண்டொருநாள் அந்வயித்துப் போகவேணுமென்றே காஞ்சிக்குவந்து, அப்படியே அந்வயித்திருந்தகாலத்தில் ஸம்ப்ரதாய சந்த்ரிகாதிகளான சில க்ரந்தங்கள் அச்சிட்டு முடிந்திருப்பதையும் இன்னும் சில பெரியக்ரந்தங்கள் அச்சிடவேண்டியிருப்பதையும் அடியேன் விஜ்ஞாபித்து இதை தேவரீரே நிறைவேற்றிவைக்கவேணுமென்று பலருடன்சேர்ந்து பிரார்த்தித்தேன். ஸமயம் நல்ல ஸமயமாயிருந்தபடியால் அந்த ஸ்வாமி ஒருவிதமான தடையும் போக்குபோக்கும் சொல்லாமல் "நாளையிலிருந்தே அச்சிட ஆரம்பித்து ப்ருப் காபிகளை இவ்விடத்திற்கே அனுப்பிவரத் தடையில்லை" என்று அவலீலையாக ஸாதித்துவிட்டார். அக்காலத்தில், சென்னைமாநகரில் வாழ்ந்துவந்த கராலபாடி ஆழ்வாரய்யா என்கிற த்ரைவர்ணிகர் வித்வானும் விசேஷ தனிகராயுமிருந்தபடியால் ஸ்ரீ வைஷ்ணவ க்ரந்த முத்ராபக ஸபை யென்னும் பெயரால் ஒரு ஸபையை ஏற்படுத்தி அது சாச்வதமாக நடக்கும்படியான திட்டங்களும் செய்திருந்தார். அந்த ஸபையின் மூலமாக நம்முடைய ஸம்ப்ரதாய க்ரந்தங்கள் நூற்றுக்கணக்காக அச்சிடப்பட்டிருக்கின்றனவென்பது ஜகத்ப்ரஸித்தம். அடியேன் முத்ரணம் செய்யவேணுமென்று தெரிவித்த க்ரந்தங்களையெல்லாம் அந்த ஸபையின் மூலமாகவே அச்சிடுவித்துமுடித்தார். ரஹஸ்யத்ரய மீமாம்ஸா பாஷ்யம், பாலஸரஸ்வதியின் தாத்பர்ய தீபிகை, கடிநபத தீபிகையோடு கூடின சரமச்லோக டிப்பணி ... இத்யாதிகளான உத்க்ரந்தங்களெல்லாம் அடியேனுடைய முயற்சியினால் வெகு விரைவாகவே அச்சேற்றப்பட்டு முடிந்தன.

ஸ்ரீமத். (திருவிண்ணகர்) நவநீதம். ஸ்ரீக்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி

திருக்குடந்தைக்கு ஸமீபத்திலுள்ள திருவிண்ணகரென்கிற ஒப்பிலியப்பன் ஸன்னிதியில் நவநீதம் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியென்று ப்ரஸித்தரான மஹான்

எழுந்தருளியிருந்தார். இந்த ஸ்வாமி 35 ஸம்வத்ஸரங்களுக்கு முன்பு திருநாட்டுக்கெழுந்தருளினவர். இந்த ஸ்வாமியினுடைய க்ருபைக்கு அடியேன் மிக்க இளமையிலேயே இலக்காகப் பெற்றவன். மஹா ஜ்ஞாநாதிகராயும் சிஷ்டவரிஷ்டராயுமெழுந்தருளியிருந்த இந்த ஸ்வாமியை ஸேவிப்பதற்கென்றே அடியேன் சிலஸமயம் திருவிண்ணகர்க்கு விடைகொண்டிருக்கிறேன். ஸ்வாமியும் பன்முறை காஞ்சிக்கெழுந்தருளிப் பரமாநுக்ரஹம் செய்தருளியிருக்கிறார். ஸ்வாமி அனேகக்ரந்தங்களை முத்ரணம் செய்வித்தருளியிருக்கிறார். மஹாபாரதம், ச்ருதப்ரகாசிகைக்கு வியாக்கியானமான பாவப்ரகாசிகை, வ்யாக்யான மீமாம்ஸாபாதுகை முதலான க்ரந்த ரத்னங்களை க்ரந்தலிபியிலும், நயமயூகமாலிகை, சாரீரக சாஸ்த்ரார்த்த தீபிகை முதலான க்ரந்தங்களை தேவநாகராக்ஷரத்திலும் பதிப்பித்த மஹோபகாரகர். ஸ்வாமியின் மூத்தபுதல்வரான ஸ்ரீ உ. வே. வ. ந. ஸ்ரீராமதேசிகாசாரியர் வடமொழி தென்மொழிக் கடலில் பரிபூர்ண பாரங்கதர். இளைய புதல்வரான ஸ்ரீமான் சேஷாத்ரி வடமொழியிலும் ஆங்கிலத்திலும் மிக்க தேர்ச்சிபெற்று ஸமீப காலத்தில் பரமபதித்துவிட்டார்.

ஸ்ரீமதுபயவே. கச்சிக்கிடாம்பி. பாஷ்யகாராசார்ய ஸ்வாமி

திருவஹீந்திரபுரத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீஉ.வே. கச்சிக்கிடாம்பி பாஷ்யகாராசார்ய ஸ்வாமி 30 வருஷங்களுக்கு முன்னம் திருநாட்டுக்கெழுந்தருளினவராகையாலே அந்தஸ்வாமியை ஸ்ரீவைஷ்ணவமண்டலம் நன்கறியும். இந்த ஸ்வாமி நியாய சாஸ்த்ரத்திலும் உபய வேதாந்தங்களிலும் நிஷ்ணாதர். ஸ்வாமியினுடைய பரிசயம் அடியேனுக்கு நாற்பது ஸம்வத்ஸரங்களுக்கு மேலுண்டு. ஆனால் மிக நெருங்கிப் பழகி வார்த்தையாட அதிகமாக நேர்ந்ததில்லை. ஆங்காங்கு திவ்ய தேசங்களில் உத்ஸவ காலங்களில் ஸேவை ஸாதிப்பர். வித்வத்வரேண்யரான ஸ்ரீரங்கம் எம்பார் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியின் ப்ரசம்ஸையை இந்த ஸ்வாமி சில ஸமயங்களில் செய்தருளக் கேட்டிருக்கிறேனாதலால் இவர்க்கு அந்த ஸ்வாமி ஸன்னிதியில் சாஸ்த்ராத்யயனங்கள் நடந்ததாக அடியேன் க்ரஹித்திருப்பதுண்டு. அடியேனுடைய வேதாசார்யரான மாம்பள்ளம் ஸ்வாமி இந்த ஸ்வாமியினுடைய வித்யாபரிச்ரமங்களைபபற்றி அடிக்கடி ஸாதிப்பதோடு இந்த ஸ்வாமி ஆழ்ந்த ஞானமுடையவரென்றும் பல ஸந்தர்ப்பங்களில் ஸாதிக்கக்கேட்டிருக்கிறேனாதலால் இந்த ஸ்வாமியை விசிஷ்ட வித்வானென்று போற்றுவனடியேன். இவருடைய திருக்குமாரர் ஸ்ரீயாமுநாசார்யர் சிறந்த வித்வானாய் திருமலையில் ஆகமோபாத்யாயராகவிருந்து ஸமீபகாலத்தில் பரமபதித்தார்.

ஸ்ரீமதுபயவே. திருநாங்கூர். ப்ரதிவாதிபயங்கரம் க்ருஷ்ணமாசாரியர்ஸ்வாமிகளிருவர்

திருநாங்கூரில் பல மஹான்கள் எழுந்தருளியிருந்தார்கள். அங்கு வைகுந்த விண்ணகரம் ஸன்னிதி வீதியில் ப்ரதிவாதிபயங்கரம் பெரிய க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியும் சின்ன க்ருஷ்ணமாசார்யஸ்வாமியும் ப்ரஸித்தர்களாயிருந்த மஹநீயர்கள். பெரிய க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி அபார வித்யாநிதியாக எழுந்தருளியிருந்

தவர். சாஸ்த்ரஜ்ஞர்களில் தலைவராயிருந்ததோடு மஹாகவீச்வரராய் அனேக காவியங்கள் ஸ்தோத்ரங்கள் அருளிச்செய்திருந்தார். இந்த ஸ்வாமி அடியேனுடைய இளமையில் பல வருஷங்கள் ஸ்ரீ காஞ்சியிலெழுந்தருளியிருந்தபடியால் இந்த ஸ்வாமியிடத்திலும் சில நாட்கள் வாசிக்க நேர்ந்ததடியேனுக்கு. இந்த ஸ்வாமி திருநாங்கூரில் குலகூடஸ்தர் ஸன்னிதியைத் திருப்ரதிஷ்டை செய்திருந்தார். 50 வருஷங்களுக்கு முன்பு சரமஸமயத்தில் உத்தமாச்ரமியாகித் திருநாட்டுக்கெழுந்தருளினர். இந்த ஸ்வாமிக்கு வித்வத்பஹுமானமாக (தோடா) என்கிற கரபூஷணம் கிடைத்திருந்தபடியால் "தோடா. கிருஷ்ணமாசார்யஸ்வாமி" என்று வ்யபதேசமிருந்துவந்தது. இவர்க்கு ஸந்ததி யில்லாமையினால் இவர் ஏறியருளப்பண்ணின கூடஸ்த ஸன்னிதியும் பரிபாலனமில்லாமேபோயிற்று. அது மிகவும் சோசநீயம்.

இந்த ஸ்வாமியின் திருநாமமேகொண்டு இவருடைய ஸந்நிஹிதஜ்ஞாதியும் இவருடைய அடுத்த திருமாளிகைக்காரருமானவர் "சின்ன க்ருஷ்ணமாசாரியர் ஸ்வாமி" யென்றே வழங்கப்பட்டுவந்தார். இவர் ஸ்ரீமத் திருக்கண்ணபுரம் பட்டப்பா ஸ்வாமி ஸன்னிதியிலும் மற்றும் பெரியார்களிடத்திலும் நியாய வேதாந்தங்களும் ஸ்ரீ பாஷ்ய பகவத் விஷயாதிகளும் அதிகரித்து மிகச்சிறந்த ப்ரவக்தாவாக விளங்கினர். சிலபல ஸம்வத்ஸரங்கள் சென்னைமாநகரில் சாரிடிகளில் ப்ரவசனநிரதராய் ப்ரக்க்யாதராயிருந்தார். இந்த ஸ்வாமியின் இரு திருக்குமாரர்களும் வித்வான்களாக விளங்கிவருகிறார்கள். அண்ணங்கராசாரியரென்று திருநாமமுடைய ஜ்யேஷ்டகுமாரர் விருந்தாவனத்தில் சாஸ்த்ரப்ரவக்தாவாக இருந்து வருகின்றார். சிறிய திருக்குமாரர் ஸ்ரீநிவாஸாசாரியரென்பவர் தற்போது ஸ்ரீரங்கத்திலிருந்துகொண்டு ஸம்ப்ரதாய ப்ரசார ப்ரவணராயிருந்துவருவது விச்வ ப்ரஸித்தம்.

ஸ்ரீமதுபயவே. கவிபூஷண. அத்தங்கி குமாரதாதாசார்யஸ்வாமி

திருவல்லிக்கேணியில் ஸ்ரீமத். அத்தங்கி. குமாரதாதாசார்ய ஸ்வாமியென்று ஸுப்ரஸித்தரான வித்வந்மணி எழுந்தருளியிருந்தார். இந்த ஸ்வாமி ஸாஹித்ய க்ரந்தங்களில் நிகரற்ற மஹா வித்வான். ஸகல காவ்ய நாடகாலங்கார க்ரந்தங்களும் இந்த ஸ்வாமிக்கு வாசோவிதேயங்களாயிருந்தன. வ்யாகரண வேதாந்த நிபுணர். சவித்வத்தில் மஹா நிபுணரென்பதை 'கவிபூஷணர்' என்னும் இவருடைய பிருதமே விளக்கி நிற்கும். இந்த ஸ்வாமியால் இயற்றி வெளியிடப்பட்டிருக்கின்ற உத்தரராமசரித வியாக்கியானம் முதலான சில க்ரந்தங்களினால் இவர் சிறந்த க்ராந்திகர் என்பது தெற்றெனவிளங்கும். இந்த ஸ்வாமி திருநாட்டுக்கெழுந்தருளி நாற்பது வருஷங்களுக்குமேல் ஆய்விட்டாலும் இவருடைய கீர்த்தி நிகரற்றது. இவருடைய பரிஸரத்தில் எப்போதும் பல வித்வான்கள் கூடியேயிருப்பார்கள். இவருடைய ஸகாசத்தில் ஏதாவது விஷய விசாரங்கள் நடந்துகொண்டேயிருக்கும். மஹாதனிகராகையால் ஸத்பாத்ர விநியோகங்களை விசேஷமாக நடத்திக் கொண்டேயிருப்பர்.

X wrong
உ 1952—53 வேங்கடசெகரியார்
Ironlar. ....
.....
.....
1952—53

ஸ்ரீமத்உபயவே. அ. வீ. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி

அகரம். வீரவல்லி. நரஸிம்ஹாசாரியரென்பது திருநாமம். ஆனால் அ. வீ என்றே ப்ரஸித்தர். இவர் பரமபதித்து முப்பது ஸம்வத்ஸரமாகிறது. ஸ்ரீபெரும்பூதூர் கலாசாலையில் பலவாண்டுகள் வாசித்து வியாகரணத்தில் மஹாபாஷ்யாந்த வித்வந்மணியாக விளங்கினர். உத்தீர்ணரான பிறகு திருவல்லிக்கேணியிலேயே நிரந்தர வாஸமாக எழுந்தருளியிருந்து சென்னையில் ப்ரஸித்தமான ஆனந்தா ப்ரெஸ்ஸில் பரிசோதக பதவியில் அமர்ந்து அனேக ஸம்ஸ்க்ருத க்ரந்தங்களை வெளியிட்டார். ஸ்ரீராமாயணத்தையும் ஸ்ரீபாகவதத்தையும் ஒரு பதமும் விடாமல் அக்ஷரச: தமிழில் மொழி பெயர்த்துப் பல ஸம்புடங்களாக இவர் வெளியிட்டிருப்பது தமிழ்நாடு முழுவதும் பரவியுள்ளது. திருவல்லிக்கேணியில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ உ. வே சே. க்ருஷ்ணமாசாரியர் ஸ்வாமி அச்சிட்ட பகவத்விஷயம் [சே. கி. பதிப்பு என்றே ப்ரஸித்தமாகவுள்ளது] பெரும்பாலும் இந்த ஸ்வாமியினால் பரிசோதிக்கப்பெற்றது. இந்த ஸ்வாமி காவ்ய நாடகாலங்காரங்களிலும் நிகரற்ற நிபுணராயிருந்ததோடு நிரவத்ய கத்யபத்யரசனைகளிலும் அதிஸமர்த்தராயிருந்தார். இவர் திருமலை திருப்பதி ப்ரதிவாதிபயங்கர ஸ்வாமிகளின் திருவடி ஸம்பந்தம் பெற்றவராதலால் அடியேனுடைய திருத்தகப்பனாரிடத்தில் மிக ப்ராவண்யம் கொண்டிருந்தார். அப்போதே இவருடைய பாண்டித்யத்தைத் திருத்தகப்பனார் மிகவுங்கொண்டாடினது அடியேனுக்கு நினைவிருக்கிறது. இவர்க்கு ஜ்யேஷ்ட ப்ராதாவொருவரும் கநிஷ்ட ப்ராதாவும் சிறந்த வித்வானாயிருந்தார். கநிஷ்ட ப்ராதா ஸ்தலசயனம் ஸ்வாமியென்பவர் ஸாஹித்யப்ரவீணராயிருந்ததோடு க்ரமாந்தம் அதீதவேதராய் அடியேனுடைய வேதவேதாந்த வைஜயந்தீ பாடசாலையில் இருபது ஸம்வத்ஸரம் வேதாத்யாபகராக விளங்கினர். அ. மு. ஸ்ரீனிவாஸாசாரியர் ஸ்வாமி ஷை ஸ்ரீ அ. வீ. நரஸிம்ஹாசார்யர் ஸ்வாமிக்கு தம்பி முறையாக வேணும். இவர் ஸாஹித்யாதிகளில் நல்ல பண்டிதராய் அடியேன் க்ரந்தமாலா கார்யாலயத்தில் பல வருடங்கள் உதவியாசிரியராயிருந்து ஸம்சோதநாதிகளில் மிகவும் உபகாரகராக இருந்துவந்தார். தற்போது மயிலையில் வாழ்கிறார்.

ஸ்ரீமத் ஸ்ரீசைல சக்ரவர்த்தியாசாரியர் ஸ்வாமி (கோவை)

கோயம்புத்தூரில் பிரபல அட்வகேட்டாக வாழ்ந்து வந்த இந்த ஸ்வாமியோடு எனக்கு மிக நெருங்கிப் பழக்க மிருந்தது. அவர் அட்வகேட்டாயிருந்ததால் ஆங்கிலத்தில் மிக நிபுணராயிருந்ததுடன் வடமொழியில் சிறந்த பண்டிதோத்தமராயுமிருந்தார். அவர் நமது ஸம்ப்ரதாய விஷயமாக அருமையான பல நூல்கள் எழுதியுள்ளார். அவருடைய திருக்குமாரரான (சென்னையில் வாழும்) ஸ்ரீமான் V. S. R. சக்ரவர்த்தியால் அவை அச்சிடப்பட்டுமுள்ளன. அவற்றில் ஒன்றின் ஆராய்ச்சி நமது ஸ்ரீ ராமாநுஜனில் ஸமீபகாலத்தில் வெளிவந்துமுளது. அதனால் அவருடைய பாண்டித்யத்தின் பெருமை புலனாகும். இவ்வாசிரியருடைய திருக்குமாரர்களிருவர் மேதாவிகளாய் உயர்வுபெற்று வாழ்ந்துவருகிறார்கள்.

(தொடரும்)

அருளிச்செயல் விசேஷார்த்தம்

திருமங்கையாழ்வார் சோழநாட்டுத் திருப்பதிகளை மங்களாசாஸனம் செய்து கொண்டு எழுந்தருளுகையில் தேரழுந்தூருக்கு எழுந்தருள அங்கு நடந்ததொரு செய்தியை முந்துற முன்னம் அருளிச் செய்துள்ளார். அத்திருப்பதிக்கு நான்கு பதிகங்கள் பாடியுள்ளாரன்றோ? அதில் முதற் பதிகம் *தந்தைகாலில் பெருவிலங்கு*. முதற்பாசுரத்தின் பின்னடிகளாவன—"முந்திவானம் மழைபொழிய மூவாவுருவின் மறையாளர், அந்தி மூன்று மனலோம்பும் அணியார் வீதியழுந்தூரே" என்றும். இதன் கருத்தைக் கேண்மின்:. இப்போதுபோலே அப்போது தேரழுந்தூர் பிராந்தத்தில் மழைபொழியாமல் மிக்க பஞ்சமாக இருந்தது. அங்குள்ள வைதிகர்கள் மழைபொழிவதற்கான யாகத்தைச் செய்தால் பஞ்சம் நீங்கி மழைபொழியுமென்றறிந்து மழைக்காகச் சொன்னவொரு யாகத்தை அனுட்டிக்க முயன்று அதற்கு வேண்டிய ஸம்பாரங்களைச் சேகரித்து நாளைக்கு யாகத்தை ஆரம்பிப்போமென்றிருக்கையில் முதல்நாளிரவே ஆழி மழைக்கண்ணன் தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல் வாழ உலகினில் பெய்திட்டானும். ஆனாலும் வைதிகர்கள் பிராமாணிகர்களாகையாலே தாங்கள் செய்ய உத்தேசித்திருந்த யாகத்தை நிறுத்தாமல் செய்தே தலைக்கட்டினார்கள். இதனால் தெளிவாக்கப் படுவதாவது—வைதிகர்கள் ச்ரத்தையோடு வேள்விபுரிந்தால் தேவதைகள் அருள் செய்தேதீரும் என்பதாம். அப்படிப்பட்ட வைதிகர்கள் இக்காலத்தில் எங்கேயாவது இருக்கக் கூடும். அன்னவர்களின் அனுட்டானம் இக்காலத்துப் பஞ்சத்தைப் போக்க வேண்டும்.

ஸ்ரீ ராமாயணப் பகுதி

பஞ்சவடியில் பிராட்டியைப் பிரிந்த பெருமாள் இளைய பெருமாளோடு கூட பம்பாநதிக்கரையில் வீற்றிருக்கையில் ஒரு காற்றுவந்து வீசிற்று. அது உண்மையில் பரம போக்யமான காற்று. ஆனால், திருவாய்மொழியில் *மல்லிகை கமழ் தென்றல் ஈருமாலோ* என்கிற பதிகத்தில் 'வாடை தண்வாடை வெவ்வாடையாலோ' என்றும் 'போதுதண்மதியம் வெம்மதியமாலோ' என்றுமுள்ள பாசுரங்களின்படியே இனிய காற்றைக் கண்டு வெருவும்படியான நிலைமையில் பெருமாள் இருப்பதால் இந்த காற்று தமக்கு அஸஹ்யமாயிருக்கும் படியை வெளியிடும் ச்லோகமொன்று

"பத்ம ஸௌகந்திக வஹம் சிவம் சோகவிநாசநம்,
தந்யா லக்ஷ்மண ஸேவந்தே பம்போபவந மாருதம்"—என்பது.

(கிஷ்கிந்தாகாண்டம் ஸர். 1, ச்லோ. 105)

இதன் கருத்தாவது:-ஓ லக்ஷ்மணா! தாமரைப்பூக்களுடையவும் செங்கழுநீர்ப் பூக்களுடையவும் வாஸனையைக் கொண்டுவருகிறதும் மங்களகரமாயும் துக்கத்தை நீக்குவதாயுமிருக்கிற பம்பா ஸரஸ்ஸின் கரையிலுள்ள பூங்காக்களினின்றுவரும் காற்றை பாக்யவான்கள் அநுபவிக்கிறார்கள்—என்பது.

இதில் காற்றுக்கு "சோக விநாசநம்" என்று விசேஷணமிட்டிருப்பது பொருந்தாது. 'சோக விவர்த்தநம்' என்று இருக்கவேண்டும். ஸீதா வியோகத்தாலே துயரத்தின் எல்லையிலிருக்கிற பெருமாளுக்கு இது சோகவிவர்த்தநமாகுமேயொழிய சோக விநாசநமாக வழியில்லை. அப்படியிருக்க சோகவிநாசநம் என்று எங்ஙனே அருளிச்செய்தபடி ? என்று சங்கை பிறக்கக்கூடும். இதற்குச் சிலர் சொல்லக்கூடிய ஸமாதானமாவது — இந்தக் காற்றை இனிதாகக்கொள்ளும தம்பதிகளுமுண்டே. அவர்களுடைய கருத்தாலே சொன்னபடி — என்பதாக. பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்வது அங்ஙனன்று. இங்கு அவர்தாம் அருளிச்செய்வது கேண்மின். நாச்சியார் திருமொழியில் (8-2) 'காமத்தீயுள் புகுந்து கதுவப்பட்டிடைகங்குல் ஏமத்தோர் தென்றலுக்கிங்கிலக்காய் நானிருப்பேனே' என்றவிடத்து இந்த ச்லோகத்தை எடுத்து வ்யாக்யானித்திருப்பதைக் காணலாம். ப்ரக்ருதம் 'சோக விநாசந' என்பதற்கு "[சோக விநாசந] நம்மை சித்ரவதம் பண்ணுது; சோகம மறுவலிடாதபடி பண்ணும்போலே யிராநின்றது" என்னும் இந்த ஸ்ரீஸூக்தியின் ஆழ்ந்த கருத்தைக் கேண்மின். சோகம் அநுபவிக்கவேணுமானால் உயிர் இருந்தாகவேணடுமே. உயிர் போய்விட்டால் சோகாநுபவத்துக்கு அவகாசமில்லையே! ஆகவே 'சோக விநாசநம்' என்றது சோகம் அநுபவிக்க வேண்டாதபடி உயிரையே கொள்ளை கொள்ளவற்று என்றதாயிற்று. "லக்ஷ்மண! இந்த காற்றுக்கு நமமுடைய உயிர் நிற்காதுபோலிருக்கிறதே!" என்றவாறு. ஸாமாந்ய கவிகளுக்கு இக்கருத்து தோன்றாது.

கம்பராமாயணப் பகுதி

"வெள்ளஞ் சிலம்பும் பாற்கடலின் விருப்புந் துயிலை வெறுத்தளியும்
கள்ளுஞ் சிலம்பும் பூங்கோதை காதற் கடலிற் படிவார்க்குப்
புள்ளுஞ் சிலம்பும் பொழில் சிலம்பும் புனலுஞ் சிலம்பும் புனைகோதை
உள்ளுஞ் சிலம்பும் சிலம்பாவால் உயிருண்டாகும் வகையுண்டோ ?"

இது கம்பராமாயணத்தில் ஆரணியகாண்டத்தில் அயோமுகிப்படலத்துள்ளதொரு செய்யுள்.

இராமபிரான் பிராட்டியைப் பிரிந்து வனத்தில் பரிதபிக்கும்போது அந்த பரிதாப வகைகளை வான்மீகி சொன்னது ஏகதேசம். கம்பர் வெகு விரிவாகக் கூறியுள்ளாரதனை. மேலேகண்ட செய்யுள் அவ்வகையில் அமைந்தது. இங்குச் சிறிது கேண்மின். வான்மீகிக்கும் கம்பர்க்கும் ஒரு வாசியுள்ளது. வான்மீகி இராமபிரானை ஒரு மனிதனாகவே வைத்துத் தமது நூலை முடித்துள்ளார். ஆனாலும் ஸமுத்ர சரணாகதி ப்ரகரணத்தில் 'புஜை: பரம நாரீணாம் அபிம்ருஷ்டம் அநேகதா' என்பதுபோன்ற சிற்சில விடங்களில்மட்டும் இராமன் ஸாக்ஷாத் நாராயணமூர்த்தி என்பதை வ்யங்க்யமாகக் காட்டியுள்ளார். கம்பர்பெருமான அங்ஙனன்றிக்கே ராமன் நாராயணமூர்த்தி என்பதை வ்யக்தமாகவே அடிக்கடி காட்டியருளுவார். இச்செய்யுளில் முதலடியையும் இரண்டாமடியையும் உற்று நோக்கவேணும். பாற்கடலில் அமர்ந்திருந்தவர் பிராட்டியுடைய காதற் கடலிலே அமர்ந்தார் என்று சொல்லியிருக்குமழகு ரஸிக்கத்தக்கது. க்ஷீரார்ணவ நிகேதநனான நாராயணனே

இராமனுகத் திருவவதரித்து ஸீதாபதியானுன் என்பதை விளங்கக் காட்டினு ராயிற்று. பின்னடிகளின் அமைப்பு மிக்க சுவைமிக்கது. அதில் 'உயிருண்டாகும் வகையுண்டோ?' என்கிற விடத்தை என்னுடைய மாதாமஹரான அழகியமணவாள ஜீயர் ஸ்வாமி எனக்குப் பாடம் சொல்லும்போது அரைமணி காலம் அழுது கொண்டேயிருந்தார். அது இன்றைக்கு அறுபத்தெட்டு வருஷமாகிறது.

ஸுபாஷிதப் பகுதி

(ச்லோகம்) கர்ணருந்துதம் அந்தரேண ரணிதம் காஹஸ்வ காக ஸ்வயம்
மாகந்தம் மகரந்தசாலிநமிஹ த்வாம் மந்மஹே கோகிலம்,
தந்யாநி ஸ்தலவைபவேந கதிசித் வஸ்தூநி, கஸ்தூரிகாம்
நேபாலக்ஷிதிபால பாலபதிதே பங்கே ந சங்கேத க:?

(கருத்து.) ஒரு தேன்மரத்தின் கிளையில் ஒரு காக்கை உட்கார்ந்துகொண்டு 'கர் கர்' என்று கர்ணகடூரமாகக் கத்திக்கொண்டிருந்தது. அதனைப் பார்த்து ஒரு ரஸிகன் சொல்லுகிற சுலோகமிது. காக்கையே! நீ தேன் மாமரத்தின் கிளையில் உட்கார்ந்திருப்பது ஸரி. குயில்கள் உட்காரவேண்டிய கிளை இது. ஏதோ நீ உட்கார்ந்திருக்கிருய். இதில் ஆக்ஷேபமில்லை. கர்ணகடூரமாகக் கத்தாமல் வாளா இருந்தாயாகில் உன்னைக் குயிலாகவே கருதுவோம். ஏனென்ருல் குயிலும் நீயும் உருவத்தில் ஒருவாறு ஒத்திருப்பதால். குயிலானது தேன் மாமரத்தின் கிளையில் உட்காரும் ஜந்துவாதலால் உன்னைக் குயிலாகவே நினைத்துக்கொள்ளக் குறையிராது இங்ஙனே பூர்வார்த்தத்தாற் சொல்லி உத்தரார்த்தத்தால் இதை ஸமர்த்தனம் பண்ணுகிருர் கவி [தந்யாநி ஸ்தலவைபவேந இத்யாதி] சில பொருள்கள் இருப்பிடத்தின் மேன்மையினுல் சிறப்புப் பெறுவதுண்டு. நேபாள தேசத்தரசன் தன் நெற்றியில் சேற்றைப் பூசிக்கொண்டிருந்தாலும் பார்ப்பவர்கள் அதைச் சேறு என்று நினையார்கள். நேபாள தேசமோ கஸ்தூரி மலிந்த இடம்! அவ்விடத்தரசன் கஸ்தூரியைப் பூசாது சேற்றை ஏதுக்கு நெற்றியில் பூசுவான்? என்னும் உறுதியினுல் அவன் நெற்றியிலுள்ள சேற்றையும் கஸ்தூரியாகவே நினைக்கலாகும். அதே போல தேன் மாமரமானது குயில்கள் உட்காரும் இடமாதலால் காக்கை அங்கு உட்கார மாட்டாதென்கிற உறுதியினுல் காக்கையையும் குயிலாக நினைக்கக் குறையில்லை. கர்ணகடூரமான கத்துதல் இல்லாதவரையில் இது. ஆகவே, "காக்காய்! கத்தாதே இரு. உன்னைக் குயிலாகவே நினைப்போம்" என்கிருன். இதனுடைய உள்ளுறை பொருள் யாதெனின்—ஒரு வித்வத்ஸபை. அது வித்வான்கள் வந்து வீற்றிருக்கும் இடம். ஒன்றும் படிக்காத வொருவன் படாடோபம் செய்து கொண்டு அந்த ஸபையில் வந்து உட்கார்ந்தான். வாளா வுட்கார்ந்திருந்தானுகில் இவனும் ஒரு வித்வான் என்று கருதப் படுவான். அவன் வாளாவிராது ஏதோ தத்தகபித்தக வென்று பேசத் தொடங்கினுன். அவனை நோக்கி அந்யாபதேசமாகச் சொன்ன ச்லோகமிது. * *

ரேரே! கோகில! மாபஜ மௌநம் கிஞ்சிதுதஞ்சய பஞ்சமராகம்,
நோசேத் த்வாமிஹ கோ ஜாநீதே? காககதம்பகபிஹிதரஸாலே.

இதன் கருத்தாவது: ஒரு குயிலானது காக்கைக் கூட்டங்கள் நிறைந்த வொரு மாமரத்தின்மீதேறி வாய்திறக்காமலிருக்க, அதைநோக்கி ஒருவன் சொல்லுவதாக அமைக்கப்பட்டது இந்த சுலோகம். ''ஓ குயிலே! நீ வாய் திறவாதிருப்பது தகுதி யன்று. உனது பஞ்சமராகத்தைச் சிறிது காட்டாய்; நீ வாய்திறவாதிருந்தா யாகில், இந்த மாமரத்தில் வந்து உட்கார யோக்யதை இல்லாமலிருக்கச் செய் தேயும் மதியீனத்தால் வந்து உட்கார்ந்திருக்கின்ற இக்காக்கைக் கூட்டங்களுக்கும் உனக்கும் வாசி தெரிந்துகொள்வதெப்படி? (இதற்கு உள்ளுறை பொருள் யாதெனில்;) வாக்மிகளான பண்டிதர்களே வந்து வீற்றிருக்கத் தக்கவொரு மஹா ஸபையிலே வாய் திறக்க யோக்யதையற்ற சில மூடர்கள் இருந்து காச்சு மூச்சென்று கத்திக் கொண்டிருக்கையில் அவர்களிடையே மஹாவாக்மியானவொரு சிறந்த வித்வான் வாய்திறவாதிருப்பதைக் கண்டவொரு ரஸிகன் அவரை நோக்கிக் கூறு கின்றான்: ''ஸ்வாமிந்! தேவரீருடைய திருநாவீறு யாவர்க்கும் தெரியும்படி வாய் திறந்தொன்று பணிக்கவேணும்'' என்று.

அஷ்டப்பிரபந்தப் பகுதி

காயிலே தின்றுங் கானிலுறைந்துங் கதிதேடித்
தீயிடை நின்றும் பூவலம் வந்தும் திரிவீர்காள்!
தாயினு மன்பன் பூமகளன்பன் தடநாகப்
பாயல் முகுந்தன் கோயிலரங்கம் பணிவீரே!

இது பிள்ளைப்பெருமாள் ஐயங்காருடைய திருவரங்கக்கலம் பகத்துள்ள தொரு பாசுரம். ''விசித்ரா தேஹ ஸம்பத்தி: ஈச்வராய நிவேதிதும்'' என்றபடியே இம் மானிடவுடல் எம்பெருமானுக்குக் கைங்கரியம்செய்வதற்காகவே ஏற்பட்டது. எனவே எம்பெருமானை வாயார வாழ்த்திக் கையாரத்தொழுதேத்தினால் நற்கதி எளிதில் பெறலாம். இதனை அறியாதார் உடலைப்பல் வகையிலும் வருத்திக் கதியைத் தேடு வர். அதாவது நாட்டாரோடியல்வொழிந்து வனமேபேவி, ஆமின்சுவையவை ஆறோடிசிலே நீக்கிக் காயிலே என்னுமிவையே நுகர்ந்துடலம் வருந்தி ஐந்து தீயோடு நின்று சிலமாதவம் செய்து பூமியைச் சுற்றியே வலம் வந்து இவ்வாறு பல படியாகத் துயருற்றும் நற்கதியடையார்கள். அன்னவர்களுக்குப் பரமகருபையுடன் ஐயங்கார் எளியவழியை உபதேசம் செய்கின்றார் 'கோயிலரங்கம் பணிவீரே' என்று. நீங்கள் வீணே ஏன் காய், இலை முதலியவற்றைத் தின்பீராய்க் கதிதேடி யலைகின் றீர்கள்? கோயிலரங்கத்தினைப் பணிமின். அங்கு ஒரு அருங்கனியுளது. ''விழுமிய வமரர் முனிவர்விழுங்கும் கன்னற்கனியே'' அது. எனவே கனியிருக்கக் காய்கவர்தல் தகுமோ உமக்கு? என்கின்றார் போலும்! மேலும் திருவரங்கனைத் 'தாயினுமன்பன்' என்று விசேஷித்துள்ளார். திருவரங்கேசன் பெற்றதாயினுமாயின செய்யக் காத் திருக்க அவனைப்பணிந்து ஆராவமுதினைப் பெற்றுய்யலாமாயிருக்க காயையும் கிழங் கையும் தின்று திரிகின்றீர்களே! என்று வருந்திக் கூறுகின்றார் என்னவுமாம். இனி, கானிலுறைந்து கதிதேடுவோரைப் பார்த்து அருளிச்செய்கிறார். மெல்லியலாம் மலர்மகளும்விரும்பும் பெருமான் திருமால். அவன் விரும்பியுறையும் திருவரங் கத்தை அடைந்துய்யாது வெம்பரலும் கடும்புலியும் நிறைந்து கொடிதான வனத்

திடையே கதிதேடுகின்றீர்களே! என்னே உந்தம் பேதைமை! என்று வருந்திக்கூறுகின்றார். ('கானிலுறைந்து கதிதேடித் திரிவீர்காள்!' என்று இணைத்துப் பொருள் காண்க). எனவே கொடிய விலங்குகள் வாழும் கானகத்தலைத நீக்கி நல்லார்கள் வாழும் நளிரரங்கமே மேவித் தொழுதுய்ம்மின் என்றதாயிற்று. இனி, தீயிடை நின்று கதிதேடித் திரிவோரை நோக்கிக் கூறுகின்றார். பஞ்சாக்னி மத்தியில் நின்று வீணே கதிதேடித்திரிவீர்காள்! திருவரங்கத்தே சுடர்ச்சோதியுருவாய் எம்பிரான் நிற்க அங்கு நில்லாது வேறொருசுடர்ப்பொருளை (தீயை) நாடுதல் என்ன பயன் தரும்? என்கின்றார்! அடுத்து, பூமி வலஞ்செய்து மேன்மை பெறக் கருதுவோரைவிளித்துக் கூறுகின்றார் ஐயங்கார். இப் பரந்தவுலகின் ஒரு பகுதியாய் வானும் மண்ணும் நிறையப்புகுந்தீண்டிவணங்கப்பெற்றதான திருவரங்கந்திருப்பதியை எளிதாகவலஞ்செய்து பணிந்து உய்யலாமாயிருக்க மிக வருந்தி பூப்ரதக்ஷிணம் செய்வது எற்றுக்கு என்கிறார் போலும்! ஆக வித்தால் 'காட்டினான் திருவரங்கம் உய்பவர்க்கு' என்றபடியே விளங்கும் திருவரங்கத்தைப் பணிதலைவிட்டு உய்யும் வகையில்லை என்றாராயிற்று. இனி இப்பாசுரத்தை உற்று நோக்கின் மற்றொரு பொருளும் தோன்றக் காணலாம். (காயிலைதின்றும்) அதாவது, கதிதேடி நீங்கள் ஏதோவொரு இலையை (காய்ந்த இலையை) தின்னவேண்டா. மருவிய பெரியகோயில் மதிள் திருவரங்கமே சேர்ந்தால் எம்பெருமான் தோளிணைமேலும் தாளிணைமேலும் புனையும் தெய்வத்துளவிலை கிடைக்கும். அதைப்பெறப் பார்ப்பீராக; (கானிலுறைந்தும்) ஏதோவொரு காட்டிடைவாழும் நீர் ஆராமஞ்சூழ்ந்த அரங்கமேமேவிவாழ்வீராக (தீயிடை நின்றும்) என்றதில் மருமமொன்று கேண்மின். பரமபதத்திலே ஸாமகோஷத்தைக் கேட்டு அதை எதிரிகளுடைய ஆரவாரமாகக் கருதி எம்பெருமானுக்கு என் வருகிறதோ என்று சங்கித்து அழலுமிழ்கிறனும் அரவரசனாகிய ஆதிசேஷன். இதனை "ஆங்காரவாரமது கேட்டு அழலுமிழும் பூங்காரரவு" என்ற பாசுரத்தால் தெரிவித்தருள்கிறார் திருமழிசைப்பிரான் பயசங்கைக்கு இடமல்லாத பரமபதத்திலேயே பயசங்கை பண்ணி அழலுமிழும் திருவனந்தாழ்வான் இவ்விருள் தருமாஞாலத்திலே எம்பெருமானுக்குப் பரிந்து அழல் உமிழ்தல் தகுமேயன்றோ! (திருவரங்கத்தில்) தீயுமிழா நிற்பனன்றோ? எனவே நீர் ஐந்து தீயிடை நில்லாது அரங்கமே சேர்மின் என்றதாயிற்று. மற்றொரு கருத்தும் கேண்மின். தீயிற்பொலிகின்ற செஞ்சுடராழியேந்திய கையனூர், அனலாழியர், அணியரங்கனூர் உறையும் திருவரங்கமே பணிமின் என்பதாக. இனி (பூவலம்வந்தும்) என்றதன் கருத்தாவது எம்பெருமான் திருமடந்தை மண்மடந்தை இருபாலும் திகழத் திருவரங்கத்திலே நிற்க அந்நகரையடைந்துய்யாதே பூதேவியை மட்டும் வலம் செய்தல் வீண் என்று உரைத்தார் போலும்! ஐயங்கார் ஆழ்வார்களின் அருளிச்செயலையடியொற்றியே பாசுரமிடுபவர். திருமங்கையாழ்வார் பெரியதிருமொழியிலே "ஊன் வாட வுண்ணாது உயிர் காவலிட்டு உடலிற் பிரியாப்புலனைந்தும் நொந்து தாம் வாட வாடத் தவஞ் செய்ய வேண்டா" (3-2-1) "காயோடு நீடு கனியுண்டு வீசு கடுங்கால் நுகர்ந்து நெடுங்காலம் ஐந்து தீயோடு நின்று தவம் செய்ய வேண்டா" (3-2-2) என்றருளிச் செய்ததனைத் திருவுள்ளத்தில் கொண்டு இப்பாசுரத்தைப் பணித்தனர் என்றுணர்க.

புத்தக வரவேற்பு

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தஸாரம் (தமிழில்)

ஆசிரியர் : ஸ்ரீ உ. வே. (கோவை) ஸ்ரீசைல சக்ரவர்த்தியாசாரியர் ஸ்வாமி.

விலை ரூ. இரண்டுமட்டும.

"தோன்றிற் புகழொடு தோன்றுக, அஃதிலார் தோன்றலில் தோன்றாமை நன்று" என்றார் குறளாசிரியர். "வாழ்வர் வாழ்வெய்தி ஞாலம் புகழவே" என்றார் நம்மாழ்வார். "நர: பதிதகாயோபி யச: காயேந ஜீவதி" என்றார் வடநூலார். பஞ்சபூதவுடலை நீத்நாலும் புகழுடல் பெற்று நீடூழி விளங்கும் மஹாமேதாவிகளில் முதல் விரலை முடக்கி எண்ணக்கூடியவர் ஸ்ரீமதுபயவே. (கோவை) ஸ்ரீசைல சக்ர வர்த்தியாசார்யஸ்வாமி. இவர் திருநாடலங்கரித்துவிட்டாலும் அவர் பெற்றிருந்த பாண்டித்யமும், அவர் உலகுக்குச் செய்திருந்த பேருதவிகளும் அவரை மறக்க வொட்டுகின்றனவில்லை.

ஸ்ரீ ஸ்வாமியை முதன்முதலாகக் காஞ்சீபுரியிலும் பிறகு சென்னையிலும் பிறகு கோவையிலும் ஸேவிக்கப்பெற்று அளவளாவியபோது, வக்கீலென்று பேர்பெற் றிருக்குமிந்த மஹானுக்கு ஸ்ரீபாஷ்யம் பகவத்விஷயம் ஸம்ஸ்க்ருத ஸாஹித்ய சாஸ்த்ரங்கள் ஆகிய இவற்றில் இவ்வளவு ஆழ்ந்த ஞானம் எங்ஙனம் உண்டாயிற் றென்று உண்மையில் வியப்படைந்தேன். ஸம்ஸ்க்ருத காவ்யநாடக அலங்காரங் களில் பலபல அபூர்வமான அர்த்தங்களைப் பூப்பறித்தாற்போல் அடுத்தடுத்து ஸாதித்துக்கொண்டிருந்தார்,

அவருடைய ஞானம் அவரோடு சுவறிவிடாமல் பின்புள்ளார்க்கும் பயன்படு மாறு அவர் பரம கருணையோடு ஏடுபடுத்திவைத்தவற்றுள் ஸ்ரீ வைஷ்ணவஸித் தாந்தஸாரமென்பது சிறந்தநூல். இந்நூல் ஐந்து பகுதிகளாக அமைக்கப்பட் டுள்ளது. 1. ஸ்ரீராமாயணதத்துவம், 2. விசிஷ்டாத்வைததத்வம், 3. குருபக்தி, 4. ச்ருதிப்ராமாண்யம், 5. ஜீவபரஸம்பந்தம், ஆக விஷயங்கள் ஐந்தேயானாலும் பலாப்பழமொன்றில் பலநூறு சுளைகளிருப்பது போலவே ஒவ்வொரு பகுதியும் முத்தும் மணியும் வைரமும் நன்பொன்னும் திகழ நிற்பவை. இவற்றை ஆழ்ந்து ஊன்றி வாசிப்பவர்கள் ஸ்ரீபாஷ்யம் ஸ்ரீராமாயணம் ஸ்ரீவசனபூஷணம் முதலிய பல நூல்களைப் பலகால் ஸேவித்துப் பெறக்கூடிய ஞானத்தை எளிதிற் பெறுவர்க ளென்பதில் ஐயமில்லை. அரியபெரிய இந்நூலை மிக்கவூக்கத்துடன் விசேஷமான பொருட்செலவு செய்து அச்சிடுவித்த அந்த ஸ்வாமியின் திருக்குமாரர்களிருவர் பக்கலிலும் உலகம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. (P. B. A.)

கிடைக்குமிடம் :—

ஸ்ரீமான் V. S R. சக்ரவர்த்தி,

24, கஸ்தூரிரங்க ஐயங்கார் சாலை, சென்னை—18.

ஸ்ரீமான் சுந்தரராஜன் செட்டியார் அவர்களின் எழுபதாண்டு நிறைவு விழா (பீமரதசாந்தியும் - கனகாபிஷேகமும்)

திருச்சியில் ப்ரபல வைர வணிகராகவும் திருக்கச்சிநம்பி சபையின் தலைவராகவும் கோயில் தென்னசார்ய ஸம்ப்ரதாய ஸம்ரக்ஷண சபையின் உறுப்பினராகவும் திகழும் ஸ்ரீ வைஷ்ணவரத்னம் ஸ்ரீமான் K. P S. சுந்தரராஜன் செட்டியார் அவர்களின் பீமரதசாந்தி கனகாபிஷேக விழா அவருடைய க்ருஹத்தில் 9-6-75ல் விசேஷ வைபவம் பொலிய நடைபெற்றது இவ் விழாவுக்குப் பூர்வாங்கமாக ஸ்ரீமான் செட்டியாருடைய ஆசார்யரான திருக்கோவலூர் ஸ்ரீ உ. வே. தேவராஜ பட்டர் ஸ்வாமிகளின் மங்களாசாஸனத்துடன் 1—6—75 காலையில் வேதபாராயண ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸுதர்சன சதக பாராயணங்களும் தொடங்கப்பெற்றன. அன்றே கோயில் அரையர் அத்யாபக ஸ்வாமிகளால் திவ்யப்ரபந்த ஸேவையும் தொடங்கப்பட்டது. 8—6—75 அன்று ஸ்ரீரங்கம் ஸ்ரீ உ. வே. வேதவ்யாஸ ரங்கநாத பட்டர் ஸ்வாமிகள் (ஸ்தலத்தார் ட்ரஸ்டி) எழுந்தருளியிருந்து சாற்றுமுறை வைபவத்தை மிகச் சிறந்தமுறையில் நடத்திவைத்தார்.

மலர் வெளியீடு

8-6-75 காலை வேளுக்குடி ஸ்ரீ உ. வே. வரதாசாரியர் ஸ்வாமியின் உபந்யாஸம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அடியார் குழாங்களாய்க் கேட்டு இன்புற்றனர். காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியர் ஸ்வாமியின் திருப்பேரனர் ஸ்ரீ உ.வே. அனந்தாழ்வான் ஸ்வாமியும், ஸ்ரீ உ.வே. வரதாசாரியர்ஸ்வாமி திருக்குமாரர் ஸ்ரீமான் கிருஷ்ணனும் உபந்யாஸம் செய்து அனைவரையும் மகிழ்வித்தனர். இவ்விழா நினைவு மலராக ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதிபயங்கரம் மஹாவித்வான் அண்ணங்கராசாரிய ஸ்வாமிகளால் பதிப்பிக்கப்பெற்றதும், கோயில் ஸ்ரீ உ. வே. சதாபிஷேகம் கோவிந்த நாஸிம்ஹாசாரியர் ஸ்வாமி, ஸ்ரீ உ. வே. இளையவில்லி பூவராஹாசாரியர் ஸ்வாமி இவர்களின் மங்களாசாஸனத்துடன் கூடியதுமான நித்யாநுஸந்தான க்ரந்தத்தை ஸ்ரீ உ. வே. வேளுக்குடி வரதாசாரியர் ஸ்வாமி வெளியிட்டனர். மலரின் பிரதியை ஸ்ரீ காஞ்சீ ஸ்வாமிக்காக ஸ்ரீ அனந்தாழ்வான் ஸ்வாமியும் திருக்கச்சிநம்பி ஸபைக்காக அச் சபையின் காரியதரிசியான ஸ்ரீமான் ஸேவாரத்னம் M. R கண்ணபிரான் நாயுடுவும், கோயில் தென்னசார்ய ஸபைக்காக ஸ்ரீ K. புருஷோத்தம நாயுடுவும் ஸ்ரீ மணவாளமாமுனி ஸன்னிதிக்காக ஸ்ரீ சடகோபன் ஸ்வாமியும் ஆயிரவைச்ய சங்கத்திற்காக ஸ்ரீ S. K. K. மாணிக்க செட்டியாரும் முறையே பெற்றுக்கொண்டனர்.

திருவரங்கநாதன் ஸன்னிதியில் எழுந்தருளியுள்ள எல்லா எம்பெருமான்களுக்கும் திருப்பரிவட்டம் ஸமர்ப்பித்தது குறிப்பிடத்தக்கது. 8—6—75 மாலை வேதவிற்பன்னர்களைக்கொண்டு வைதிகமுறையில் பலமுக்யதீர்த்தங்களைக்கொண்டு கடஸ்தாபனம் முதலியன முறைப்படி நிகழ்ந்தன. 9—6—75 காலை ஹோமாதிகள் முறைப்படி ஆரம்பிக்கப்பெற்றன.

கனகாபிஷேக முகூர்த்தத்தில் வேதகோஷங்கள் முழங்க மங்களவாத்யங்களுடன் ஸ்ரீ செட்டியார் அவர்களுக்கு தீர்த்த அபிஷேகம் செய்வித்தபின்னர் பீமரத சாந்தி கனகாபிஷேக முகூர்த்தவிழா ஆனந்தமாக நடைபெற்றது.

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியர் ஸ்வாமி அனுப்பியிருந்த பொன்னுடையை ஸ்ரீ உ. வே. தி. அ. சதாபிஷேகம் கோவிந்த நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி ஸ்ரீ செட்டியார்க்குப் போர்த்தி வாழ்த்துரையாக உபந்யஸித்தருளினர். ஸ்ரீ அனந்தாழ்வான் ஸ்வாமி ஸ்ரீ காஞ்சீ ஸ்வாமியருளிய வாழ்த்துப்பாக்களைப் பண்ணிலமைத்துப்பாடி அப்பாக்களின் பொருளையும் விரித்துரைத்து மகிழ்வித்தார்.

வாழ்த்துக்கள்.

பல சங்கங்களின் பிரதிநிதிகள் வாழ்த்துக்கள் கூறி மாலை அணிவித்தனர். ஆடவர் பெண்டிர் அனைவரும் மாலைகள் மற்றும் பொன்னுடைகள் அணிவித்து ஆசிபெற்றனர். பற்பல கோயில்களிலிருந்தும் அக்கோயில் அதிகாரிகள் ப்ரஸாதங்களை அனுப்பியிருந்தனர். ஸ்ரீ வில்லிபுத்தூர், திருமாலிருஞ்சோலைமலை, ஸ்ரீ கூடலழகர் ப்ரஸாதங்களும் கிடைத்தன. ஸ்ரீ வானமாமலை ஜீயர்ஸ்வாமி, காஞ்சிப் பெரியவர் ஸ்ரீ சங்கராசாரியர் ஸ்வாமி, புதுக்கோட்டை பிரசாந்தானந்தா ஸ்வாமி ஆகியோர் மங்களாசாஸனமும் ப்ரஸாதமும் அனுப்பியிருந்தனர், திருமுருககிருபானந்தவாரியார் அவர்களுடைய வாழ்த்தும் கிடைத்தது. மற்றுமுள்ள வணிகப்பெருமக்களும் வாழ்த்துக்கள் அனுப்பியிருந்தனர். திருக்கச்சிநம்பி ஸபை காரியதரிசி ஸேவாரத்னம் M. R. கண்ணபிரான் நாயுடு அவர்கள் வாழ்த்துப்பா வாசித்துப், ஷை சபை உபதலைவர் ஸ்ரீ S. K. K. மாணிக்கம் செட்டியார் அவர்கள் பொன்னுடை போர்த்தியும் கௌரவித்தனர்.

“ஸ்ரீ நாம ராமாயணம்” என்ற நூலை திருக்கச்சிநம்பிஸபை சார்பில் காரியதரிசி ஸ்ரீ ஸேவாரத்னம் *M. R.* கண்ணபிரான் நாயுடு அவர்கள் வெளியிட்டார். ஸ்வாமிகளுக்கும் மற்றுமுள்ள முக்ய அதிகாரிகளுக்கும் ஸம்பாவனைகளும் திருப்பரிவட்டமும் முறையோடு ஸமர்ப்பிக்கப்பட்டன. ஸ்வாமிகள் அனைவர்க்கும் ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ ஸ்ரீரங்க நாராயண ஜீயர்ஸ்வாமி மடத்தில் ததீயாராதனம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாலையில் ஸம்ப்ரதாய திலகம் ஸங்கீத ஸாஹித்யரத்னம் ப்ரஹ்மஸ்ரீ *T. R. S.* மணிபாகவதர் தலைமையில் ஸ்ரீராதாக்ருஷ்ண மாதர்பஜனை மண்டலியார்கள் ஸ்ரீ செட்டியாருக்கு ஸ்ரீ சௌந்தரம் திருமண மாளிகையில் வரவேற்பளித்து வாழ்த்துப்பா வாசித்து மாலை அணிவித்தனர். ஸ்ரீ *K. P. S* நாராயணன் B. A., சகோதர சகோதரிகள், மற்றும் மாப்பிள்ளைகள், விழா ஏற்பாடுகளைப் போற்றத்தக்க வகையில் கவனித்தது குறிப்பிடத்தக்கது.

இத்தனை வைபவங்களும் மிகச்சிறப்புடன் நடைபெற்றதற்குக் காரணம் ஸ்ரீமான் செட்டியாருக்குப் பெரியபெருமாளிடத்திலும் பரம பாகவதர்கள் திறத்திலும் உள்ள பக்தியே என்று சபதமிட்டுக் கூறலாம். இந்த மஹான் தம் குடும்பத்

தாருடன் வையம் மன்னி வீற்றிருந்து திருமாலடியார்களைப் பூசித்துத் தென் னாட்டுத் திலகமாய் இன்னுமொரு நூற்றாண்டு வாழப் பெரிய பிராட்டியாரையும் பெரிய பெருமாளையும் வேண்டுகிறேன்.

இங்ஙனம், தாஸன்,

'ஸ்ரீ ஸேவாரத்னம்' M. R. கண்ணபிரான் நாயுரு, ஸ்ரீரங்கம்.





ஸ்ரீகாஞ்சி ஸ்வாமி ஸ்ரீமான் செட்டியாருக்கு அநுக்ரஹித்த வாழ்த்துப்பாக்கள்.

1 சீரும் சிறப்புமிகு சீரங்கத் தருகேவாழ்
பாரில் மலிபுகழார் பத்திமிகு சுந்தரனார்
ஆரும் மனமகிழ எழுபத்தோ ராண்டுபுகச்
சீருற்ற விச்சபையில் சிறப்புரைகள் செப்புதுமே.


ஆசா ரியர்பலரை யார்வத்தோ டடிபணிந்து
தேசாரும் சிச்சனெனத் தேசமெலாம் புகழ்பெற்று
வாசா மகோசரமா வாய்ந்த குணக்கடலே
நீர்சூழு நிலமிதனில் நீடூழி வாழியரோ.

2 பொருந்திய தேசும் பொறையும் திறலும் புகழும் நல்ல
திருந்திய ஞானமும் செல்வமுஞ் சேர்ந்து செகமிதனில்
வருந்துத லேதும் இறையேனுமின்றி யினிதிருந்து
துரந்தர சுந்தரராசர் திருவுரு சோபிக்கவே.





மலர் வெளியீடு




கடஸ்தாபநம்






பக்த ரத்னம் ஸ்ரீமான் செட்டியார்



குடும்பத்தினருடன் ஸ்ரீமான் செட்டியார்



தழைநல்ல வின்பந்தலைப்பெய்து எங்கும் தழைக்க!

உபந்யாஸகர்களுக்கு உபஹாரங்கள்

வைஷ்ணவ விருத்தாந்தமொன்று

மஹாபாரதத்தின் ஓர் இதிஹாஸம் கேண்மின்;— விச்வாமித்ரனிடத்தில் வித்யைகளையெல்லாம் அதிகரித்த காலவனென்று மந்தணன் முடிவில் "குருதக்ஷிணை கொடுத்தாலொழிய நமக்கு இந்த வித்யைகள் நிலைநில்லா" என்றெண்ணி "அடியேன் என்ன தக்ஷிணை ஸமர்ப்பிக்கவேணும்?" என்று கேட்டான்; அதற்கு அவர், நான் உன்னுடைய பக்தியினாலும் சுச்ரூஷையினாலும் ப்ரஸந்நனாயினேன்; எனக்கு நீ ஒன்றும் ஸமர்ப்பிக்கத்தேவையில்லை" என்றார். அப்படி அவர் பலகால் சொல்லியும் காலவன் கேளாமல் "ஏதாவதொரு தக்ஷிணை நியமித்தேயாகவேணும்" என்று நிர்ப்பந்திக்கவே, அவர் சீற்றங்கொண்டு "உடம்பெல்லாம் சந்திரமண்டலம் போலே வெளுத்து ஒரு காது பச்சையாயிருக்கப்பெற்ற எண்ணூறு குதிரைகள் கொண்டு தா" என்றார். காலவன் இதைக்கேட்டு வியாகுலனாய் என் செய்வதென்று சிந்தித்து, ஸர்வாபேக்ஷிதங்களையுமளிக்கவல்ல எம்பெருமானை உபாஸிக்க முயன்ற வளவிலே முன்பே யிவனுக்கு ஆப்தனாயிருந்த கருடன் வந்து முன்னின்றான்; அவனை இவன் ஸ்தோத்ரம் பண்ணி, தன் வியாகுலத்தைச்சொல்லி இதற்கென்ன செய்யலாமென்று கேட்க "உன்னை நான் சுமந்து கொண்டு இப் பூமண்டலமெங்கும் திரிகிறேன் இருவருமாய்த் தேடிப் பார்க்கலாம் வா" என்றான் கருடன். அப்படியே இருவருமாய்த் திரியும்போது மேல் ஸமுத்ரத்தில் ரிஷபமென்னும் மலையின் மீது இளைப்பாற நின்றவளவில் அங்கே வஸிப்பவளும் அறிவிற் சிறந்தவளுமான சாண்டில்யை என்கிற ஒரு வைஷ்ணவியைக் கண்டு சென்று வணங்கி அவளால் ஸத்காரமும் பெற்று இவர்கள் அங்கே படுக்கும் போது" இப்படி விலக்ஷணையா யிருக்கிற இவள் விலக்ஷணமான வொரு திவ்ய தேசத்திலே வஸிக்கலாகாதா?" என்று கருடன் நினைத்து "இவளை இங்குநின்றும் ஒரு திவ்யதேசத்திலே கொண்டுபோய் வைக்கக் கடவோம்" என்றெண்ணியிருக்கையில்— அந்த வைஷ்ணவி இருந்த இடத்தை இழிவாக நினைத்த இவ்வபசாரத்தாலே சிறகுகள் உதிர்ந்து ஒன்றும் செய்ய முடியாமற் போய்விட, இதைக் காலவன் கண்டு 'மாநஸமாக ஏதேனும் அபசாரப் பட்டதுண்டோ? என்று கேட்க, அவன் உண்மையைச் சொல்லி அவளிடத்திலும் பொறுமை வேண்ட, அவளது அநுக்ரஹத்தாலே அவ்வபச்சாரம் நீங்கி முன்பு போலே யானான். (இக்கதை மஹாபாரதத்தில் உத்யோக பர்வத்தில் 112-ஆம் அத்தியாயதிலுள்ளது.)

—பிள்ளைப் பிள்ளையாழ்வானுக்கு ஆழ்வான் பணித்த வார்த்தை—

பிள்ளைப் பிள்ளையாழ்வானென்கின்ற ஒரு சிஷ்யருக்குக் கூரத்தாழ்வானருளிச் செய்ததொரு வார்த்தைக் கேண்மின்; பிள்ளைப்பிள்ளையாழ்வாரென்பவர் ஆபிஜாத்யம் முதலியவற்றால் மேம்பட்டவராகையாலேபாகவதவிஷயங்களில் விநயமில்லாமல் அபசாரப் பட்டுக் கொண்டயிருந்தார்; ஆழ்வான் இதைக்கண்டு "ஐயோ! இவர்க்கு இந்த பாகவதாபசாரம் இவருடைய ஜ்ஞாநாநுஷ்டானங்ளெல்லாவற்றையும் கீழ்ப் படுத்திதானே மேலாகி விநாசத்தை விளைத்திடுமே!, அதுக்கு வேலியிட்டு வைக்க

வேணும்" என்று திருவுள்ளம்பற்றி ஒரு புண்யகாலத்திலே நீராட்டமானபின் இவரை நோக்கி "எல்லாரும் தானம் பண்ணுகிற இக்காலத்திலே நீரும் நமக்கொரு தானம் பண்ணமாட்டீரோ?" என்ன, "அடியேன் எத்தை தானம் பண்ணுவது, எல்லாம் ஸ்வாமியினுடையதே யன்றோ" என்ன; "அஃது இருக்கட்டும், மனோ வாக்காயங்கள் மூன்றாலும் பாகவதாபசாரப் படாமல் வர்த்திக்கக் கடவேன் என்று நம் கையிலே உதகதானம் பண்ணவேணும்" என்று ஆழ்வான் அருளிச்செய்ய, அப்படியே இவரும் உதகதானம் பண்ணித்தந்த பின்பு ஒருநாள் பூர்வ வாஸனையாலே பாகவதாபசாரப்பட நேர்ந்தவாறே "நாம் இனி முடிந்தோம்" என்று பயப்பட்டு அன்று ஆழ்வான் ஸந்நிதிக்கு விடைகொள்ள வெள்கித் தம் திருமாளிகையிலேயே இருந்துவிட, இவர் வழக்கப்படி வருகிற காலத்தில் வரக்காணாமையாலே ஆழ்வான் இவர் திருமாளிகையிலே யெழுந்தருளி வினவியருள, அவர் தமக்கு மாநஸிகமாகப் பாகவதாபசாரம் நேர்ந்தமையை விண்ணப்பம் செய்து "கரணத்ரயத்தாலும் அபசாரம் விளையாதபடி இத்தேஹத்தோடு வர்த்திக்கை அரிதாயிருக்கின்றது!, என் செய்வேன்?', என்று திருவடிகளைக் கட்டிக்கொண்டு கிடந்து வருந்த "இத்தனை அநுதாபம் இவர்க்கு உண்டாயிற்றே" என்று உகந்தருளி "மாநஸிகமான அபசாரத்திற்கு அநுதாபமுண்டாகவே ஈச்வரன் பொறுத்தருள்வன். ப்ரத்யக்ஷத்தில் ராஜ தண்டனை கிடைக்குமென்ற பயத்தாலே காயிகமாக ஒருவரையும் நலியமாட்டீர்; இனிவாக்கொன்றையும் நன்றாகக் குறிக்கொண்டு இரும் என்றருளிச் செய்தார். ... ...

—கண்டாரிகழ்வனவே காதலன்தான் செய்தது—

குலசேகராழ்வார் பெருமாள் திருமொழியில் தம்முடைய அநந்யகதித்வத்தை விண்ணப்பஞ்செய்கிற *தருதுயரம் தடாயேலென்னும் பதிகத்தில் (2) *கண்டாரிகழ்வனவே காதலன் தான் செய்திடினும், கொண்டானையல்லா லறியாக்குலமகள் போல்* என்றொரு த்ருஷ்டாந்தம் காட்டியுள்ளார். கண்டாரெல்லாருமிகழும்படி காதலன் செய்ததைப் பற்றி ஒரு விநோதக் கதை கேளீர்.

ஒரு மாப்பிள்ளை மாமியாரகத்துக்குச் சென்றார். அப்போது தன்மனைவியைத் தன்னில்லத்திலேயே விட்டு வைத்துத் தான்மட்டும் சென்றிருந்தார்; அங்கே மாமியார் ஒருநாள் குழக்கட்டை சமைத்துச் சாதித்தாள் மாப்பிள்ளைக்கு, அது வரையில் அவர் ஒருநாளும் குழக்கட்டை சாப்பிட்டதேயில்லை; இப்படியொரு திண்பண்டமுள்ளதென்றுகூட அறிந்தவரல்லர். வாய்க்கு வெகு ருசியாயிருந்தது; மாமியாரே! இது என்ன பக்ஷணம்? அபூர்வமாயிருக்கிறதே; பரமபோக்யமாயிருக்கிறதே; இதன் பெயர் என்ன? என்றார் மாப்பிள்ளை, அதற்கு மாமியார் 'இதற்குக் குழகட்டை என்று பெயர்' என்றாள். 'உம்முடைய பெண்ணுக்கு இது சமைக்கத் தெரியாதோ? இது வரை ஒருநாளும் அவள் இதைச் சமைக்க வில்லையே' என்றார். தெரியாமலென்ன? என்னைவிட நன்றாக இது சமைக்கத் தெரியுமவளுக்கு; நீர் சொன்னால் சமைத்துச் சாதிப்பாள், இதற்கென்ன பிரமாதம்?' என்றாள் மாமி. ஊருக்குப்போய் இதை நித்தியமும் சமைக்கச் செய்து சாப்பிடவேணும் என்று ஆசை கொண்டார் மாப்பிள்ளை, இரண்டுநாள் பொறுத்து ஊர் போய்ச் சேர்ந்தார். குழக்கட்டை யென்கிற பெயரை மறந்து விட்டார். எவ்வளவு சிரமப்பட்டும் அப்பெயர் நினைவுக்கு

வரவேயில்லையிவர்க்கு. உன் தாயார் ஒரு அற்புதமான பக்ஷணம் சமைத்துச் சாதித்தாள்; அது வெகு ருசியாயிருந்தது; அதை நீயும் சமைத்துத் தா, என்றார் தேவியாரை நோக்கி; 'அதைச் சமை என்றாள் நான் எதைச் சமைக்கிறது? அதன் பெயர் சொன்னால் சமைப்பேன்; அது இன்னதென்றே எனக்குத் தெரிய வில்லையே; தெரியாமல் நானெப்படி சமைப்பது? என்றாளவள். அதற்கு இவன் சொன்னான் 'நீ தினந்தோறும் ஒவ்வொரு அபூர்வமான தின்பண்டம் சமைத்துச் சாதித்துவா; ஒருநாளில் அதுவும் தைவாதீனமாக வந்துவிடும்; அப்போது நான் சொல்லுகிறேன்' என்று. இதை மனைவி கேட்டு அப்படியேயென்று ஒப்புக்கொண்டு நித்தியம் ஒவ்வொரு பணியாரம் சமைத்துச் சாதித்து வந்தாள். அவளுக்குக் குழக் கட்டை பணியாரம் தெரிந்திருந்தும் அது நினைவுக்கு வாராமையினால் அதைச் சமைத்து இடவேயில்லை, புருஷனுக்குப் பிரபலமான கோபம் உண்டாய்விட்டது; நான் சொன்னதைச்சமைக்காமல் எதையோ சமைக்கிறாய்; உனக்கு அது சமைக்க நன்றாகத் தெரியுமென்று உன் தாய்கூடச் சொன்னாள். வேணுமென்றே பிடிவாதங் கொண்டு அதை நீ சமைக்கவில்லை; உன்னையென்ன பண்ணுகிறேன் பார்!' என்று சொல்லித் தாடையிலும் முதுகிலும் கையாலடித்துப் போதாமல் ரூல்கட்டையாலும் புடைத்தான்! அவள் அடி தாங்கமாட்டாமல் வாசலில் ஓடிச்சென்று 'இப்படிகூட ஒரு அநியாயமுண்டா? அதைச்சமை அதைச்சமை என்றாள் நான் எதைச் சமைக் கிறது; ஏதோ எனக்குத் தெரிந்ததைச் சமைத்தேன்; இப்படி புடைக்கிறாரே கேட்பாரில்லையா? என்று தெருவில் நின்று அலறியழுதாள். ஊரெல்லாம் ஒன்று கூடி விட்டது; மிகவும் பரிதாபகரமான அடி. ஒவ்வொருவரும் அவனிடம் வந்து 'அடா இப்படி கூடவா சாதுவான பெண்ணையடிப்பது? உடம்பெல்லாம் குழகட்டை குழகட்டையாக எழும்பிவிட்டதே! என்றார்கள். "ஆம் ஆம், அது தான் அது நான்; அதுதான் நான் சமைக்கச் சென்னது" என்று கத்துகிறான் புரு ஷன். எல்லாரும் சிரிக்கிறார்கள்; அடிபட்ட பெண்ணுக்கும் சிரிப்புவந்துவிட்டது. குழ கட்டை குழகட்டையாக எழும்பும்படி யடிக்கவேதானே குழகட்டை பணியாரம் வெளிபட்டதென்கிறான் புருஷன். குலசேகராழ்வார் இதைக்கண்டார் போலும்.

—மருவித்தொழும் மனமே தந்தாய்—

நம்மாழ்வார் திருவாய்மொழியில் "மருவித் தொழும் மனமே தந்தாய்" என் றருளிச் செய்தார்; முன்னிருந்த மனமன்று இப்போதுள்ள மனம்; எம்பெருமான் அதைக் கவர்ந்துசென்று வேறொரு மனதைக் கொணர்ந்து வைத்திட்டான் என்றா ராயிற்று. இப்படியன்றோ ஆசாரியர்கள் வியாக்கியானம் செய்தருளியிருப்பது; ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்— "பழைய நெஞ்சைத் திருத்தினவளவன்றிக்கே கருவுலத்திலே யொரு நெஞ்சைத் தந்தாய்; *திவ்யம் ததாமிபோல. பழைய நெஞ்சு இது' என்று ப்ரத்யபிஜ்ஞை பண்ணவொண்ணாதபடி யிராநின்றது" என்று. கருவுகலமாவது பெரியதேவஸ்தானங்களில் திருவாபரணம் முதலியசிறந்த வஸ்துக் களை சேமித்து வைக்குமிடம். க௨ஹ மென்பார்கள். அதிலிருந்து ஒரு நல்ல நெஞ்சையெடுத்து ஆழ்வார்க்கு எம்பெருமான் நன்கொடையாகக் கொடுத்தானாம். இதன் பரம தாற்பரியத்தை அடுத்த பாட்டில் ‡எல்லைத் தீமனங்கெடுத்தாய்‡ என்பதனால் விளக்கியருளினாராயிற்று. அதற்கேற்ற கதையொன்று கேளீர்.

மஹாநிபுணனனவொரு நாபிதன் வெங்கடகிரி ஸமஸ்தான ராஜாவிடம் இருந்து வந்தான். அவனுடைய திறமை எப்படிப்பட்டதென்றால் பிரபு அயர்ந்து உறங்கும் போது அவனுக்குத் தெரியாதபடியே வபநம் செய்துவிடுவன். காலையெழுந்து கண்ணாடியில் பார்த்துக் கொள்ளும் போதுதான் வபனமாய் விட்டதாக அரசன் அறிந்துகொள்வான்; அதனால் அவனுக்கும் பரமஸந்தோஷம் அந்தஸந்தோஷத்தினால் அந்த நாபிதனை மிகவும் ஆதரித்துவைத்துக் கொண்டிருந்தானரசன். இப்படியிருக்கையில் அவன் காலமாய்விட்டான். வேறு எந்த நாபிதனும் அவன் போல் செய்யத் திறமையுள்ளவனாகக் கிடைக்கவில்லை; பிரபு வெகு சிரமப்பட்டார். ஒரு விளம்பரம் அச்சடித்துத் தேசமெங்கும் பரவச்செய்தார்; அதாவது "நான் உறங்கிக்கொண்டேயிருக்கும் போது எனக்குத் தெரியாமலே வபனம் செய்யத்திறமை பெற்ற நாபிதனுக்கு மாதம் 200, 300 ரூ. சம்பளமளிக்கிறேன்"னென்று. அதையறிந்த நாபிதர்களெல்லாரும் அந்த ஸன்மானம் பெறுவதற்கு ஆசைப்பட்டு அவ்விதமான பழக்கம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். திருவாலங்காட்டில் ஒரு நாபிதன் இதில் தேர்ச்சி பெற்று ராஜாவிடம் சென்று பரீக்ஷை கொடுக்கப் புறப்பட்டுக் கால்நடையாகவே நடந்துசெல்லலுற்றான். வழியிடையில் ரேணிகுண்டா ஸமீபத்தில் 'வடமாலபேடா' என்பது ஓர் ஊர். அங்கே பெரியகுளம். ஒன்று குளத்தின் கரையிலே ஒருவர் திருவேங்கடமுடையானுக்கு முடிகொடுப்பதற்காக ஐந்தாறு வருஷமாய் தீக்ஷை வளர்த்துப்பெரிய மீசைதாடியோடு மூட்டையைத்தலையணையாக வைத்துக்கொண்டு அயர்ந்து தூங்குகிறார்; அங்கே வந்து சேர்ந்த திருவாலங்காட்டு நாபிதன் இந்த தீக்ஷிதரிடத்திலே தன்னுடைய திறமையைபரீக்ஷித்து பார்க்க நிச்சயித்து விட்டான். உடனே செய்தும் முடித்துவிட்டான். தாடியுட்பட கேசங்களையெல்லாம் சுருட்டியெடுத்துப் பையிலடைத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டான். தீக்ஷிதர் ஒரு மணிநேரம் கழித்துத் தானாக விழித்தெழுந்தார். தாடிக்காரர்கள் எழுந்திருக்கும் போது தாடியை யுருவிக்கொண்டே யெழுந்திருப்பது வழக்கமாதலால் அவ்வழக்கத்தின்படி தாடியை யுருவிப்பார்த்தார். தாடி ஏது? உடனே மூட்டையை யவிழ்ந்துக் கண்ணாடியை யெடுத்துக் காண்கிறார். கழுத்துவரையில் ஓரிடத்திலும் ஒருகேசமும் கிடையாது. அப்பய தீக்ஷிதர் சித்திரமீமாம்ஸையில் **"ஸத்யோமுண்டித மத்த ஹூணசுபுக ப்ரஸ்பர்த்தி நாரங்ககம்"** என்றொரு சுலோகம் உதாஹரிக்கிறார். அப்போதுதான் வபனம் பண்ணப்பெற்ற ஹூணனுடைய மோவாய்க்கட்டை போலுள்ளது கிச்சிலிக்காய்—என்பது இதன்பொருள். இவ்விதமாகவே கண்ணாடிப்புறத்தில் முகத்தைக்கண்டார் திருவேங்கடமுடையானுக்கு முடிகொடுக்கச் செல்லுமந்த தீக்ஷிதர்.

மிகமிக ஆலோசிக்கிறார்; நம்முகம் இங்ஙனமாக எப்படியாய் விட்டதென்று எண்ணுதனபலவு மெண்ணுகிறார். தனக்குத் தெரியாமல் வபனம் பண்ணியிருக்க முடியவே முடியாதென்றும், கூலிபெறாமல் எவனும் வபனம் செய்யமாட்டானே யென்றும் எண்ணுகிறார். கடைசியாக என்ன முடிவு செய்தாரென்றால், 'நம்முடைய தலையைத் துருவியெடுத்துக்கொண்டுபோய் வேறொரு தலையைக் கொணர்ந்து ஒட்ட வைத்துப்போய்விட்டான் எவனோபாவி' என்று முடிவு செய்தார். வபனம் பண்ணியிருக்க ஸம்பாவிதமில்லையென்றும், இதுதான் ஸம்பாவிதமென்றும் நினைக்கும் மேதாவி அவர்.

ஸ்ரீ:

வேதவித்ப்யோ நம:

வைதிகபதஸ்வர ஸௌஷ்ர்ய சோதநம்.

வைதிகவத ஸ்வரவைஷம்யசோதநம்.

(ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர்)

ஸ்ரீமதுபயவே. நாவல்பாக்கம் தேவநாதாசாரியர் (தஞ்சாவூரில் வெண்ணாற்றங்கரையில் வாழ்பவர்) நமக்கு நெடுநாளைய நண்பர். இவருடைய திருத்தகப்பனரும் திருத்தமையனரும நமக்குப் பரமாப்தர்களாயிருந்தார்கள். ஸ்ரீ தேவநாதாசாரியர் அநந்த ஸந்தேச பென்னும் ஹிர்தீ பத்ரிகையில் வேதவிசாரபரமான சிறியதொரு வியாஸம் வடமொழியில் வெளியிட்டிருக்கிறர் சென்ற வைகாசி மாதத்தில். அதில் அவர் தம்முடைய பலவிசிகித்ஸைகளை வெளியிட்டு



அவற்றுக்கு ஸமாதானம் வேண்டியிருந்தபடியால் ஸம்ஸ்க்ருதத்திலேயே ஸமாதான வியாஸமொன்று எழுதி அப்பத்திரிகையிலேயே வெளியிட அனுப்பியிருக்கிறேன். அப்பத்திரிகையைத்தமிழ்நாட்டினர் காணப்ரஸக்தியிராதாகையால் அவ்விஷயம் நமது நாட்டினர்க்கும் தெரிந்திருக்கவேணுமென்று கருதி இத்தமிழ் வியாஸம் வெளியிடப்படுகிறது. இதை கண்டன வியாஸமாக ஒருவரும் நினைக்கலாகாது. கண்டன ருசியும் நமக்கில்லை.

ஸமீபகாலத்தில் நாம் எழுதி வெளியிட்டிருக்கிற யஜுர்வேத ஸித்தாஞ்ஜநம் (நமது தேவநாகரீ மொழிபெயர்ப்பில்) ஸாவசேஷமாக நின்றிருக்கிறது. அந்த நூலின் அநுபந்தமாகவே இதைக் கருதலாம். ஸ்ரீ தேவநாதாசார்யருக்கு மனத்தெளிவை யுண்டுபண்ணுகிற வியாஜத்தினால் க்ரமாந்தமாக வேதமோதின வைதிகர்களுக்கு வேதத்தில் பல நுட்பங்களைத் தெரிவிப்பதே நமது உத்தேசம். ஸ்ரீ தேவநாதாசாரியர்க்கும் நமக்குமுள்ள ஸௌஹார்த்தம் குன்றுமே இஃது எழுதலாகிறது. நமது க்ருஷ்ணயஜுர்வேதத்தை-ஸம்ஹிதை, அஷ்டகங்கள், அச்சித்ராச்வமேத காண்டங்கள், ஆரண்யகம் என்கிற பிரிவுகளை யுடையதாக வைதிகர்கள் தெரிந்துகொண்டிருக்கிறர்கள். இவற்றில் ஆரண்யகபாகந் தவிர மற்றவற்றில் வடிங்களெல்லாம் (பெரும்பாலும்) ஸ்வரவைஷம்யத்தோடு கூடியிருப்பதாகவும், ஆரண்யகப்பகுதியொன்றுமட்டும் ஒரு கட்டுக்கடங்காத ஸ்வர வைஷம்யங்கொண்டிருப்பதாகவும் காண்கிறோம். இங்குப் (பெரும்பாலும்) என்று ஏன் எழுதினேமென்றால் ஸம்ஹிதாதிகளிலும் சிற்சிலவிடங்களில் நிமித்த விசேஷமில்லாமல் ஸ்வரவைஷம்யம் அயாஜ்யநவாநுவரையில் எங்கும் ஸமரூபமாகக் காணப்பட்டுவருகிறபடியாலே. (ஸ்வல்பம் உதாஹரிக்கிறோம்.)

ஏழாவது காண்டம் நான்காவது ப்ரச்நத்தில் * [illegible] * என்னுமநுவாகத்தில் கடைசியான [illegible] ([illegible]) என்கிறபதம் ஸர்வாநுதாத்தமாகவுள்ளது. இப்பதம் ஸம்ஹிதையிலும் ப்ராஹ்மணத்திலும் எண்ணிறந்த தடவை வருகின்றது. எங்கும் [illegible]மாகவும் [illegible]மாகவே யுள்ளது. இவ்வோரிடத்தில்மட்டுமே மாறுபட்டிருப்பது வேதபுருஷனுடைய ஸ்வதந்த்ரேச்சையினாலென்னவேனும். இப்படியே ([illegible]) என்கிற பதமும் சிலவிடங்களில் நிஹதமாக வருவதை வைதிகர்கள் அறிவர். அது ஆத்யுதாத்தமாகவும் அந்த்ய ஸ்வரிதமாகவும் இருக்கவேண்டிய பதமல்லவா?

[illegible]த்தில் * [illegible], [illegible] * என்ற இரண்டு வாக்கியங்களிலும் ([illegible]) என்கிற [illegible]த்தில் [illegible]மிருக்கவேண்டியிருக்க அது இப்லாமலிருப்பது விஷயம். [illegible]த்தில் * [illegible] * என்றவிடத்தில் இருமுறைவரும் ([illegible]) என்கிற [illegible]த்தில் ஸ்வரம் மாறுடியிருப்பதை வைதிகர்கள் ஊன்றி நோக்கியே அறியவேணும். காடகத்திலேயே * [illegible] * என்றவிடத்தில் முந்தின ஜயதியில் உதாத்தமிருக்கவேண்டியிருக்க பிந்தின இடம்போலவே யிருப்பது விஷயம். [illegible]த்திலேயே * [illegible]த்தில் * [illegible] * என்ற வாக்யத்தில் [illegible]மாக வந்த [illegible] அடுத்ததான * [illegible] என்ற வாக்யத்தில் அப்படியன்றிக்கே நிஹதமாக வந்திருப்பதைக் காணவேணும். இதுவன்றோ முறை. இந்த முறை * [illegible] * என்றவிடத்தில் மாறியிருப்பது விபர்யயமேயன்றோ? இப்படிப்பட்ட விபர்யயங்கள் [illegible]ங்களில் அதிஸ்வல்பமேயாம். இங்கு நாம் எடுத்துக்காட்டியளவேதானுள்ளது என்றுங்கொள்ளலாம். ஆனாலும் இன்னமுமுண்டு.

இந்த விபர்யயங்கள் எப்போது ஏற்பட்டன ? எதனாலேற்பட்டன ? என்று விசாரிக்க நாம் அதிகாரிகளல்லோம். வேதமோதுமிடங்களிலெல்லாம் ஓரிடந் தப்பாமல் எங்கும் இந்த விபர்யயங்கள் காணப்படுகையாலே நம்மால் ஒன்றும் செய்ய இயலாது, கைகூப்பவேண்டியதத்தனை.

இனி தைத்திரீய – ஆரண்யகத்திலிறங்குவோம்.

ஆரண்யகத்தின் ஸ்வர வைவரி விலக்ஷணமானது. ஆரம்ப வாக்யத்தையே எடுத்துக்கொள்வோம். * [illegible] * என்பது முதல் வாக்யம். இதில் ([illegible]) என்கிற பதத்தைப்பற்றி நாம் கூற விரும்பவில்லை. ([illegible]) என்கிற [illegible]த்தைக் காண்மின். இதற்கு இயற்கையான ஸ்வரம் என்ன? அதாவது ஔ[illegible]மான ஸ்வரம் யாது? [illegible] என்பது நிர்விவாதம். (அதாவது [illegible]மாயிருக்கவேண்டு மென்றபடி.) இங்கு அப்படி யிருக்கிறதா வென்று பார்த்தால் இல்லை. ஸர்வா[illegible]த்தமாயிருப்பதற்குச் சில அபவாதங்களுமுண்டு. அத்தகைய அபவாதங்களில் ஒன்று

மில்லையிங்கு. இவ்விடத்திலேயே அடுத்த வாக்யத்தைக் காண்போம். *ஸ ஹ்ரூம் வஸொஷ்வாக்ஷவியஜக்ஞதூ:* என்பதில் (வஸொஷ்வ) என்றது இயற்கையான ஸ்வரம் மாருமலிருப்பது காண்க.

மற்ருேரிடஞ் செல்வோம். *பொவொள கூ ஜுஷெதி* என்ற விடத்தில் (சுவொள)என்னும் பதம் தனக்குரிய ஸ்வரத்திலுள்ளதாவென்று பார்க்கவேணும். அவ்விடத்திலேயே அடுத்தபடியுள்ள * சுவொள யாஜஷூஜெதி * என்ற வாக்யத்தில் இயற்கையான ஸ்வரத்திலுள்ள *சுவொளவஷம் ஆரம்பவாக்யத்தில் ஸ்வரிதங் கொண்டு வேறுபட்டுள்ளது. மற்றுமொன்று கேண்மின். அந்த முதல் வாக்யத் தின் முடிவிலுள்ள (உஷெதி) என்கிற திஙவஷம் இருக்கவேண்டிய ஸ்வரரீதியில் இருக்கின்றது. அடுத்த வாக்யத்தில் [ஸவெஷாம் ஸஹொதாநா சிதஷ்வாஜியில்] உஷெதி என்பது அதே ஸ்வரமாக ஓதப்பட்டு வருவது விபர்யயந்தானே. இங்கு உக் என்பதில் அநுதாத்தமும் (ஷதி) என்பதில் ஸ்வரிதமும் விபர்யயந்தானே. மேலே (சுஜூஷெதி) என்ற விடத்திலும் வயாயஷயத்திலும் ஸ்வரம் மாருமலிருப் பதும் நோக்கத்தக்கது யஜுஷவதஷஷ வூயொஜஷுஷங்களில் க்ரியாபதத்தில் ஸ்வரம் மாறுபட்டுத் தீரவேணுமே.

இன்னேரிடஞ் செல்வோம். *ரொதிவொஷாஷஷெஷெஷெ। தத்ர நஷஷதி ஷெ வாஸவெ:* என்கிற (ஆரண்யக) வாக்யத்தில் ஷாஹிவெஷ மிருக்கும்படி யைக் காண்மின். இந்த வாக்யம் ஸம்ஹிதையிலோ அஷ்டகங்களிலோ வந்தால் இத்தகையஸ்வரத்தில் ஒருகாலும்வராது. *ஸஹஸ வஜியம் ஹவி: என்றவிடத்தைக் கொண்மின். இங்கு (ஜயஜ) என்கிற பதத்திற்கும் (ஹவி:) என்கிற பதத்திற்கும் காணப்படுகிற ஸ்வரம் இயற்கையானதா? ஜயஜ என்பது ஆத்யுதாத்தமாயும் அந்தொதாத்தமாயுமிருக்கவேணும் ஹவி: என்பது ஆத்யுதாத்தமாக இருக்கவேண்டும்; முறையே * ஜயஸெவ வா யஷூயஷா* என்ற விடமும், *ஹவி ஷஜஷா* என்ற விட மும் காண்க. *யஷவஂ வெஷ* என்ற விடமும் காண்க. ஷவஜ என்பது நிஹதமாக எங்கேனுமுண்டோ?

இப்படியாக நாம் எடுத்துக்காட்டத் தொடங்கினுல் அபரிமிதமாகக் காட்ட லாகும். இது முக்கியமான விஷயமாதலால் இன்னமும் சிறிது காட்டுகிறோம். *சுஷா ஷ்ரஷவாஷாஷஷூ* என்ற விடத்தில் (ஷ்ரெ) என்கிற அக்ஷரத்தில் காணும் ஸ்வரி தம் எங்கேனும் காண்பதுண்டா? உடனே சுஷ்ரெ: வஷவஜிஷாஷஷூ என்றவிடத்தில் காணும் ஸ்வரமும் எங்கேனும் காண்பதுண்டோ? (வஷவஜியஷவொஷதாஜிவஷங் களில் காணும் ஸ்வரங்களும் விலக்ஷணமல்லவா? முதல் ஷூக்தத்தின் கடைசி அநு வாகத்தைச் சொல்லிப்பாருங்கள். ஒரு வாக்யத்திலாவது ஸம்ஹிதையில் நடை யாடும் ஷரஷஹிவெஷம் காண்பதுண்டோ? * தவஷீஷாஷெஷாஹவதி தவஷீ வஷெஷாஹவதி * என்கிற விதில் காணும் ஸ்வரம் எவ்வளவு விலக்ஷணமான தென்பதை நாம் சொல்லவேணுமா? .... *

ஸ்ரீ தேவநாதாசாரியர் (ஷஹ .(ஷஹா) என்கிற இரண்டு பதங்களை எடுத்துக் கொண்டு ஏதோ ஷூஷஂமிக்கிருர். இவ்விரண்டு பதங்களுக்கும் ஷார நையத்யமும் ஸயஜெஷுமுள்ளதென்பதை அறியாதாரில்லே. *சுஷாவா: தெஷா ஷ ஜெஷதி* என்ற

விடத்தில் [illegible] அநுதாத்தமாக ஓதப்பட்டு வருவதால், [illegible] பொருளாக வேண்டுமிவ்விடத்தில் அது பொருளாக வழியில்லாமையாலே.......... என்று ஏதோ எழுதுகிறார். அதற்காக என்ன செய்யவேணுமென்கிறார் நம் [illegible]? என்பது தெரியவில்லை.

[illegible] என்று நபும்ஸகமாகவும் [illegible]மாக இருந்தால் கொள்ளக் கூடிய பொருளை இப்போதும் கொள்ளக் குறையில்லை என்பது பிராமாணிகர்களின் கொள்கை. பகவத் கீதையில் *[illegible]* என்றவிடத்தில் ப்ரஜாபதிசப்தத்திற்கு நான்முகனைப் பொருளாக வெழுதினர் ஆதிஸங்கராசார்யர். நமது பாஷ்யகாரர் நிருபாதிக ப்ரஜாபதியான ஸர்வேஸ்வரனையே பொருளாகப் பணித்தார். இதன் ஔசித்யத்தை தாத்பர்ய சந்த்ரிகையில் தேசிகன் விவரித்தருளினர். அந்தரீதியிலே *[illegible]* என்கிற விடத்திலும் [illegible] என்பதற்குப் பரப்ரஹ்மத்தைப் பொருளாகக் கொள்ள என்ன குறை? வேதாந்திகளுக்கு ஸாரீரக மீமாம்ஸையில் வைஸ்வாநராதிகரணமுள்ளது. அதில் *[illegible] ஜைமிநி:* என்கிற ஸூத்ரம் விசேஷித்துள்ளது.

ஆரண்யகத்திநுள்ளீடான தைத்திரீயோபநிஷத்தில் *[illegible]* உதாஹரணத்தில் [illegible] ஐந்து பர்யாயங்களிலும் [illegible]மாக உள்ளதா? என்று பார்க்க வேணும். இல்லையென்பதை நண்பர்தாமே எடுத்துக் காட்டியுள்ளார். இதனால் பொருளில் வாசியுண்டோ? ஐந்து பர்யாயங்களிலும் பரப்ரஹ்மந்தானே பொருள். ஆரண்யகமாகையாலே [illegible]முண்டாயிற்றென்று கொள்ள வேண்டுகிறுப்பதாலே *[illegible]* யிடத்திலும் [illegible]மாகக் கொள்ளலாமே.

ஸம்ஹிதையிலேயே மூன்றாவது காண்டத்தில் *[illegible] கவீநாம்* என்றவிடத்தில் [illegible] என்பதற்குப் பரப்ரஹ்ம மென்றே ஸ்ரீ வைஷ்ணவாசாரியர்கள் கொள்ளுவர்கள். ஏனெனில், மேல் காண்டம் 5. ஐந்தாவது ப்ரஸ்நத்தில் *[illegible] தேவதாநாம் விஷ்ணு: பரம:* என்றேகியிருப்பதோடு இணங்க வேண்டுகையாலே. அங்கு தேவதாநாம் [illegible]; இங்கு [illegible]நாம் [illegible]—என்று வாசிகாட்டவருவர் போலும்.

நண்பர் ஸ்ரீ தேவநாதாசாரியர் 'அங்கு ஏன் அப்படி வந்தது? இங்கு ஏன் இப்படி வந்தது?' என்று சில கேள்விகள் கேட்டிருக்கிறார். இவை யுக்தமான கேள்வியாகத் தோன்றவில்லை. வேத புருஷனுடைய ஸ்வாதந்திரியத்தை யாரும் இல்லை செய்ய முடியாது. [illegible], தேவேபி:, [illegible], ஹிரண்மயேந, [illegible], [illegible]=இத்யாதி ஸ்தலங்களில் கேள்வி கேட்பதுண்டோ?

நாம் நம்முடைய [illegible]—[illegible] [illegible]ங்களில் பலபல கேள்விகள் கேட்டுக் கொண்டு வித்வான்கள் உகக்கத்தக்க ஸமாதானங்களை எழுதி வெளியிட்டுள்ளோம். நமது நண்பரும் கடாக்ஷித்து உகந்திருக்கிறார். நாம் கேட்கும் கேள்விகள் இப்படிப்பட்டவையல்ல. பின்னை எப்படிப்பட்டவை யென்பதை வைதிகவுலகுக்கு நினைவூட்டுகிறோம்.

(2-5.) * [illegible] வாகத்தில் * [illegible] — [illegible] — [illegible] * என்னுமிடங்களில் [illegible] என்று [illegible] மாக இருக்கச் செய்தேயும். (அதே ஸ்தலத்தில்) * [illegible]. [illegible] ....* இத்யாதியிடங்களில் ([illegible]) என்று [illegible] ஏற்பட்டது ஏன்? (2-2.) * [illegible] என்றவிடத்தில் [illegible] ([illegible]) என்று [illegible] மாயிருக்க, விசேஷணத்தை ([illegible]) என்று [illegible] மாகப் பிரித்தோத என்ன காரணம்? ([illegible]) என்கிற பதம் ([illegible]) என்றவிடத்தில் [illegible] மாயும். * [illegible] * முதலான விடங்களில் வேறுவிதமாக வருவதற்கும் என்ன காரணம்?

(அழைத்தார்கள்) என்னும் பொருளையுடைத்தான ([illegible]) என்பது (2 6ல்) * [illegible] * என்று [illegible] மாகவும், (6-4) * [illegible] * என்றவிடத்தில் இரண்டு பதங்களாக வருவதற்கும் என்ன காரணம்? (7 4.) [illegible] வாகத்தில் * [illegible] * என்றவிடத்தில் * [illegible] க்குமாருக [illegible] ([illegible]) இருக்கச்செய்தேயும் [illegible] யை ஸ்வரிதமாக வருவதற்கு என்ன காரணம்? (7-2) [illegible] இத்யாதி யிடங்களிலும் இக்கேள்வியொக்கும்.

(உபஸம்ஹாரம்) இக்கேள்விகளுக்கும் இவைபோன்ற மற்றும் பல நூற்றுக் கணக்கான கேள்விகளுக்கும் நமது ஸர்வஸ்வாதி நூல்களில் விரிவான விடையுள்ளது. அவற்றைத் தவிர்த்து வேறுவிடைகளைச் சொல்ல வல்லாருளரோ?

வேதமோதினவர்களுக்கு விஜ்ஞாபநம்

இக்காலத்தில் வேதாத்யயனமென்பது மிகவும் அரிதாய்விட்டது. ஸம்ஸ்க்ருதபாஷையில் பரிபூர்ணஜ்ஞானம் பெற்று விசேஷசக்தியுங்கொண்ட [illegible] களைக் காண்பது மிகமிக அரிதாகவுள்ளது. ஆனாலும் அப்படிப்பட்ட சில [illegible] விசேஷங்களைக் கண்டுகளிக்கிறோம். ஸ்ரீ தேவநாதாசாரியர் [illegible] களுக்கு [illegible] கள் ஏன் ஏற்படவில்லையென்றும், ஏற்பட்டிருந்து லோபித்துப் போய்விட்டதா? என்றும் கேட்கிறார். இதற்கு யாரால் விடை கூறமுடியும்? இதுகாறும் இத்தகைய கேள்வி தோன்றினதாகத் தெரியவில்லை. "[illegible] களுக்கும் [illegible] நங்கள் ஏற்பட்டிருந்ததுண்டு. அவை லோபித்துப்போய்விட்டன" என்று சிலர் சொல்லுவதாக வைத்துக்கொள்வோம். இதை நம்புவதற்கு ஒரு பிரமாணம் வேண்டுமே. அது நிற்க. பரிபூர்ண ஸம்ஸ்க்ருதஜ்ஞானத்துடன் வேதமோதினவர்கள் லோகோபகாரார்த்தமாக முக்கியமாய்ச் செய்யவேண்டிய காரியமென்னவென்றால், வேதத்தில் உள்ள [illegible] பதங்களையும் [illegible] பதங்களையும் ஒன்றுவிடாமல் எடுத்துக்கொண்டு ஆராய்ச்சி செய்யவேணும். ஒன்றுவிடாமல் என்றால் [illegible], [illegible], [illegible], [illegible] — இத்யாதி பதங்களையும் எடுத்துக்கொண்டு ஆராய்ச்சி செய்யவேணுமென்றபடியன்று. அவசியம் ஆராய்ச்சி செய்தேயாகவேண்டிய [illegible] பதங்களும் [illegible] பதங்களும் [illegible] ம் இருப்பதாக எமது நினைவு.

முதன் முதலான *உஷேத்வாநுவாகத்தில் *சவிபா ஷெஹாமி* என்றவிடத்தில் சவிபா: என்று விசேஷணமாக வசிவாம். இது விசேஷணமல்லாமல் ஏனிருக்கக்கூடாது? விசேஷணந்தானென்று எதுகொண்டு நிர்ணயிப்பது? என்று கேட்டால் த்ருப்திகரமாக விடை யளிக்கவேணும். அவ்விடத்திலேயே *ஊஜ வூதீ: வயவூதீ: ஹெஜாவதீ: என்னும் பதங்கள் த்விதீயாந்தபதங்களாகக் காண்கின்றன. ஆனால் அங்கு த்விதீயா விபக்திக்கு ஸமந்வயம் இருப்பதாகத் தெரியவில்லையே! என்றால் இதற்கும் விடை கூறவேணும். ஊஜஸ்வதீ:, வயஸ்வதீ:, ஹெஜாவதீ: என்றிருக்கவேண்டுமிடத்து மாஜஸவதீத்யயங்கள் என்னவேணும் இப்படி உறுதியாகச் சொல்வதற்கு அவ்விடத்தில் சிறிது ஸம்வயஸாமோ அநமும் வேண்டியிருக்கும்.

இங்ஙனே ஸாஸ்ஜபதங்களிற்போல திஜந்தபதங்களிலும் ஆராய்ச்சி செய்யவேண்டியதுண்டு. அதில்தான் விசேஷமாகச் செய்யவேண்டியிருப்பதாக அடியேனுடைய உறுதி. ஸம்ஹிதையிலுள்ள திஜந்தபதங்களை அடியேன் ஆராய்ச்சி செய்யப் புகுந்தபோது பத்துவகையான பேதங்களைக் கண்டேன். அவற்றை இங்கு விவரிக்கிறேன். 1 உபஸர்கஸம்பந்தமில்லாத ஸர்வாநுதாத்த திஙந்தபதம். *இஷேத்வாநுவாகத்தில் ஓ. ஸமஸத. ஹாூத. வாஹி இத்யாதிகள். 2. தனிப்பட்ட பதமான ஒரு உபஸர்கத்தோடு கூடின ஸர்வாநுதாத்த திஙந்தபதம். [ஸூவதயத வூவஹாயூ?] 3. தனிப் பதங்களான இரண்டு உபஸர்கங்களோடு கூடின ஸர்வாநுதாத்த திஙந்தபதம் *உவவூயாதஷிஹாமி* *ஸஂவூஅஜவெடி* இத்யாதி. 4 தனிப் பதமான மூன்று உபஸர்கங்களோடு கூடின ஸர்வாநுதாத்ததிஙந்தபதம் [*அநுஸம் வூயாதாமெ*] இத்யாதி. 5. ஸமாஸமடைந்த இரு உபஸர்கங்களோடு கூடின நிஹத திஙந்தபதம். [*உவாவரொஹ* வூஅஷெ* இத்யாதி] 6 ஸமாஸமடைந்த மூன்று உபஸர்கங்களோடு கூடின நிஹததிஙந்தபதம் [*சவொமஹெ ஸஹிவூஹாஸ்தி.] 7. உபஸர்கஸம்பந்தமில்லாத ஸொதாத்த திஙந்தபதம். [*மாஸுவம் ஷெவூாய.* 8. தனிப் பதமான ஒரு உபஸர்கத்தோடு கூடின ஸொதாத்த திஙந்தபதம் [*யகிஹி: வூாயஅஜ* ஸமஸம்ஹவஸாஸாய வூாயஅஜ॥* 9 ஒரு உபஸர்கத்தோடு ஸமாஸமடைந்த ஸொதாத்த திஙந்தபதம் [*யயா ஹாஸவந உவெவஹூாமி*] 10. ஸமாஸமடைந்த இரண்டு உபஸர்கங்களோடு கூடின ஸொதாத்த திஙந்தபதம். [*ஈஜிஹி: வயஸ்ஹவதஹெதஜ* யகிவயஸவதஷயெஜ*

ஆக திஙந்தபதங்களில் இத்தனை பிரிவுகள் செய்யவேண்டியிருக்கின்றன. இவ்வளவேயல்ல. இவ்விடங்களில் தெரிவிக்கவேண்டிய விஷயங்கள் பலபலவுள்ளன. அடியேனுடைய ஸவஹவூஷி நூல்களில் தெரிவிக்கப்பட்டேயிருக்கின்றன (உவாமா:) என்ற திஙந்த பதத்தில் "உவாமாஸிதஹவ — சமா: என்று சொன்னாலென்ன? (கூமா:) என்று ஏன் சொல்லவேணும்? என்று கேட்டுக்கொண்டு அதற்கு விடையிறுக்கும் வியாஜத்தினால் பலவகைப்பட்ட விமர்சங்களைச் செய்திருக்கிறேன். அடுத்தவிஷயம் *தஸ்வஹாஸவிர வூஜாவதெ ஸஹூணா வெஸ்ராஸூவி 'சவ ஊ வெஸஹாவி"*

(தொடரும்)

ப்ரவசந விசேஷங்கள்

சென்னையில் வாழும் ஸ்ரீமதுபயவே. வாகம்ருதவர்ஷி. வா தாசார்யஸ்வாமி களைக்கொண்டு திருவரங்கம் பெரியகோயிலில் மணவாளமாமுனிகள் ஸன்னிதி யில் காலவேளைகளில் பகவத்விஷய ப்ரவசனமும் மாலை வேளைகளில் தெற்குச் சித்திரைவீதியில் ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ர நாம–பகவத் குணதர்ப்பணப்ரவசனமும் ஏறக்குறைய ஒருமாதகாலம் ஸ்ரீ உ. வே. புத்தூர் அட்வகேட் S. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி செய்வித்தது கேட்டுமகிழ்கிறேம்.

ஸ்ரீமதுபயவே. திருமலை அனந்தாண்பிள்ளை. உபயவேதாந்த வியாகரண வித்வான் சதாபிஷேகம். கோவிந்தநரஸிம்ஹாசாரியர் ஸ்வாமிகள் பாண்டிச்சேரியி லும் ஈரோடிலும் மாதந்தோறும் நியதமாக பகவத்விஷயப்ரவசனம் செய்து வரு வதும் ஸந்தோஷகரமானது. வருஷபகவானுடைய வ்ருஷ்டி மிகவும் குறைந்து போன குறைதீர இத்தகைய ஸ்ரீஸூக்த்யம்ருத வர்ஷங்கள் ஆங்காங்கு ஏற்பட வேணும்.

(பத்ராதிபர்.)

வைகாசித் திருநாள்

ஏற்கனவே நாம் குறிப்பிட்டிருந்தபடி தேவப்பெருமாளுடைய வைகாசித் திருநாளும் நம்மாழ்வார் உத்ஸவமும் சிறப்பாகவே நடந்து முடிந்தன. வருண பகவானுடைய உபேக்ஷை மிகமிக வருந்தத்தக்கதாகவே உள்ளது. புத்தூர் ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சந பத்ரிகையில் இதுபற்றி எழுதியிருந்ததைப் பார்த்திருப் பீர்கள். திருவல்லிக்கேணியில் ஸ்ரீபார்த்தஸாரதி ஸன்னிதியில் அத்யாபக ஸ்வா மிகள் பலர் கூடி திருவாய்மொழியில் 'ஆழியெழ என்கிற பதிகம் ஸேவிப்பதும் ஸுதர்சந சதக பாராயணம் நடப்பதும் நிகழ்கின்றது. இன்னும் சிற்சிலவிடங் களில் சில அநுஷ்டான விசேஷங்கள் நடந்து வருகிறதாகக் கேள்விப்படுகிறேம். குறளாசிரியர், "தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம், வானம்வழங்கா தெனின்" என்றதை நினைக்கிறேம்

பகவத் விஷயப் பதிப்பு

நமது பத்ராதிப ஸ்வாமிகள் நடத்திவரும் பகவத் விஷயப் பதிப்பில் ஒன் றிரண்டு பத்துக்கள் கொண்ட முதல் ஸம்புடம் பங்குனி மாதத்தில் வெளிவந்தது. மூன்றுநான்கு பத்துக்கள் கொண்ட இரண்டாவது ஸம்புடம் நேற்று வைகாசி மாதத்தில் வெளிவந்திருக்கிறது. திருக்கார்த்திகைக்குள் மேல் ஸம்புடங்கள் முடிவு பெற்று வெளிவந்துவிடும். தனித்தனி ஸம்புடங்கள் விற்பனை செய்யப் படமாட்டா. ப்ரமாணத்திரட்டு ஸம்புடம் உட்பட ஆறுஸம்புடங்களுக்கு விலை 100 ரூபாய். அந்தத் தொகை செலுத்துகிறவர்களுக்கே அப்போதப்போது ஸம்புடங்கள் கிடைக்கும். சிலர் ஏற்கனவே முன்பணமாக ரூ 30 செலுத்தியிருக் கிறார்கள். அவர்களுக்கு முதல் ஸம்புடம் அனுப்பப்பட்டுவிட்டது. அன்னவர்கள் மீதித்தொகையான எழுபது ரூபாய் அனுப்பவேண்டும்.

P. B. அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளின் நூல் துறைகள்.

1. நாலாயிர திவ்யப்பிரபந்த வுரைகள்,
2. பூர்வாசார்ய தமிழ்ப்பிரபந்த ,,
3. ஸகல பூர்வாசார்ய ஸ்தோத்ர ,,
4. ஆழ்வாராசார்யப் ப்ரபாவ நூல்கள்,
5. இதிஹாஸ புராண சரித்திர ,,
6. ரஹஸ்யார்த்த விளக்க ,,
7. வேதாந்தப் பொருள் விளக்க ,,
8. ஸத்ஸம்ப்ரதாயார்த்த விளக்க ,,
9. வேதவிசாரலக்ஷண நூல்கள்.
10. லோகாபிராம உபன்யாஸ நூல்கள்
11. பரபக்ஷப்ரதிக்ஷேப நூல்கள்
12 உபந்யாஸக ஸௌபாக்ய வெளியீடு
13. வடமொழி நூல் திரள்கள்,
14. ஹிந்தீ பாஷையில் நூல்கள்
15. தெலுங்கு பாஷையில் ,,
16. பூர்வாசார்ய க்ரந்த வெளியீடுகள்

விரிவான கியாடலாகுகள் தருவித்து விவரங்காண்க.

சந்தாப்பணம் M. O. செய்பவர்கள்

Editor, GRANTHAMALA, Kancheepuram-631503

என்ற விலாசத்திற்கு அனுப்புக.

If un-delivered please return to :

P. B. ANNANGARACHARYA,

KANCHIPURAM Pin Code-631503

To

Sriman / Srimathi

85 Sri K. P. Ramanuja Iyengar,
"Ramanuja Vilas",
3/2 Neeli Veerasami Chetty St.,
Triplicane, Madras-5.

Edited and Published by P. B. Annangaracharya Swami
for Madras Sathgrantha Prakasana Sabba.
Printed by T. A. P. Srinivasavaradan at Sri Venkateswara Press,
Sannidhi Street, Kancheepuram-631503.